
இதழ் 204

# மண்

ஜேர்மனி / 2020
கார்த்திகை - மார்கழி / Nov - Dec



உலகைக்கவர்ந்த பாடகர்
S.P. பாலசுப்ரமணியம்
தோற்றம்: 04.06.1942 மறைவு: 25.09.2020



ஜோ பைடன்
(Joe Biden)



கமலாதேவி ஹரிஸ்
(Kamala Devi Harris)

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியும் உப ஜனாதிபதியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் தம்பையா மார்க்கண்டு பி.ஏ (சிறப்பு)
தோற்றம் 09.07.1940 - மறைவு 09.08.2020
முன்னாள் அரசாங்க அதிபர் வவுனியா மாவட்டம்
வடக்கு - கிழக்கு மாகாண காணி, விவசாய, கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன அமைச்சின் முன்னாள் செயலாளர்

திரு எஸ் ரி மார்க்கண்டு என்று அழைக்கப்பட்ட இலங்கை நிர்வாகசேவையின் உயர் அதிகாரியாகக் நீண்டகாலங்கள் கடமைபுரிந்து ஓய்வுபெற்று லண்டனில் வசித்துவந்த வேளையில் அண்மையில் அமரராகிய செய்தி என் மனதைப் பாதித்தது. தாய்நாட்டில் அவரோடு பழகியது மட்டுமல்லாமல் புலம்பெயர் நாட்டிலும் என்னோடு அன்பாகவும் ஆதரவாகவும் நட்பாகவும் ஆலோசகராகவும் மிகநீண்டகாலம் வாழ்ந்தவர் காலமான செய்தி கேட்டு கவலைகொண்டு, அவர்பற்றிய சிறு குறிப்பை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

பிரதேச காரியாதிகாரி (டி.ஆர்.ஓ) (DRO) இலங்கையில் முந்திய காலத்தில்தான் (காரியாதிகாரி) டி.ஆர்.ஓ (DRO / Divisional Revenue Officer) என்று அழைக்கப்பட்ட பிரதேச காரியாதிகாரி முறை இருந்தது. இந்த டி ஆர் ஓவாகத்தான் திரு தம்பிமுத்து மார்க்கண்டு அவர்கள் அரசால் நியமனம் பெற்று 1970 ம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் பிரதேசத்திற்கு நியமனம்பெற்றார். இவர் ஒரு பட்டதாரி. அரச நிர்வாக சேவைப் பரீட்சையில் (C.A.S) Ceylon Administation Service (தற்போது S.L.A.S என்று அழைக்கப்படுகின்றது) சித்திபெற்று முதல் நியமனம் கிடைக்கின்றது.

துடிப்பான இளைஞர், அழகான இளைஞர், மண் பற்றுக் கொண்டவர், கடமையில் கண்ணியமானவர். தமிழ் மொழி பற்றுக்கொண்டவர். மொழி ஆர்வலர். அப்போது துணுக்காய், வவுனிக்குளம், பாண்டியன்குளம் பிரதேசங்கள் யாழ்ப்பாணம் மன்னார் கச்சேரிகளின் ஆளுமைக்குள் இருந்தன. சட்டம், நிர்வாகம் ,ஒழுங்கு, நீதி, அமைதி நிலைநாட்டவேண்டிய பொறுப்புக்கள் யாவும் இவர் கையிலேயே இருந்தன. இந்தப்பிரதேசத்தில் வன்னியை நிரந்தரமாகக்கொண்டு பிறந்து வளர்ந்த மக்கள், யாழ் மாவட்டத்திலிருந்தும் பல கிராமங்களிலிருந்து குடியேறிய மக்கள் எனவும் குறிப்பாகத் தீவுப்பகுதிகளின் மக்களே கூடுதலாகக் குடியேறி வாழ்ந்து வந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்...50ம் பக்கத்தில்...

# உள்ளே


- எங்கள் கருத்து
- சிறுவர்வட்டம்
- சிறுவர்போட்டிகள்
- குறளும் பொருளும்
- கவிச்சோலை
- இலக்கியச் சாரல்
- சிறுகதை, கட்டுரை
- குறுக்கெழுத்துப்போட்டி
- சுகாதாரக்குறிப்புகள்
- கொரோனா செய்திகள்
- செய்திக்கண்ணோட்டம்
- ஆதரவற்றோர் உதவி நிதி



| | |
|---|---|
| முகவரி: | V. Sivarajah<br>Am Windhoevel 18a<br>47249 Duisburg<br>Germany |
| தொலைபேசி: | 0203/8073898 |
| தொலைநகல்: | 0203/8073898 |
| மின்னஞ்சல்: | v.sivarajah@arcor.de |
| வங்கிவிபரம்: | Mann (Erde) Verein e.V. Duisburg<br>Stadtsparkasse Duisburg<br>Kontonummer: 225 000 421<br>Bankleitzahl: 350 500 00<br>IBAN-Nr.: DE41 3505 0000 0225 0004 21<br>SWIFT-BIC: DUISDE33XXX |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் கருத்து...

இன்று கோரோனா கோரப்பிடியில் சிக்குண்டிருக்கும் உலகம் திசைதெரியாமல் தத்தளித்துக்கொண்டிருக்கிறது. பல வழிகளிலும் திணறும் உலக மக்கள் அடுத்தநாள் வரை உயர்வாழ்வோமா?..என்ற ஏக்கத்துடனே நாட்களை நகர்த்த வேண்டியுள்ளது. இதற்கிடையில் சுகாதாரம் , உணவு, உடை, வாழ்விடம், கல்வி, தொழில் என ஏகப்பட்ட பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்து வாழவேண்டியுள்ளது. வாழ்வில் சுகம், சந்தோச வாழ்வு இல்லாமல் ஒரு விரக்திநிலையிலேயே வாழவேண்டியிருக்கின்றது. இந்த நிலமை இன்னும் எத்தனை?.. நாட்களுக்கு நீடிக்கும் என்பது இந்தப் பூமியில் ஒருவருக்கும் தெரியாத விடையமாகும்.

அனைத்துது சந்தோச வாழ்வைப் பறிகொடுத்துவிட்டு ஏக்கம் நிறைந்த வாழ்வாக மாற்றும் கண்ட இந்த உலகத்தில் வளரும் சந்ததிகள்கூட சந்தோச வாழ்வைப் பறிகொடுத்து, நிலைதடுமாறி நிற்கின்றனர். நாம் வழிபட்ட எல்லா மதங்களும் கடவுள்களும் நம்மைக் கைவிட்ட ஒரு தோற்றப்பாடே இந்த உலகத்தில் இப்பொழுது இருந்து வருகின்றது.

கொரோனா பெருந்தொற்று முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட பின்னர் எதிர்காலத்தில் உருவாகப் போகின்ற பாரிய பிரச்சினையாக உணவுப் பற்றாக்குறையே இருக்கப் போகின்றது என்பதுதான் சர்வதேச நிபுணர்களின் கருத்தாக உள்ளது. உலக வரலாற்றில் அவ்வப்போது இவ்வாறுதான் பெருந்தொற்று நோய்கள் மனித குலத்தை தாக்கியிருக்கின்றன. ஆனால் மனித இனம் தனது அறிவியல் வளர்ச்சி காரணமாக அத்தகைய சவால்களையெல்லாம் முறியடித்து வந்துள்ளது. அதே போன்றுதான் இன்றைய கொரோனா பெருந்தொற்று சவாலையும் உலகம் வெற்றி கொண்டு விடும் என்பதே நம்பிக்கையாகும்.

இற்றைக்கு நூறு வருடங்களுக்கு முற்பட்ட காலத்தில் கொவிட்19 ஐ விட மோசமான "ஸ்பெயின் ஃபுளு" என்ற மிகக் கொடிய வைரஸ் தொற்றுக்கு உலகின் பெருமளவான நாடுகள் இலக்காகின.. மில்லியன்கணக்கில் மக்கள் மடிந்ததாக உலக வரலாறு கூறுகின்றது. இந்தத்தொற்று முழுமையான கட்டுப்பாட்டுக்குள் வந்த பின்னர் உலகம் மோசமான உணவு நெருக்கடியை எதிர்கொண்டது. கடந்த கால அனுபவங்களைப் பெற்றுக் கொண்டு எதிர்காலத்தை அவதானத்துடன் திட்டமிட்டுக் கொள்ள வரலாற்று நிகழ்வுகள் எமக்கு உதவுகின்றன.

கொரோனாவுக்குப் பின்னர் உருவெடுக்கவிருக்கும் உணவுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றாக்குறையையும் உலக நாடுகள் ஒவ்வொன்றும் இவ்வாறுதான் திட்டமிடலுடன் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. உணவு உற்பத்தியில் ஒருபோதுமே அசிரத்தையுடன் இருந்து விட முடியாது. இல்லையேல் உணவுப் பஞ்சத்தினால் ஏற்படப் போகின்ற நெருக்கடி தவிர்க்க முடியாததாகி விடும்.

எமது நாடும் இதற்கு விதிவிலக்கல்ல. இலங்கையும் உணவு உற்பத்தியில் இப்போதிருந்தே உரிய கவனம் செலுத்த வேண்டியுள்ளது. கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தலுக்கு மத்தியிலும், உணவு உற்பத்தி நடவடிக்கைகளில் விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டிய தேவை இன்றுள்ளது. விவசாயிகளே நாட்டின் முதுகெலும்பு ஆவர் என்பதை ஒருபோதும் மறந்து விடலாகாது.

இலங்கை பண்டைக் காலம் தொட்டு உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்று விளங்கிய நாடாகும். பண்டைய மன்னர்கள் விவசாயத்தை முதன்மைப்படுத்தி நிர்மாணித்த பாரிய நீர்ப்பாசனக் குளங்களையே இன்றும் நாம் நம்பியிருக்கின்றோம். அன்றைய காலத்தில் விவசாயிகளே எங்கும் மேன்மைப்படுத்தப்பட்டனர். அவர்களே செல்வந்தர்களாகவும் விளங்கினர்.

ஆனால் காலப்போக்கில் வியாபார மாபியாக்கள், முதலாளிமார், சுரண்டல் பேர்வழிகளிடம் சிக்கினர். விவசாயிகள் தங்களது உணவு உற்பத்திகளை நியாயமான விலையில் விற்பனை செய்ய முடியாத நிலைமை உருவானது. விவசாயிகளிடமிருந்து மிகக் குறைந்த விலையில் உற்பத்திகளை கொள்வனவு செய்கின்ற வியாபாரிகள் பெரும் செல்வந்தர்களாக வளர்ந்தனர். ஆனால் மிகச் சிரமத்துடன் முதலீடு செய்து பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளோ என்றும் வறுமையில் வாடும் நிலைமை இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. நாட்டுக்கே உணவு அளிக்கின்ற விவசாயிகள் வறுமையில் வாடுவதும், அவர்களிடமிருந்து உணவுற்பத்தியை கொள்வனவு செய்து விற்பனை செய்கின்ற வியாபாரிகள் செல்வந்தர்களாக வாழ்வதும் நியாயம் அல்ல. விவசாயிகளுக்குமானிய உதவிகளை வழங்குவதுடன் உணவு உற்பத்தியை ஊக்குவிப்பதனால்தான் அவர்கள் நன்மை அடைவார்கள். விவசாயிகள் தங்களது உற்பத்திப் பொருட்களை நியாயமான விலையில் விற்பனை செய்கின்ற நிலைமை ஏற்படுகின்ற போதுதான் அவர்கள் முழுமையான பயனை அடைய முடியும். அரசானது இவ்விடயத்தில் முழுமையான கரிசனை செலுத்த வேண்டியது அவசியமாகும். இன்றைய கொரோனா நெருக்கடி தீர்ந்த பின்னர் விவசாயிகளிலேயே உலகம் தங்கியிருக்க வேண்டியுள்ளதென்பதை மறந்து விடலாகாது!.. ஆசிரியர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திசூடி விளக்கம்!...




## வீடுபெறநில்...

வீடு என்றதும் சாதரணமாக நீங்கள் நினைப்பது என்ன?.. நாம் குடியிருக்கும் வீட்டைப் பற்றித்தான். இல்லையா?.. ஆனால் வீடு என்பதற்கு முக்தி, மோட்சம் என்றும் ஒரு பொருள் உண்டு. வீடு பெறுதல் என்றால் முக்தி பெறுதல் அதாவது ஆண்டவனின் பாதார விந்தங்களை அடைதல் என்று அர்த்தம். கடவுளைச் சென்றடைய, மோட்சம் பெற, முக்தி அடைய என்ன செய்வது?.. நல்நடத்தை, நல்வாழ்வைக் கடைப்பிடிக்க வேண்டும்.நல்லொழுக்கமும் கடவுள் வழிபாடும் முக்திபெறச் செய்யும் வழிகளாகும். மனிதப் பிறவி எடுத்ததன் பயன், குறிக்கோள் முக்தி பெறுவதுதான். இவ்வுலகில் எல்லோரும் போற்றும்படி ஒழுக்கமுள்ள வாழ்வு வாழ வேண்டும். அதன் பிறகு மோட்சத்தை, முக்தியைப் பெற, வீடு பேறடைய, ஆண்டவனையும் இடைவிடாது வழிபட வேண்டும்.

## உத்தமனாய் இரு...

நல்லவன் உத்தமன் என்று பாராட்டுப் பெறும்படி வாழ்வது எப்படி?.. பிறரிடம் அன்பு காட்ட வேண்டும். ஏழை எளியவர்களிடம் இரக்கம் கொள்ள வேண்டும். இனிமையாகப் பேசவேண்டும். பெரியவர்களிடம் பணிவாக நடந்துகொள்ள வேண்டும். இவை அனைத்தும் ஒருவனிடம் இருக்க வேண்டிய நல்ல குணங்களாகும். சிடு சிடு என்று சீறி விழுதல், கடுங்சொல் பேசுதல், பொய்கூறுதல், கர்வத்துடன் செயற்படுதல் இவை எல்லாம் தீய குணங்கள்.. இவற்றைக் களைய வேண்டும். தீய குணங்கள் குறையக் குறைய நல்ல குணங்கள் வளரும். இப்படித் தன்னைத் திருத்திக்கொண்டு வாழும் ஒருவனைத்தான் உலகம் உத்தமன் என்கிறது. உத்தமன் என்பவன் யார்?. எண்ணம் செயல்களினால் உயர்ந்து மேம்பட்டவனாக வாழ்கிறவனே உத்தமன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாக்குண்டாம்..... (மூதுரை) (தொடர்ச்சி)

கல்லாத மாந்தர்க்கு கற்றுஉணர்ந்தார் சொல்கூற்றம்
அல்லாத மாந்தர்க்கு அறங்கூற்றம் - மெல்லிய
வாழைக்கு தான்ஈன்ற காய்கூற்றம் கூற்றமே
இல்லிற்கு இசைந்து ஒழுகாப் பெண்.

படிப்பு இல்லாதவருக்கு, தீய வழியில் செல்பவருக்கு, ஒழுக்கமில்லா மாந்தர்க்கு, இசைந்து ஒழகாப் பெண் அதவாவது இல்வாழ்க்கைக்குப் பொருந்தி அடங்கி இணங்கி நடவாத பெண் வாழ்வில் பயனற்றவர்கள். படித்தவர் பேச்சுப் படிக்காதவருக்குத் துன்பந்தரும். தருமம் பாவிகளைத் துன்புறுத்தும். பொருத்தமற்ற மனைவி கணவனுக்குத் துன்பந்தருவாள்.

சந்தன மென்குறடு தான் தேய்ந்த காலத்தும்
கந்தம் குறைபடாது ஆதலால் - தம்தம்
தனம்சிறியர் ஆயினும் தார்வேந்தர் கேட்டால்
மனம் சிறியர் ஆவரோ மற்று?.

செல்வம் குன்றிய போதும் குறையாத மனம் உடையவர் அரசர். சந்தனக்கட்டை தேய்ந்த போதிலும் வாசனை குன்றாதிருப்பது போல, அரசர்களுக்குத் துன்ப காலம் வரலாம், வறுமை வரலாம். வந்தாலும் மனம் விசாலமாகத்தான் இருக்கும். அதாவது வறுமை வந்துவிட்டதே என்பதற்காக கஞ்சத்தனமாக நடவார். பரந்த புத்தியுடனே அரசர் நடப்பார்.

மருவுஅினிய சுற்றமும் வான்பொருளும் நல்ல
உருவும் உயர்குலமும் எல்லாம் - திருமடந்தை
ஆம்போது அவளோடும் ஆகும் அவள் பிரிந்து
போம் போதும் அவளோடும் போம்.

ஒருவனைச் சூழ்ந்திருக்கிற சுற்றம், செல்வம், அழகு இவை எல்லாம் நிலையல்ல. காக்கைபோல் இருப்பவன் மன்மதத் தோற்றம் பெறுகிறான். இழிகுலத்தில் பிறந்திருப்பினும் அது மறைந்து உயர் குலத்தவன் ஆகின்றான் இவ்வளவும் எப்போது?..தேவியின் அருட்கடாட்சம் ஏற்படும் போது. அவள் பிரிந்து போகும்போது. எல்லாம் அவளோடு போய்விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் சிந்தனைக்கு...

பிரான்ஸ் நாட்டில் மிகவும் பின்தங்கிய பகுதியான "கார்லிக" என்ற தீவில் 1769ஆம் ஆண்டு பிறந்தவரே நெப்போலியன் பொனபாட். இவர் பிரெஞ்சுப் புரட்சியின் தளபதியாகக் கடமையாற்றியவர். பிரான்சுக்கு எதிரான கூட்டணிப் போர்களை வழிநடத்தியதன் மூலம் பிரான்சு அரசியலில் முன்னணிக்கு வந்தார். அதன் மூலம் 1804ம் ஆண்டு பிரான்சு நாட்டின் பேரரசராக முடிசூட்டப்பட்டார். தொடர்ச்சியான பல போர் வெற்றிகளினாலும் விரிவான கூட்டணிகளினாலும் ஐரோப்பாக் கண்டத்தையே தனது மேலாண்மைக்கு உட்படுத்தி ஆட்சிசெய்த மாபெரும் வீரனே நெப்போலியன்.

நெப்போலியன் பேரரசனாக இருந்த காலத்தில் ஒருநாள் தன்னுடைய தளபதிகளை ஒரு பெரும் விருந்திற்கு அழைத்திருந்தார். குறிப்பிட்ட நேரம் நெருங்கிவிட்டது. ஆனால் அவர்கள் யாருமே அந்த விருந்திற்கு வரவில்லை. இதனால் குறிப்பிட்ட நேரத்தில் தனியாகவே அமர்ந்து உணவை உண்ண ஆரம்பித்துவிட்டார் நெப்போலியன் பொனபாட். அவன் உணவருந்தி முடியும் தறுவாயில் தளபதிகள் ஒருவர்பின் ஒருவராக வந்துகொண்டிருந்தார்கள்.

உடனே நெப்போலியன் சாப்பாட்டு மேசையைவிட்டு எழுந்து நடந்து கொண்டே "என்னருமைத் தளபதிகளே!.. இப்பொழுது சாப்பாட்டு நேரம் முடிவடைந்துவிட்டது வாருங்கள் நாம் ஒரு நிமிடத்தைக்கூட வீணாக்காமல் காரியத்தில் ஈடுபடுவோம்" என்றான். இதைக் கேட்டுப் பதில் ஏதும் கூறமுடியாத தளபதிகள் தங்கள் வெறும் வயிற்றைத் தடவிக்கொண்டே பசியோடு "காலம் கடந்து வந்ததால் கிடைத்தபலன் இது" என்று கூறியவாறு நெப்போலியனைப் பின் தொடர்ந்தனர்.

இக்கதையின் மூலம் நாம் எக்காரியத்தையும் உரிய நேரத்தில் செய்து முடிக்க வேண்டும். இல்லையேல் பல விளைவுகளை எதிர்நோக்க வேண்டும் என்னும் உண்மையைப் புரிந்துகொள்வோம்!..

செல்வி சு அஸ்வினி
இந்து அன்பக சிறுவர் இல்லம்
வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபாவளி

உலகம் முழுவதும் பரந்துபட்டுவாழும் இந்துக்களால் கொண்டாடப்படும் முதன்மையான பண்டிகைகளில் தீபாவளியும் ஒன்றாகும். இந்துக்கள் மட்டுமன்றி சீக்கியர்கள், சமணர்கள் போன்ற வேறு பல மதத்தவர்களாலும் , கலாச்சாரம், சமயம் தழுவிய வெவ்வேறு காரணங்களால் பலவிதமாகப் பல நாடுகளில் வெவ்வேறு நாட்களில் இத்தினம் கொண்டாடப்படுகின்றது.

தீபாவளியைத் தீப ஒளித்திருநாள் அல்லது தீபத்திருநாள் என்றும் அழைப்பர். அதாவது வாழ்க்கையில் இருளைநீக்கி, ஒளியைக்கொடுக்கும் பண்டிகையாகக் கொண்டாடபபடுகின்றது. தீபாவளி என்னும் சொல் சமஸ்கிருதத்திலிருந்து தோன்றியது. தீபம் என்றால் ஒளி அல்லது விளக்கு எனப்படும். ஆவளி என்றால் வரிசையாகும்.அதனால்தான் வரிசையாய் விளக்கேற்றி இருள்நீக்கி ஒளி தரும் பண்டிகையே தீபாவளியாகும்.

அதாவது தீபங்களை ஏற்றி இல்லங்களில் இருளைப் போக்குவது போல நமது மனதிலுள்ள தீய சிந்தனைகளையும் இருளையும் நீக்கி அன்பு என்னும் விளக்கை ஏற்றி இதயத்தில் ஒளி ஏற்றி மன இருளை அகற்றவேண்டும் என்பதே தீப ஒளித்திருநாளின் விளக்கமாகும்.

இப்பண்டிகை ஐப்பசி மாதத்தில் திரயோதசி, சதுர்த்தசி அமாவாசை மற்றும் அதற்கடுத்த சுக்கிலப் பிரதமை ஆகிய நாட்களில் கொண்டாடப்படுகின்றது. பெரும்பாலான ஆண்டுகளில் தீபாவளிப் பண்டிகை ஐப்பசி மாதம் அமாவாசை தினத்தன்று கொண்டாடப்படுகின்றது. அதாவது வருடத்திற்கு வருடம் சற்று வித்தியாசமான கோணத்தில் வரும். மேலும் கிரிகொரியின் நாட்காட்டி ஐப்பசி மாதம் 17ம் திகதியிலிருந்து கார்த்திகை மாதம் 15ம் திகதிவரையான நாட்களில் தீபாவளி வருகின்றது.

இந்துக்கள் தீபாவளி கொண்டாடுவதற்குப் பல நாரணங்களை அமாவாசைக்கு முந்திய தினம் நரக சதுர்த்தசி அன்று புராணக் கதைகளின் வழியாக கூறுகின்றனர். நரகாசுரன் என்ற ஒரு அரக்கன் இருந்தான். அவன் தேவர்களுக்கும், மக்களுக்கும் பல் வேறு துன்பங்களைக் கொடுத்து வந்தான். இதை அறிந்த மகாவிஷ்ணு நரசிம்ம அவதாரம் எடுத்து அவனுடன் போரிட்டு அவனைக்கொன்று அவனது ஆட்சியில் அவதியுற்ற மக்களுக்கு விடுதலைகிடைத்த நாளே இந்தத் தீபாவளி நாளாகக் கொண்டாடப்படுகிறது என்று ஓர் கதையும் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் இறக்கும் தருணத்தில் மக்களிடம் ஓர் வரம் கேட்டுக்கொண்டான். தான் இறந்த நாளை மக்கள் பெரிய விழாவாக ஒவ்வொரு ஆண்டும் கொண்டாட வேண்டும் என்பது அவனது இறுதி ஆசையாக இருந்ததால் ஒவ்வொரு ஆண்டும் அவனது இறந்த நாளை இந்துக்கள் தீபாவளிப் பெருவிழாவாகக் கொண்டாடி வருகிறார்கள்.

நரகாசுரனை அதிகாலையில் வதம் செய்துமுடித்த கிருஸ்ணபகவானின் ஆடையில் இரத்தக்கறை படிந்திருந்ததால் எண்ணெய் தேய்த்துத் தலைமுழுகி , புத்தாடை அணிந்தார். தீபாவளி அன்று அனைவரும் அதிகாலையில் எழுந்து இல்லங்களையும் சுற்றாடலையும் துப்பரவுபடுத்தி, தூய்மையாக்கி அலங்கரிப்பர். பின்பு எண்ணெய் தேய்த்துக் குளித்துப் பாரம்பரிய புத்தாடைகளை அணிந்து கோவிலுக்குச் செல்வார்கள்.

பெரியோரை வணங்கி ஆசி பெறுவார்கள். பின்னர் உறவினர்கள் நண்பர்கள் அயலவர்கள் என அனைவரும் ஒன்றுகூடி இனிப்புகள் பலகாரங்கள் பரிமாறி விருந்துண்டு மகிழ்வார்கள். உறவுகளுடன் ஒன்றுகூடிப் பரிசுப் பொருட்களைப் பரிமாறி ஒவ்வொருவர் வீடுகளுக்கும் சென்றுவருவார்கள். பிற்பகலில் அனைவரும் ஒன்று சேர்ந்து பாரம்பரிய விளையாட்டுகள், போட்டிகள் நடாத்தி மகிழ்வார்கள். மாலையில் வீடுகளை விளக்குகளால் அலங்கரித்து ஒளி ஏற்றுவார்கள். மத்தாப்பு பட்டாசுகளும் வெடிக்க வைத்து மகிழ்வார்கள்.

ஆண்டு முழுவதும் பல பண்டிகைகள் வந்தாலும் ஏழை-பணக்காரர் என்ற பாகுபாடு இல்லாமல் எல்லோரும் எண்ணெய்தேய்த்து நீராடி புத்தாடை அணிந்து தீபம் ஏற்றிக் கொண்டாடப்படுவது அவசியம் என்று புராணமே கூறுவது தீபாவளியின் தனிச்சிறப்பாகும். நலமும் வளமும் வந்துசேரும் தீபத்திருநாள் வாழ்க்கையின் இருளை நீக்கி ஒளியைக் கொடுக்கும் பண்டிகையாக அமைகின்றது.

தீபங்கள் ஏற்றி வீட்டிலுள்ள இருளைப் போக்குவது மட்டுமன்றி எங்கள் மனதிலுள்ள இருளைப்போக்க இறைவனைத் துதித்து இந்நாளை இனியநாளாக கொண்டாடுவதே இப்பண்டிகையின் புனிதமாகும். தற்பொழுது தீபாவளி பல்லினப்பண்பாட்டின் கொண்டாட்டங்களில் ஒன்றாக மருவிவருகின்றது. நாம் அனைவரும் இத்தினத்தில் இறைவனை வணங்கி இறையருள் பெற்று மகிழ்வோம். மண் சஞ்சிகையின் அனைத்து வாசகர்களுக்கும் எனது தீபாவளி வாழ்த்துகள்!....

செல்வி சாமினா சிவதாசன்
Essen – Germany



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்து நல்லூர் தவத்திரு ஆறுமுக நாவலர்...

(செல்வி வேதிகா)

தமிழ் சைவம் இரண்டும் என் இரு கண்கள் அவ்விரண்டும் ஒளி குன்றாமல் இறுதிவரை காத்துப் பயன் கொள்வதே என் கடன் அவை வாழப் பணி புரிவதே என் வாழ்வின் குறிக்கோள்', என வாழ்ந்தவர் தவத்திரு ஆறுமுக நாவலரவர்கள். அவர் ஸ்ரீலங்கா யாழ்ப்பாணம் நல்லூரில் கந்தருக்கும், சிவகாமிக்கும் 1822 டிசம்பர் 12ல் (சித்திரபானு மார்கழி 5) தோன்றியவர்.

அவர் தமிழ் இலக்கிய இலக்கணச் சித்தர் சாத்திரங்கள், சிவாகமங்கள் கற்றவர் ஆங்கிலத்திலும் சமஸ்கிருதத்திலும் வல்லவர் சிவனடியை மறவாத சிந்தனையாளர் உரைநடை கைவந்த வல்லாளர் நல்லாசிரியர் நூலாசிரியர் உரையாசிரியர் பதிப்பாசிரியர் சொல்லின் செல்வர் தனக்கென வாழாத் தகைமையாளர் தவக்கோலச்சீலர் இல்லறம் ஏற்காது நற்பணி செய்தவர்.

அவர் இயற்றிய நூல்கள்: 23 உரை செய்தவை: 8 பரிசோதித்துப் பதிப்பித்தவை: 39 யாத்த பாடல்கள்:14. நூலுக்குச் சிறந்த மொழிப்பெயர்ப்பு செய்தது, திருக்குறள் பரிமேலழகர் உரையை முதலில் பதிப்பித்தது, பெரிய புராண வசனம் எழுதியது அவருடைய பெருமைக்குச் சான்றுபகர்வன. அவர் இயற்றிய சைவ வினா விடை, பாலபாடம் இன்றும் போற்றப் படுபவையாகும்.

யாழ்ப்பாணத்திலும், சிதம்பரத்தில் மேலவீதியில், சைவப்பிரகாச வித்தியாசாலை (1864) (தற்போது மேல்நிலைப்பள்ளி) சென்னையில் வித்தியானுபாலன அச்சியந்திர சாலை (1860) ஆகியவற்றை நிறுவியவர். சிதம்பரம் ஞானப்பிரகாசர் திருக்குளம் வடகரையில், அவருடைய விருப்பப்படி, சேக்கிழார் கோயில் நிறுவப்பட்டது (1890).திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் அவர்களால் 'நாவலர்' பட்டம் பெற்றவர் (1865).

அவருடைய சமகாலச் சான்றோர்களில் சிலர் யாழ்ப்பாணத்தில் சங்கரபண்டிதர், சிவசம்புப் புலவர், ராவ்பகதூர் சி.வை.தாமோதரம் பிள்ளை, விஸ்வநாதப் பிள்ளை, பர்சிவல்துரை தமிழ்நாட்டில், சிதம்பரம்வடலூ ர் இராமலிங்க அடிகளார், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, மகாலிங்க அய்யர், இராமநாதபுரம் பொன்னுசாமிதேவர், அவருடைய மாணக்கர்களில் சிலர்: சதாசிவம் பிள்ளை (முதல் மாணாக்கர்), பொன்னம்பலம்பிள்ளை, செந்தில்நாத அய்யர், கைலாசப்பிள்ளை.1879 டிசம்பர் 5ல் (பிரமாதி கார்த்திகை 21 மகம்) சிவப்பேறு பெற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்நெறி பற்றி.........வி.நந்தகுமார்...

## ஆவேசத்தைவிட ஆலோசனை அவசியம்

ஆத்திரம் அழிவுக்கான பயணப்பாதை.
ஆத்திரம் அவனையே அடித்து அழிக்கிறது.
ஆத்திரம் அடைய அதிக நேரம் தேவையில்லை.
ஆத்திரம் அமைதியை அடைய அதிகநேரம் தேவை.
ஆணவம் நிமிர்ந்து நின்று அடி வாங்குகிறது.
ஆணவம் அகன்றால் ஆனந்தம் அமையும்.
ஆணவம், ஆடம்பரம், அர்த்தமற்ற வாழ்க்கைமுறை.
ஆணவத்தால் அழிந்துபோன அரசுகள் அதிகம்.
ஆலோசனை இல்லாத அரங்கம் ஆக்கம் பெறாது.
ஆலோசனையை அமைப்பவன் ஆனந்தம் பெறுவான்.
ஆலோசனைக்கு அறிவு அவசியம், நோய்க்கு மருந்துபோல்.
ஆலோசனையை கேட்கிறவர்களிடத்தில் ஞானம் தங்கும்.
ஆலோசனைகள் அதிகமாகும்போது, அதிக சுகங்களை அமைக்கிறோம்
ஆலோசனைகள் அறிவை வடிகட்டித்தருகிறது, அழிவுகளை அகற்றுகிறது.
ஆக்கம் பெறுவதற்காகவே அறிவு அமைக்கப்பட்டுள்ளது.
ஆராய்ந்து கூறும் அறிவுரைகள் அனைத்தையும் அள்ளி வழங்கும்.
ஆசை அனைத்து உயிர்களையும் எக்காலமும் பிறப்பிக்கும்.
ஆசையில்லாமல் வாழ்வில்லை, அது அக்கறையான வாழ்வு.
ஆசைப்படுவதைவிட பேராசைப்படுவது பெரும் ஆபத்து.
ஆசைகளை குறைக்கும்போது, அதிகமான இன்பம் பெருகுகிறது.
ஆசைப்படவும் வேண்டும், அதைத் தவறாக பயன்படுத்தவும் கூடாது.
ஆசை தவறாகப் பயன்படுத்தும்போது தவிப்படைகிறோம்.
ஆசைப்படுவது உரிமை, அளவுக்கதிகமான ஆசை உரிமையின் உதாசீனம்.
ஆசையும், கோபமும் அதிகரிக்கும்போது அழிவுகள்அதிகமாகிறது.
ஆசையின் முடிவில் திருப்தி, பூரிப்பு, சோம்பல், சோர்வு யாவும்அடங்கும்.
ஆதங்கங்கள் கனமானவை, அதை இறக்கும்போது இளைப்பாறுகிறோம்.
ஆணும் பெண்ணும் ஒத்திசையாகும்போது, முரண்பாடுகள் நீங்கும்.
ஆனந்தம் அதிகரிக்கும்போது, ஆயுளும் கூடவே விருத்தியாகிறது.
ஆண்டவன் வரப்பிரசாதத்தில் ஆனந்தமான வாழ்வு அமைகிறது.
ஆனந்தத்திற்கான நன்றியை ஆண்டவனுக்கு அனுஷ்டித்தல் அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுடோக்கோ புதிர்ப்போட்டி இலக்கம் - 22

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 1 | | | 6 | 5 | | | 7 |
| | | 6 | | | 7 | 4 | 8 | |
| 2 | | 7 | 4 | 9 | | | | 6 |
| | 6 | | | 7 | | 1 | | |
| 3 | | 1 | 5 | | | | 7 | 2 |
| | 9 | | | 4 | 2 | 3 | | 8 |
| 1 | | 8 | 6 | | | | 2 | 9 |
| | 2 | | | 1 | 8 | 6 | 4 | |
| 6 | | | 3 | | | | 1 | |

## சிறுவர் குறுக்கெழுத்துப் போட்டி 115
### (கார்த்திகை-மார்கழி 2020)

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

**இ-வ:**

01-04-கத்தோலிக்க மக்களின் பெருநாள்.

11-12-நாம் வசிக்கும் இடம்.

**வ-இ**

08-06-ஆண்கள் அணிவது.

16-13-இந்தக் குணமுடையோர் அழிவைத்தான் எதிர்கொள்ளுவார்கள்.

**கீ-மே**

08-04-மரத்தின் ஒரு பகுதி.

14-06-கணக்கில் இப்படி ஒரு கணக்கும் உண்டு.

16-12-இது ஒரு வீட்டு மிருகம்.

**மே-கீ**

01-13-தமிழர் பாரம்பரிய கலைகளில் ஒன்று.

(விடைகள் இன்னொரு பக்கத்தில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்பா.....

தாய்க்கு இதயத்தக்குள்
கோயில்
கட்டும் உலகம் - ஏனோ!
தந்தையை சில நொடிகள்
மறந்து போகின்றது............
தலைக்கணமில்லா இலக்கணம்
அவர்புரிந்த கொள்ள முடியாத
புதிரும் அவர்தான்
பிள்ளை பிறந்தது
என்றவுடன்ஸ்வீட்
எடுத்து கொண்டாடி
மகிழ்பவரும் அவர்தான்

பிள்ளை கஸ்டப்படக்கூடாது
என்பதற்காக
தான் கஸ்டப்பட்டு உழைப்பார்
காலை முதல் மாலை வரை
அதிகாரக்கண்டிப்பு
இரவிலோ அரவனைக்கும்
அன்பு மழை
தந்தையின் தாலாட்டில்
உறங்கியவர்களைவிட
வலிகளை மறந்தவர்களே
அதிகம்.
தந்தையின் அன்பு
காற்றுபோன்றது
அதைப்புரிந்து
கொண்டவர்களைவிட
பிரிந்து சென்றவர்களே
இவ்வுலகில் அதிகம்.

அப்பா என்ற வார்த்தைக்கு
அழகான ஆழமான ஆயிரம்
அர்த்தங்கள் உண்டு....

## அம்மா.....

அம்மா என்ற அந்த மூன்று
எழுத்திற்கு
ஆயிரம் அர்த்தங்கள் உண்டு
அதனைஉணர்ந்தவன் அனாதை
மட்டுமே
பத்து மாதம் சுமந்து பெற்ற தாய்
பத்து நொடி நம் தொலைவில்
இருந்தாலே
பதறிப்போகும் என் நெஞ்சுக்கு
எப்படி புரியவைப்பேன்
அம்மா உயிருடன் இல்லை
என்பதை.
பசிக்கும் போது பாலூட்டி
வளர்த்த தாய் பக்கத்தில் இல்லை
என்பது
எந்தவொரு குழந்தைக்கும்
ஏமாற்றந்தான்.

செல்வி யுசாந்தினி

இரு கவிதைகளையும் தந்த இருவரும்
தலைமன்னார் "செபமாலை" சிறுவர்
இல்லத்தைச் சேர்ந்த மாணவர்கள்..
நன்றிகள்!....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசித்திரக்கணக்கு...

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | x 8 + 1 | = | 9 |
| 12 | x 8 + 2 | = | 98 |
| 123 | x 8 + 3 | = | 987 |
| 1234 | x 8 + 4 | = | 9876 |
| 12345 | x 8 + 5 | = | 98765 |
| 123456 | x 8 + 6 | = | 987654 |
| 1234567 | x 8 + 7 | = | 9876543 |
| 12345678 | x 8 + 8 | = | 98765432 |
| 123456789 | x 8 + 9 | = | 987654321 |

இது ஒரு விசித்தரமான கணக்காகும். நீங்களும் இப்படிப்பட்ட கணக்குகளை எமக்கு அனுப்பி வைத்தால் ஏனைய வாசகர்களும் அறிந்துகொண்டு பயன்பெறுவார்கள்.

## ஆண்டுகளின் பெயரைச்சொல்லி வாழ்த்துவோம்..

1வது ஆண்டுவிழா-காகித விழா
2வது " " -பருத்தி விழா
3வது " " -தோல் விழா
4வது " " -மலர் / பழ விழா
5வது " " -மர விழா
6வது " " -சர்க்கரை/கற்கண்டுவிழா
7வது " " -கம்பளி /செம்பு விழா
8வது " " -வெண்கல விழா
9வது " " -மண்கலச விழா
10வது " " -தகர/அலுமினிய விழா
11வது " " -எஃகு விழா
12வது " " -லினன் விழா
13வது " " -பின்னல் விழா
14வது " " -தந்த விழா
15வது " " -படிக விழா
20வது " " -பீங்கான் விழா
30வது " " -முத்துவிழா
40வது ஆண்டுவிழா-மாணிக்க விழா
50வது " -பொன்விழா
60வது " -வைரவிழா
70வது " -பவளவிழா
80வது " -அமுதவிழா
100வது " -நூற்றாண்டுவிழா
1000வது " -மிலேனியம்விழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## " ட்டம் " என்று முடியும் பத்துச் சொற்கள்...

1-வருத்தம் வந்தால் - வாட்டம்
2-இரண்டு ஆரம் - விட்டம்
3-குறும்புக்காரக் குழந்தைகள் அடிப்பது - கொட்டம்
4-இலட்சியத்தை அடையத் துல்லியமாகப் போடவேண்டியது-திட்டம்
5-நீதிபதி தீர்ப்புக்கு அடிப்படையானது - சட்டம்
6-கும்பலாகக் காணப்படுவது - கூட்டம்
7-ஆர்வமுடையோர் - நாட்டம்
8-வானில் பறக்கவிடுவது - பட்டம்
9-உயர்வு எதிர்ச்சொல் - மட்டம்
10-பலவீனமானவர்களுக்கு இது அவசியம் - ஊட்டம்.

## உணர்வும் எழுத்தும்...

தமிழின் உயிர் எழுத்துக்குக் காரணம் மனிதனின் உணர்வுகளினால் ஏற்படும் ஒலிகளே!...

| உணர்வு | - எழுத்து |
|---|---|
| வலி | - அ, ஆ |
| சிரிப்பு | - இ. ஈ |
| காரம் | - உ, ஊ |
| கோபம் | - எ, ஏ |
| வெட்கம் | - ஐ |
| ஆச்சர்யம் | - ஒ, ஓ |
| வக்கணை | - ஔ |
| விக்கல் | - ஃ |

இயற்கையாக உருவான மொழி என்றால் அது தமிழாகத்தான் இருக்கமுடியும். என்பதற்கு இது ஒரு சான்றாகும்!...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு பொருள் பல சொற்கள்..

தந்தை-அப்பன், அப்பா, ஐயா, பிதா, தகப்பன், தந்தை.

தாய்-அம்மா, மாதா, தாரம், பெற்றவள், முதலானவள்.

ஆசிரியர்-உபாத்தியார், ஆசான், குரு, தேசிகன், வாத்தியார்.

வீடு-இல்லம், மனை, அகம், உறையுள், குடி.

கல்வி-வித்தை, படிப்பு, சுவை.

வயல்-கமம், மருதநிலம், புலம், பழனம், கழனி.

ஆற்றல்-வலிமை, சக்தி, உரம், திண்மை.

பறவை- பட்சி, புள்.

குதிரை-அசுவம், துரகம், புரவி, மா, பரி, அயம்.

தோழி-சகி, சிநேகிதி, நண்பி, பாங்கி,

நட்டம்-சேதம், அழிவு, கேடு.

# அறுசுவைகள்..

1-துவர்ப்பு-வாழைப்பிஞ்சு, மாதுளை, அத்திக்காய், அவரை.

2-இனிப்பு-பழங்கள், கிழங்குகள், அரிசி, கப்பு, பதநீர், பனைவெல்லம்

3-புளிப்பு-எலுமிச்சை, தக்காளி, புளி, மாங்காய், நாரத்தங்காய்.

4-காரம்-மிளகாய், மிளகு, வெங்காயம், இஞ்சி, பூண்டு,

5-கசப்பு-பாகற்காய், வெந்தயம்,வேப்பம்பூ, ஓமம், கத்தரி.

6-உவர்ப்பு-வாழைத்தண்டு,, முள்ளங்கி, பூசனிக்காய், சுரைக்காய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறளும் பொருளும்

காலம் அறிதல்: –

481. பகல்வெல்லுங் கூகையைக் காக்கை யிகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது.

482. பருவத்தோ டொட்ட வொழுக றிருவினைத்
தீராமை யார்க்குங் கயிறு.

483. அருவினை யென்ப வுளவோ கருவியாற்
கால மறிந்து செயின்.

484. ஞாலங் கருதினுங் கைகூடும் காலம்
கருதி யிடத்தாற் செயின்.

485. காலம் கருதி யிருப்பர் கலங்காது
ஞாலங் கருது பவர்.

486. ஊக்க முடையா னொடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து.

487. பொள்ளென வாங்கே புறம்வேரார் காலம்பார்த்
துள்வேர்ப்ப ரொள்ளி யவர்.

488. சேறுநரைக் காணிற் சுமக்க விறுவரை
காணிற் கிழக்காந் தலை.

489. எய்தற் கரிய தியைந்தக்கா லந்நிலையே
செய்தற் கரிய செயல்.

490. கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறளும் பொருளும் (காலத்தினை அறிந்துகொள்ளல்)

481. தன்னிலும் வலிய கோட்டானைக் காகம் பகலில் வெல்லும். (அதுபோல) பகையை வெல்ல விரும்பும் அரசருக்கும் ஏற்ற காலம் வேண்டும்.

482. காலத்தோடு பொருந்தும்படி வினை நடத்துதல் தன்னிடம் உள்ள செல்வம் நீங்காமல் நிற்கும் படிக்கட்டும் கயிறாகும்.

483. ஒரு செயலை முடிப்பதற்குரிய கருவிகளுடன் ஏற்ற காலத்தை அறிந்து செய்தால், முடியாத செயல்கள் என்று சொல்லப்படுபவையும் உண்டோ?..

484. ஒரு செயலை முடிப்பதற்கு ஏற்ற காலத்தையும், இடத்தையும் அறிந்து செய்தால், உலகமே வேண்டும் என்று நினைத்தாலும் கைகூடும்.

485. உலகத்தை அடைய நினைப்பவர் கலக்கமில்லாமல் ஏற்ற காலத்தை எண்ணிக் காத்திருப்பர்.

486. ஆட்டுக்கடா தன் பகையைத் தாக்குவதற்குத் தன் காலைப் பின் வைப்பது போல ஊக்கமுள்ளவன் காலத்தை எதிர்பார்த்து அடங்கி இருப்பான்.

487. அறிவுடையவர் பகைவர் தீங்கு செய்த பொழுதே வெளிப்படையாகச் சினம் கொள்ளார். வெல்லும் காலம் அறிந்து உள்ளத்தில் சினம் கொள்வார்.

488. பகைவரைக் காணுமிடத்து அவருக்கு இறுதிக் காலம்வரும் வரைப் பணிக, முடிவு காலம் வந்ததும் பகைவர் தலைகீழே விழும்.

489. கிடைத்தற்கு அரிய காலம் வாய்க்கும் பொழுது தவறாமல் செய்வதற்கு அரிய செயலைச் செய்ய வேண்டும்.

490. பொறுத்திருக்கும் காலத்தில் கொக்கைப்போல அமைதியாக இருக்க வேண்டும். காலம் வாய்த்த பொழுது விரைந்து செயற்படவேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசி ஆனந்தனின் சிந்தனைகள்!...



## ஒழுங்கு...

தலைமை எறும்பு கூறியது.."ஒழுங்காகச் செல்லுங்கள்" பரிசு உங்களுக்குக் காத்திருக்கிறது. ஓர் எறும்பு "என்பாட்டில் நான் போவேன்" என்று வரிசையை உடைத்துக்கொண்டு தனிவழி போனது. கொஞ்ச நேரத்தில் வரிசை குலையாமல் போன எறும்புகளெல்லாம் வாயில் அரிசியோடு திரும்பி வந்தன. ஒற்றை எறும்பின் முகம் ஒடுங்கியது. நிரை குழப்பாத எறும்புகளில் ஒன்று சொன்னது..

" வரிசை பிளப்பான்....பரிசை இழப்பான்"

## சூடு...

இரவு..புற்றிலிருந்து வெளியே வந்த ஈசல் வெளிச்சத்தைத் தன் உடலில் தூக்கிப் பறந்த மின்மினியைப் பார்த்தது. அதன் அழகைப் புற்றீசலால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. "மின்மினியைப் போல வெளிச்சத்தைத் தூக்கிப் பறக்க என்னால் முடியும்" என்று கூறிக்கொண்டே குடிசையில் எரிந்துகொண்டிருந்த குப்பி விளக்கின் வெளிச்சத்தைத் தூக்கப் போனது புற்றீசல். பாவம் ஒரு நொடியில் அது எரிந்து கருகிப் போனது. குப்பி விளக்குச் சொன்னது...

"பொறாமை எரிந்து போகும்...புற்றீசல் கரிந்து போகும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப்போட்டி-178
## (கார்த்திகை-மார்கழி -2020)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

**இ-வ**

01-04-ஔவையார் அருளிய நூல்களில் ஒன்று.
09-10-ஊட்டச்சத்துள்ள குடிபானம்.
29-33-வாழ்வியல் நூலை எழுதியவர்.
43-46-எப்போதும் முகத்தில் இது இருந்தால்தான் சிறப்பு.
47-49-காட்டு மிருகம் ஒன்று.

**வ-இ**

07-05-மார்கழி மாதம் இலங்கையிலும் வேறுசில நாடுகளிலும் இடம்பெற்ற பேரனர்த்தம்.
18-16-நவரத்தினங்களில் ஒன்று.
27-23-சூரியன் ஒத்தசொல் இங்கு குழம்பியுள்ளது.
35-33-காட்டில் வேட்டையாடும் ஒரு இனத்தவர்கள்.
41-37-பெண்களின் மங்களப் பொருள்.

**மே-கீ**

01-22-கத்தோலிக்க மக்களின் திருநாள்.
03-10-நம் நாட்டில் அதிகமாக விளையும் தானியம்.
07-28-நம்நாட்டு முதியவர்கள் புகைப்பது.
27-41-போக்குவரத்துச் சாதனங்களில் ஒன்று.
35-49-ஆண்கள் அணிவது.

**கீ-மே**

20-06-உலகையே ஆட்டிப்படைக்கும் கிருமித்தொற்று.
26-12-இலங்கையில் ஒரு நகரம்.
32-11-ஒருபோதும் நாம் இதனால் பிரச்சனைகளைத் தீர்க்கமுடியாது.
43-22-முன்னர் நம் இனத்திலும் பல இவர்கள் இருந்து தமிழ்ப்பணி செய்தார்கள்.

விடைகள் இன்னொரு பக்கத்தில்.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மார்கழி மலர்...

(ஜெயா நடேசன்)

சோலைவனத்தில் பூக்கும் பூக்களும்
உச்சி மலையிலிருந்து விழும் அருவியும்
கார்முகில்கள் மோதிச் சொரியும் மழையும்
சில் என்று விழும் பனியும் குளிர்காற்றும்
இறைமகன் பிறப்பை உணர்த்திடுமே!..

நொறுங்கிய உள்ளத்திற்கும் நோய்க்கும்
மரணப் பயத்திற்கும் ஆறுதல்தரும் தயாபரனே
இதமாய் பதமாய் சுகமாய் இவ்வுலகிற்கு
இதயமதில் இசைமீட்டு ஆறுதல் தந்து
இன்புறவரும் அன்னை மரியாயின் மகனே!..

நோய்கள் தீர இல்லங்கள் இனிமைபெற
உள்ளங்கள் உவகை கொள்ள
மாட்டுத் தொழுவமதில் மலர்ந்த மாபரனே
அவனியில் அவதரித்து பாவியை மீட்கப் பிறந்தவனே
வந்தனங்கள் கோடி தந்து வணங்கி
உம்மை வாழ்த்தி வரவேற்கிறோம்
இவ்வுலகத்தை இறைமகனே ஒருக்கால் திரும்பிப்பார்
கொரோனாத் தொற்று முற்றாக அழித்திடு பாமரனே!..

## நால்வகை நிலங்கள்...

குறிஞ்சி- மலையும் மலை சார்ந்த இடங்களும்

முல்லை - காடும் காடு சார்ந்த இடங்களும்

மருதம் - வயலும் வயல் சார்ந்த இடங்களும்

நெய்தல் - கடலும் கடல் சார்ந்த இடங்களும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழில் எழுதும் போது...

நாம் செய்யும் தவறுகள்.

1. வாழ்த்துக்கள் என்பது தவறு. "வாழ்த்துகள்" என்பதே சரி. "க்" வரக்கூடாது.

2. வாழ்க வளமுடன் என்பது தவறு."வாழ்க வளத்துடன்" என்பதேசரி.

3. "நிகழும் மங்களகரமான ஆண்டு" என்று அழைப்பிதழில் அச்சிடுவது தவறு. "மங்கலமான" என்பதே சரி. "மங்கள இசை" என்றால் ஒப்பாரி. அதாவது கடைசிப் பயணத்தின் போது இசைப்பது. "மங்கல இசை "என்றால் தொடக்கம். ( துவக்கம் என்பது தவறு ).

4. நச்சுன்னு ஒரு பாட்டு, நச்சுன்னு பேசு என்பது தவறு. நச்சு என்றால் நஞ்சு (விஷம்)(விடம்). நச்சுன்னு ஒரு பாட்டு என்றால் விஷம் போன்ற ஒரு பாட்டு என்று பொருள். நறுக்கென்று என்பதே நச்சுன்னு என்று மருவி வந்துள்ளது. நான் நறுக்கென்று சொல்லி விட்டேன். சுருக்கென்று எடுத்துக் கொள்க. விளக்கம்..... இசை நிகழ்ச்சியில் கடைசியில் பாடும் பாட்டுக்கு "மங்களம்" என்பர். கச்சேரியை முடிப்பதற்கு மங்களம் பாடு என்பர்.

5. ஒரு நூல் (புத்தகம்) எழுதிய ஆசிரியர் அதை எழுதி முடிக்கும் போது கடைசிப் பக்கத்தில் "சுப மங்களம்" என்று முடிப்பார். இனிதே முடிவுற்றது என்று பொருள். ஆரியர்கள் தங்களுக்குப் பிறக்கும் குழந்தை பெண்ணாகப் பிறந்து இனி குழந்தையே வேண்டாம் என்று முடிவெடுத்தால் அப் பெண் குழந்தைக்கு "மங்களா" என்று பெயர் சூட்டுவர்.

6. திருவள்ளுவர் தம் குறளில் "மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன் நன்கலம் நன்மக்கள் பேறு" - என்று பாடியிருக்கிறார். காண்க - மங்கலம். (மங்களமில்லை)

- - - - - - - - - - - - - - - - - - - - - -

**தெரிந்துகொள்வோம்...**

பனைமரத்தின் விஞ்ஞான பெயர் - Borassus flabellifer.
மருத மரத்தின் விஞ்ஞான பெயர் - Terminalia elliptica.
வெண்டாமரை பூவின் விஞ்ஞான பெயர் - Nelumbo nucifera.
ஆண் மானின் விஞ்ஞான பெயர் - Axis axis.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மண்சஞ்சிகையின் புரட்டதிஐப்பசி 2020 இதழுக்கான

அட்டைப்படக்கவிதை..
வாக்குகளாய் வழங்கிவாக்குகளைப் பொற்றிடுவார்
வாங்கியேஎடுத்தவற்றைவங்கிகளில் நிரப்பிடுவார்
தாக்குதல்களைத் தாங்கியேதங்களைஉறுதிக்கி
தாங்கியதையும் தங்கியதையும் தடங்களையும் மறந்து
நோக்கங்களில் குறியாகிநோகாமல் நடந்திடுவார்
நொடிக்கேனும் ஒருநாளில் நொழிந்தவர்க்காய் பேசிடார்

கோடானுகோடிவாக்கினில் கொளுத்தவெற்றிஅடைவார்
கொடியேற்றிடவந்துபோவார்கொள்கையில் தாண்டிடுவார்
கோடிகள் குவியக்குவியகோயிலின்றியும் கும்பிடுவார்
கொள்கைமக்கள் என்பதற்குகொசுறுக்கும் நினைத்திடார்
தேடிச்செல்லும் மக்களைச் சற்றுதிரும்பியும் பார்த்திடார்
தெய்வதரிசனமாய்த் தோன்றித்தேரில் ஏறிவிரைந்திடுவார்

நாடாளுமன்றம் செல்லஎன்நாடேஎன்மக்களேஎன்றிடுவார்
நடைபாதைப் பவனிகளிலேநாடகங்களைநடத்திடுவார்
வீடாளும் பெண்களிடம் வெற்றித்திலங்கள் பெற்றுவணங்கி
வீட்டுக்குள் அடைந்திருந்துவெள்ளறிக்கைஎழுதிடுவார்
பாரளுமன்றங்கள் செல்வதற்காய் "பல்டிகள்"அடித்திடுவார்
பாரினையேசுற்றிப்பார்த்துபணத்தினிலேபடுத்துறங்குவார்

பாராளுமன்றத்துவாசலின் படிக்கட்டுக்கள் தேய்ந்திடினும்
பாராமுகமாகவேனும் மக்களின் நலம்பேணிடநடந்தறியார்
நேராதஅரசியல்மாற்றம் நிகழ்ந்துஅரசுகுலையும்கால்
நெடிதானஅறிக்கையைவிட்டுநேசம்பாசம் காட்டிவருவார்
வாராததேர்தலொன்றுவருங்காலம் நெருங்கிவிட்டாலே
வர்ணக்கொடிகள் அடியவருடன் வருவதே இவர்வழக்கமாம்....

அம்பலவன்புவனேந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனாவால் வீழ்ந்த குரல்!...



பட்டுப்போய்விடாத பாடல்களைப் பாசனத்தால் காத்தவனே
பண்ணோடு இசையாகமனிதரில் பாசம்வைத்துப் பார்த்தவனே
விட்டுச்சென்ற இடத்தில் வேறெவரும் அமர்ந்திடாதவகை
வீரியப்பாடகனே உன்விதியினையெழுதிடயார் துணிந்தார்..?

இகஷ்டப்பட்டு எம்தமிழ்மொழியை எழுதிப்படித்துத் தேர்ந்தாயே
இலக்கணத் தமிழோடு நீதானே இலக்கியமாய்ச் சேர்ந்தாயே
தட்டுப்பட்டதமிழர்களையே தட்டிக்கொடுத்து வளர்ந்தாயே
தரத்திலும் குணத்திலும் உயர்ந்துதங்கமென மிளிர்ந்தாயே

கட்டிவைத்த அணையுடைத்தே கண்ணீர்வெள்ளம் பாயுதையா
காதல்ரோஜா வாடியதால் கலங்கியுலகம் அழுகின்றதையா
நட்டுவைத்த விதைகளெல்லாம் நாற்றாகியிங்கு வாடுதையா
நானிலத்தின் நலம்பாடிட நாமெவரைத் தேடுவோமோ சொல்.!

கொட்டிவைத்த பாடல்களில் குழைந்துநாம் அழுகின்றோம்
குவலயத்தில் உனது சாதனைகள் கொஞ்சமாகொஞ்சலா
சிட்டுக்குரவியாக சிறகுவிரித்தும் சிகரம்தொடமறந்தவனே
சிவலோகதரிசனத்தக்காகவா சீக்கிரம் நீ பறந்துசென்றாய்..?

-அம்பலவன்புவனேந்திரன்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ருத்திர தாண்டவம்...

-கவி மீனா-

காதலிப்பவன் களவாணி
காதலிக்கும் போது திருடனாய் நீ
அக்கம் பக்கம் பார்க்கிறாய்
சுற்றம் இல்லா நேரத்தில்
சுத்தி வந்து அவள் கன்னத்தை
களவாகக் கிள்ளுகிறாய்
பெண்ணின் இதயத்தை திருடுகிறாய்
பின் பெற்றவரிடம் இருந்து
பிள்ளையை திருடுகிறாய்!..

காதலிக்கும் போதே பல
பொய்களை பேசுகிறாய்
காதல் கிறுக்கத்தில் பொய்கள்
புரியாமல் காதல் இனிக்கிறது
கல்யாணத்தின் பின்பும் நீ
பொய்களையே தொடர்கிறாய்
கல்யாணத்தின் பின்பு
பொய்கள் எடுபடுவதில்லை
காரணம் அவள் இன்று மனைவி
மனைவி என்பவள் உண்மையை
மட்டுமே விரும்புவாள்!...

உண்மைகள் தெரியும் போது
நீ மறைத்த பொய்கள்
உடையத் தொடங்கும் போது
உருவாகுது கலகம்
போகப் போக பூகம்பம்
இடி முழக்கம் சுனாமி என
சூறாவழியாகச் சுழன்று
அடிக்கும் உன் வாக்கு வாதம்
இதில் காதலும் வாழுமா?
நீர் இல்லா இடத்தில்
மரம் வளராது
உண்மை இல்லா இடத்தில்
காதல் வாழாது
பல பேரின் காதல் இப்படியே
அற்ப ஆயுளில் மரணிக்கிறது

கவிஞர்களின் கற்பனையிலும்
கலைஞர்களின் இசையிலும்
காதல் இனிய கானமாய்
களிநடனம் புரிகிறது
புலம் பெயர் வாழ்வில்
காதல் சுடுகாட்டில் நின்று
ருத்திர தாண்டவம் ஆடுகிறது!..

---

### சரிசமம்!..

சாதி சமயம் தெரியாது
நிறம் குணம் தெரியாது
காசு பணம் தெரியாது
கல்வி பேதம் தெரியாது
சரிசமமாய்த் தாக்கும் கொரோனா!

### சிறை!..

கத்தியின்றி இரத்தமின்றி
உலகம் முழுவதையும்
சிறைப்படுத்திக் கொண்டது
கொரோனாக் கிருமி!..

-சிவா-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கை வை!..

விழுந்தால் அழாதே... எழுந்திரு
தோற்றால் புலம்பாதே... போராடு
கிண்டலடித்தால் கலங்காதே...
மன்னித்துவிடு
தள்ளினால் தளராதே...
துள்ளியெழு
நஷ்டப்பட்டால் நடுங்காதே...
நிதானமாய் யோசி
ஏமாந்துவிட்டால் ஏங்காதே...
எதிர்த்து நில்நோய் வந்தால்நொந்து
போகாதே... நம்பிக்கை வை
கஷ்டப்படுத்தினால் கதறாதே...
கலங்காமலிரு
உதாசீனப்படுத்தினால் உளறாதே...
உயர்ந்துகாட்டு கிடைக்காவிட்டால்
குதிக்காதே...
அடைந்து காட்டு மொத்தத்தில்
நீ பலமாவாய்
சித்தத்தில் நீ பக்குவமாவாய்
உன்னால் முடியும்...
உயர முடியும்.உதவ முடியும்...உனக்கு
உதவ நீ தான் உண்டு
உன்னை உயர்த்த நீ தான் நம்பு...
உன்னை மாற்ற நீ தான் முடிவெடு...
நீ பாறை... நீயே உளி... நீ சிற்பி...
நீயே செதுக்கு...
நீ விதை... நீயே விதைப்பாய்...
நீ வளர்வாய்...
நீயே அனுபவிப்பாய்...நீ நதி...
நீயே ஓடு... நீ வழி...
நீயே பயணி... நீ பலம்... நீயேசக்தி...
நீயே ஜெயிப்பாய எப்பொழுதும்
நம்பிக்கை இழக்காதே...

# சுனாமியின் சுவடுகள்....

(வசந்தா ஜெகதீசன்)

ஆழிப் பேரலையே அனர்த்தங்கள்
கேளாயோ?
ஆண்டுகள்ஈரெட்டு அகன்றேசென்றது
ஆழிப்பேரலைஅனர்த்தங்கள்தொடருது
கூடியே வாழ்ந்தவர்குடிலைஇழந்தவர்
தொழிலினை தொலைத்தவர்
தனிமையில் பிழைத்தவர்
இழப்பினை சுமப்பவர்
இருப்பிடம் இழந்தவர்
உறவினைப் பிரிந்தும்
உயிரினை சுமப்பவர்
உள்ளத்தின் குமுறலை
உருகிடும் நிலையினை
சொல்லிட முடியா சோதனைவாழ்வு
வெந்தணலிட்டும் வேகாத நினைவு
சுனாமிப் பேரலை
சுக்குநூறாய் தேசங்கள்
அழகுடன் திரும்பலாம்
டுகள் அகலலாம்
கூடியே வாழ்ந்தவர் கூட்டாய்
இருந்தவர்பார்த்தே இருக்க பறித்த
அலையின் பாதகச் செயலை
பரிதவித்திட்ட உறவின்
மனதின் நிலையை
மாற்றிட முடியுமா? மாற்றீடுபோதுமா?
ஆழிப்பேரலையேஅனர்த்தங்கள்கோடி
ஆறாமுடியாத சோகத்தின் வலிகள்
ஏதிலிவாழ்வில் தைக்குதுமுள்ளாய்
மனதின் குமுறல் மறக்குமாவாழ்வில்
அனலாய்கொதிக்கும்உருகும்மெழுகாய்
உபாதை சுமக்கும் சுனாமியின்சுவடு.
சுட்டே எரிக்கும் சுவாசத்தின் மூச்சு.!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும் வருவாயா!..

-கீத்தா பரமானந்தன்-

பெண்ணியம் போற்றிக்
கண்ணியம் காத்து
மண்ணினில் சுதந்திர
மகத்துவம் சொல்லியே
கன்னல் தமிழினில்
மின்னி முழங்கி
எண்ணில்லாக் கவிகளை
வண்ணமாய்த் தந்தவர்

அடிமை விலங்கொடிக்க
மிடிமை கொண்டாய்
மடமையைக் கொழுத்திட
மனங்கொண்டு நின்று
உடமை உரிமையென
உரக்கப் பாடிய
முண்டாசுக் கவியே
மீண்டும் வருவாயா
உச்சிமீது வானிடிந்து
வீழ்கையிலும்
அச்சமில்லையென
அக்கினிக் குஞ்சாய்
வெஞ்சினம்
கொண்டவனே
இச்செகத்து மனிதரின்
இழிசெயல்கள் கண்டு
நெஞ்சு பொறுக்காத
நேசமுள்ள
பாரதியே

சீரழிந்து வாடுறார்
சீரிய பெண்ணினம்
வறுமைப் பேயால்
வெறுமைச் சிறைக்குள்
திறமை உள்ளோர்
தீண்டாப் பணத்தினால்
சிறுமைப் பட்டே
சிந்தை வேகிறார்
ஓடிவிளையாடு பாப்பா
கூடி விளையாடென்றாய்
ஓடவும் இடமில்லைக்
கூடவும் பொழுதில்லை
வாடலே வாழ்வாய்
வந்திட்ட விதியினை
சிந்தனைப் பாட்டினால்
சீர்மைப் படித்திட
மீண்டும் வருவாயா
மகாகவி பாரதியே!...

-----------------------------

## முதலிடம்!..

உலகின் முதலிடம்
அமெரிக்காவுக்காம்
துப்பாக்கிக் கலாச்சாரத்திலும்
சுட்டுப் படுகொலை செய்வதிலும்
கொரோனா உயிரழிவுகளிலும்
அமெரிக்க முதலிடம்!..

## யாசகம்!..

பெற்று வளர்த்த ஐந்து
செல்வங்களும்
ஐந்து கண்டங்களிலும் உல்லாசம்
மரணத்தை நெருங்கும் பெற்றோர்
ஆதரவற்றோராய் தெருக்களில்
யாசகம்!..

-சிவா-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவீரர்நாள்...

(கெங்கா ஸ்ரான்லி)

பரந்து(செறிந்து) வாழும்தமிழ்மக்கள்
படைவீரர் தினம் நினைக்க
சுரந்துவரும்கண்ணீரின்எண்ணங்கள்
சுமைதாங்கிகள்ஆனாரேஎமைகாக்க.

தம்மைப்பற்றி நினைக்காது
தாய்மண்ணையே நேசித்தவர்
ஊண்உறக்கமின்றி
உலாவந்தார்.
உண்மையானதேசப்பற்று(பற்றின்)
(உணர்வை) தனை உணர்த்தினார்.

காலக்கோடு கெடுவிதிக்க
கலக்கமின்றி களத்தில்நின்றார்
உலகக்கண்கள் பார்த்துவியக்க
ஊக்கமாகசெயல்பட்டார்.

அண்ணனின் பாசத்தில்
அவர்வகுத்த வியூகத்தில்
சலிப்பின்றி முந்துவதில்
அவர்க்கு நிகர்அவரே.
இளவயதின் இன்பங்கள்
எள்ளவும் அனுபவியாது
இனத்திற்காக எழுச்சிகொண்டு
ஈழவிடுதலைபோராட்டம்
எடுத்தாண்டவர்.

எமக்காக,மண்ணுக்காக
தமிழ் ஈழத்துக்காக
உம் இன்னுயிர்
ஈந்த மாவீரச்செல்வங்களே !!
மண்ணுலகம் இருக்குமட்டும்
எம்மாவீரர் நினைவுஅழியாது
உமக்காக மலர்சொரிந்து
உள்ளத்தால்அஞ்சலிசெலுத்துவோம்!...

## சுனாமியின் சுவடுகள்....

(இராஜேஸ்வரி சிவராசா)

ஆயிரம் ஆயிரம் மகத்தான
உயிர்கள் பலியாகி
ஆண்டுகள் பலகண்டு
ஆழப்பதிந்த நினைவுகள்
ஆறாது துயர் அனைவரினதும்
நெஞ்சங்களில்
ஆத்மாக்களின் நினைவாய்
இதயங்கள் இரங்குகின்றன!....

கத்தும் கடலலை தந்திட்ட
கோரக் கொடுமைகள்
சொத்துக்களை இழந்து
சொந்தங்களை இழந்து
முத்தான மண்ணிலே முகவரியும்
தொலைந்தது
பித்துப் பிடித்தது போல் வாழும்
உறவுகள் அங்கே!...

சுமைகளும் சோகங்களும்
பலவழிகளில் சுமந்தாலும்
அமையவில்லை இன்னும்தான்
அமைதி வாழ்வு
தமை நாடி உதவிக்கரங்கள்
உயரும் எனவும்
இமை மூடாது ஏங்கிநிற்கும்
ஊர் உறவுகள் ஆயிரம்!..

கடந்தே காலங்களும் கரைந்து
ஓடிடவே
திடமான வாழ்வினுக்கோர்
தீர்வும் இல்லை
இடம் பெயர்வு இன்னல்கள்
இன்றும் நிலையாகி
சுட்ட வடுவாய் சுனாமியின்
சுவடுகள் எங்கும்!...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீர் மேவும் சிருஷ்டிப்பு...

(ப.பசுபதிராசா)

பிரமாண்டமான இந்தப் பிரபஞ்சத்தில் ஒளியும் ஒலியும்
இயக்கத்தைத் தீர்மானிக்கும் இலட்சனைகள்
அந்தப் பெரு வெடிப்பின் ஒலிபடைத்த பிரவசங்கள்
நாதனங்களாய் நின்று ஆடி நிமிர்கின்றன
அது புவியில் மட்டும் ரசனைகளைச் சுமந்து
ஆசை மனங்களை அளவிடுகின்றன உலக சாதனையாளன்
எஸ் பி பாலசுப்பிரமணியம் இயற்கை இசை பிசைந்து
அசைந்து கிடந்த அற்புதம்...
வாழ்நாள் பூராகவும் பாட்டின் சுவாசமாய்
மக்களிடையே பற்றிப் படர்ந்த பருவ நிலா
கற்றுக்கொண்டே இருந்த மாபெரும் கலைஞன்
தூற்றிக்கொண்டெ இருக்கிற சுளகு போல
இது எனக்கான வாய்ப்பு என்பதை மனம்அறிந்த மானசீகம்
என்பதால் அவன் பண்பு படைத்த பரோபகாரன்
தொடுவானத்தையும் இசைத் தோட்டம் ஆக்கியது
எல்லாக் கஞைர்களும் மனிதன் மகிழத்தான் ஆனால்
உன் இசை மட்டும் உயிரையும் கடந்த உறவு...
பண்பும் அன்பும் பாட்டைவிடப் பெரிது என்பதால்
பாடகனுக்காய் உள்ளங்கள் பிரார்த்தனை விழா
நீ ஒலியானதால் எல்லா மொழிகள் மீதும்
வழிமொழிவுகள் வாகைசூடிக் கிடக்கின்றன
எல்லா மனிதர்களுக்கும் இயல்பாக இறைவன்
கூட இல்லை நீ பாட்டு வழிவெடுத்த பரந்தாமன்
விரும்பாதவர்கள் எவருமில்லை என்பது தானே
நீ வாழ்ந்துவிட்டுப் போன வலிமையின் எல்லை...
எல்லா மலர்களும் மாலைநேரத்தில் வாடிவிடும்
உன் பாட்டு மலர்கள் பலகோடி இதயங்களை
வாட்டமின்றிக் காகித இரட்சணியப் பாமாலை
இந்தப் பிரபஞ்சம் முடிந்த பின்பு உன் பாட்டுக்கள்
ஒன்று கூடிப் படைக்கும் இனித்துக்கொண்டே இருக்கும்
அன்பை மட்டும் அவதாரம் ஆக்கும் அண்டம் - அதில்
பாட்டைப் படைத்த நீயே இறைவன்-புதிய இறைவன்!..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்ணில் வீழ்ந்த மதிப்பிற்குரிய மாவீரர்!..

மண்ணில் வீழ்ந்த மதிப்பிற்குரிய மாவீர்கள்
கண்ணில் நிலைத்திருக்கும் கரு மணிகாள்
விண்ணில் சுடராய் ஒளி வீசும் தாரகைகள்
தண்ணொளில் மேவிட தவமாய் பெற்றவர்கள்....

நெருப்பென்று தெரிந்தும் நேர்நடை போட்டவர்கள்
உருத்தோடு மண்மீட்க உலைக்களம் புகுந்தவர்கள்
விருப்போடு விடுதலையை வென்றெடுக்க விரும்பி
கருத்தோடு கண்ணயராது காவல் காத்தவர்கள்...

விட்டில் பூச்சியும் வெளிச்சம் பெறுவதற்கே
தட்டில் தன்னுயிரை தந்து மாய்கிறது
நாட்டில் விடுதலையும் நம்மொழி சுதந்திரமும்
கட்டிக் காத்துத்தர களமாடி உயிரீந்தவர்...

வீரமென்ற சொல்லின் விளை நிலங்களே
வாரம் ஒன்றல்ல வாழ்நாளில் உமை மறவோம்
ஓரமாய் விழிசிந்தும் ஓராயிரம் கண்களும்
ஈரமான நெஞ்சுடன் இங்கிதமாய் அஞ்சலிக்கும்...

கலைவாணி. ஏகானந்தராஜா

## வரவேற்பு!..

வரவேற்பு அறைகளில் அன்று
குத்துவிளக்கு,சாம்பிராணி,குங்குமம்
சந்தணம் பூக்கள் என வரவேற்கும் - இன்று
ஸ்மாட்போன்,அமேசான், எக்கோ, ஹொாம் மெசின்கள்!..

## உரித்தா?..

மலருக்குள் இருக்கும் தேன் மலருக்கு உரித்தா
சங்குக்குள் இருக்கும் முத்து சங்குக்கு உரித்தா
நிலத்தினுள் இருக்கும் பவுண் நிலத்துக்கு உரித்தா
பூமியில் வாழும் மனிதன் பூமிக்கு உரித்தா?..

-சிவா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொரோனா வந்ததும் வந்திச்சு கல்யாண வீடு சாமத்திய வீடு பேத்டே பாட்டிகள், பல்லு கொழுக்கட்டை கொட்டுதல், வளைகாப்பு, கல்யாணநாள் கொண்டாட்டம் என்று யாவுமே ஸ்தம்பித்து நிக்குது பாருங்க! இது எத்தனை பேருக்கு மனக் கஸ்டத்தை கொடுகிறது தெரியுமா? இந்தியா சிங்கப்பூர் எல்லாம் போய் வாங்கிய சேலைகள் நகைகள் சுடிதாருகள் எல்லாம் எப்பதான் போட்டு அடுத்தவர்களுக்கு காட்டுவது? என பல பேருக்கு இங்கு மன வருத்தம், காசு கொடுத்துப் பார்த்துப் பார்த்து வாங்கியது எல்லாம் அலமாரியில் அடுக்கி வைத்து என்ன பிரயோசனம் பாருங்க!

அற்பனுக்கு பவுசு வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிபது போலே புலம் பெயர்ந்து வந்தவர்களில் பலர் காணாததை கண்டு விட்ட களிப்பில் நெடுக கொண்டாட்டம் வைப்பதும் அதற்கு மேடைப் பேச்சாளர்கள் வேறே மைக் பிடிக்க மேடை ஏறுவதும் எல்லாம் இங்குதான் நடந்ததுங்க !இதிலை கொண்டாட்டம் வைத்து கோடி உடுத்தி அன்று ஒருநாள் கூத்து வைத்தால் அவர்களது தரம் உயருமா? இல்லை தன் வாழ்வை சீராக வாழ தெரியாதவன் எல்லாம் மேடை ஏறிப் பேசி விட்டால் பெரிய இலக்கியவாதி ஆகி விட முடியுமா? இது எல்லாம் அற்ப ஆசையுங்க அதைக் கூட இன்று இந்தக் கொரோனா வந்து தடுத்து வைத்திருக்கு என்றால் இவர்களது மன நிலை என்ன பாடு படும் சொல்லுங்கோ?

இளசுகள் கல்யாணம் ஆகி ஒன்று சேர முடியலை என்ற ஏக்கத்திலும் பெரிசுகள் தங்கள் ஆடம்பர விழாவை வைத்துப் பவுசு காட்ட முடியலை என்ற வருத்தத்திலுமே வாடுதுகள் பாருங்க! எத்தனையோ ஏழைகள் ஊரடங்கு சட்டம் போட்டதாலே தண்ணி இல்லா காட்டிலே தவிக்குதுகள் அன்றாடம் உழைத்து உண்ட சனம் ஒரு வேளை சோற்றுக்கு வழியின்றி வாடுதுகள், இதை எல்லாம் அறியாத சனம் கொண்டாட்டங்களும் ஆடம்பர வாழ்க்கையும் தடைப் பட்டதை நினைத்தே வருந்துதுகள் என்றால் இவர்களை என்ன சொல்ல? கொரோனா வைரஸ் வந்து பெற்ற பிள்ளைகளை கூட காண முடியாது தவிக்கும் பெற்றவர்கள் நிலை தெரியுமா?பேர பிள்ளைகளை கட்டியணைத்து ஒரு முத்மிட முடியாமல் ஏங்கும் பேரன் பேத்தி நிலை புரியுமா?தனித்து விடப்பட்ட மனிதர்கள் வெளியிலும் போக முடியாது சுவருக்குள் அடை பட்டு கிடக்கும் நிலைதான் அறிவார்களா? இதைப் பயத்தோடு எல்லாம் விட்டுட்டு என்ன இந்த தொற்று பரவியதாலே நாம குறித்த தேதியில் கொண்டாட்டம் வைக்க முடியலையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்போரும் 50 ஆவது பிறந்த நாளை இப்ப கொண்டாடாமல் அடுத்த வருசம் கொண்டாடலாமா? நாள் போக ப்போக வயதும் ஏறி போகுமே என்று சிந்திப்போருமாய் சில பேரு! இல்லாவிடில் இங்கு ஒரு பெண்மணி கொண்டாடியது போலே, ஆயுளுக்கும் வந்த எல்லாப் பிறந்த நாளையும் சேர்த்து ஒருநாள் கொண்டாட்டமாய் வைத்தது போலே எனி வருங்காலத்தில் கொண்டாட வேண்டியதுதானே?

50 ஆவது பிறந்தநாளை இல்லை ஒரு நாளுமே வாழ்க்கையில் பிறந்த நாளை கொண்டாடாத பெண் ஒருத்தி இங்கை வந்ததும் அடுத்தவர்கள் பேத்டே பாட்டி வைக்கினம் என்று தானும் வைப்பம் என்று ஒருநாள் எல்லாரையும் கூப்பிட்டு பாட்டி வைத்தா எத்தனை வயது என்று கேட்டால் சொல்லவே இல்லை இரகசியமாக சொன்னா தான் 50 ஆவது கொண்டாடாத படியால் இப்ப கொண்டாடுவதாக எப்ப சொல்லுங்கோ 56 வயதிலை!சரி விட்டு தள்ளுங்க ஆசைக்கு வயது ஏது?கொண்டாட்டம் வைப்பவர்கள் ஒரு பக்கம் வாடி நிக்க, இந்த மதம் மாறிய கூட்டம் ஒரு பக்கம் தாங்கள் சபை கூடுறது என்று சொல்லி கிழமைக்கு இரண்டு தடவையாச்சும் ஆண்கள் கோட் சூட் என்ன, பெண்கள் டொக்கா சப்பாத்து என்ன ?ஆடை அலங்காரத்துடன்கூடிக் கூடி ஓத முடியலை என்று அழவுறார்கள் பாருங்க!நெஞ்சிலை உள்ள ஆசையை அழிக்க முடியாத இந்த சனம் பேரவா பிடிச்சு அடுத்தவன் சொத்துக்கும், அடுதவனை பிடித்து உதவி பெறவும் நாய் பேயாக அலைவதை மறந்து, கையிலை ஒரு பைபிளை தூக்கிட்டு என்னமோ சபை கூடி கோசம் போடுவதால் என்ன பயன் சொல்லுங்கோ?

ஆடையே இல்லாமல் ஒரு துண்டு கோமணத்தோடு சிலுவையில் தொங்கும் யேசுவை கும்பிட இவர்கள் கோட் சூட் போடாமல் போக மாட்டார்களாம் இதை நினைத்தால் சிரிப்புதாங்க வருகுது! இதிலை சில பேரு ஊரிலை வெறும் காலோடே பனம்காடு, வரப்பு எல்லாம் நடந்து திரிந்தவை இன்னும் சில பேரு கடலோரம் குருமணலிலை நடந்த சனம் பாருங்க! அங்கை எல்லாம் டொக் டொக் சத்தம் வார சப்பாத்து போட்டா நடந்தவை? நினைத்தால் சிரிப்புதான் வருகுது ஆனால் இங்கை அவர்கள் நினைப்பே வேறே சத்தம் வராத சப்பாத்து போடாமல் போக மாட்டினமாம் காணாததை கண்டது என்று இதைதான் சொல்லுறது பாருங்க!பிறவி வேதகாரன் வெள்ளையனும் சேச்சுக்கு போறாங்க ஆடம்பரமற்ற ஆடைகளை அணிந்து ஞாயிற்றுக் கிழமைகளில் போறாங்கள் ஆனால் இங்கை புலம் பெயர்ந்து வந்து மதம் மாறிய சனம் படுற பாடு பெரிய அளப்பறையுங்க! கோயிலுக்கு போறாக்கள் மட்டும் என்ன பக்தியாக முத்தியை தேடியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போறாங்க? நகை நட்டை காட்டவும் வாங்கின சேலைகளை உடுத்தவும் என்று கோயிலுக்கு போறவங்க சில பேரு அங்கு போய் அரட்டை அடிக்கச் சில பேரு,வீட்டிலை வேலை செய்ய முடியாத பெண்கள் கூட கோயிலுக்குப் போவதென்றால் தோய்ந்து குளித்து அங்கை போய் மணி அடிச்சு பூசை முடியும் வரை தம்பிடிச்சு இருந்திட்டு, வெளியே போய் அரட்டை அடிக்கவும், கோவில்ச் சாப்பாட்டை சாப்பிடவும் என்று போறவை சில பேரு!பூசை நடக்கேக்கையே ஆளை ஆளு கண்ணாலை கதைபாங்க, ஐயர் மந்திரத்தை சரியா சொல்லுறாரா அது கூட யாருக்கும் புரியாது என்னமோ பிள்ளையாரும், முருகனும் அவருக்கு இரண்டு பெண்டாட்டியும், சிவனும் பார்வதியும் என்பது மட்டும் தான் சைவமா? ஒரு தேவாரம் கூட தெரியாத ஆட்கள் தான் அதிகம் பேரு இங்கை!

இதிலை சைவ புராணங்களையும் உபநிடதங்களையும் அதிலுள்ள தத்துவங்களையும் அறிந்தவர் யார் உள்ளார்கள்?தேர்திருவிழாவிலை தேர் இழுக்கிற பெண்களென்ன, கற்பூர சட்டி ஏந்துற பெண்கள் என்ன இவங்களிலை சில பேரு அடுத்தவ குடும்பத்தை தெருவிலை இழுத்து விட்டவங்களுமுண்டு! அடுத்தவன் வாழ்க்கையைப் பொறாமை த்தீயால் கொழுத்தி எரிய விட்டவங்களுமுண்டு!கோயிலும் இங்கை பணவரவுக்காக நடக்குது, போற சனமும் பொழுது போக்குக்காவும், ஊர்வம்பு பேசவும் அடுத்த பொண்ணு கட்டின சேலை எங்கை வாங்கினது? எவன் எவன் என்ன செய்யுறான்? என பேசவும் ஒரு பொழுது போக்கிடமாக கோயிலும் இங்கை மாறியது உண்மைதானுங்க

நான் மதங்களை குறை கூறவில்லை, கடவுளை பழிபதுமில்லை ஆனால் அந்த நிலையை உருவாக்கும் இந்த சனங்களைத்தான் நான் எடுத்துகாட்டுறன். அதுவும் போச்சா கள்ள வேலைக்குப் பதுங்கிப் பதுங்கி அரசாங்கத்தக்கு தெரியாமல் யாராச்சும் காட்டி கொடுத்திடுவினமோ என்று பயந்தபடி வீடுகளிலும் ரெஸ்ரோரண்டிலும் வேலை செய்தவர்களுக்கும் இப்ப கொரோனா ஆப்பு வைச்சுட்டுது பாருங்க! படித்தவன்களுக்கும் நல்ல வேலை செய்பவன்களுக்கும் நேர்மையாய் பதிந்து வேலை செய்தவனுக்கும் முறையாக வேலை செய்து பென்ஸன் எடுத்தவனுக்கும் இப்ப வீட்டிலை நின்று வேலை செயயக் காசு கொடுக்கிறாங்க இந்த கள்ள வேலை காரர்களுக்கு வாயிலை மண் தானுங்க! இதுக்கு மேலே என்னத்தை சொல்ல ? நாளை மேலும் சொல்ல முடியுமா தெரியாது இதுதான் இன்றைய நிலை!போனால் போகட்டும் போடா இந்த பூமியில் நிலையாய் வாழ்ந்தவன் யாருடா? போனால் போகட்டும் போடா!.. போடா!...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படித்ததில் பிடித்தது...

# இதுததானா?..இந்து மதம்?

## அறிஞர் அண்ணாவின் பேனாவிலிருந்து!...

நாம் யாருக்கும் மேல் அல்ல!.. யாரும் நமக்கு மேலோர் அல்ல!..நாம் ஆள ஆட்கள் வேண்டாம்!..நம்மை ஆளவும் ஐயர்மார் வேண்டாம்!..நம்மிடையே தரகர் கூடாது. தர்ப்பை ஆகாது. சேரியும் கூடாது. அக்கிரகாரமும் ஆகாது. யோக யாகப் புரட்டுகள், புரோகிதப் பித்தலாட்டம், மனுக்கொடுமை வேண்டாம்.

மனிதர்கள் யாவரும் சரிநிகர் சமானமாக வாழ்வோம் என்று கூறுபவர் எப்படித் தம்மை "இந்து" என்று கூறிக்கொள்ள முடியும்?.. மூட மதிக்காரர், கொடுமைக்காரர், அடிமை, சூத்திரன் என்று கூறிக்கொள்ள எப்படித்தான் மனம் இடம் தரும்?.. எப்படித்தான் துணியும்?..

"இந்து மதம்" என்பதிலே உள்ள கடவுள்முறை, சமுதாயமுறை, மதக்கதைமுறை, மக்கள் வாழ்க்கைமுறை ஆகியவற்றை அலசிப் பார்த்த பிறகு யாருக்குத்தான் தன்னை ஓர் "இந்து" என்று கூறிக்கொள்ள மனம் இடந்தரும்?.. பாம்பை எடுத்துப் படுக்கையில் விட்டுக்கொள்வாரா?..விஷத்தை எடுத்து உணவில் சேர்ப்பாரா?..வீதிக்குப்பையை அள்ளி வீட்டுக்குள் கொண்டுபோய்ச் சேர்ப்பாரா?..

மதி துலங்கும் விஷயங்களைவிட்டு, மதி கெடுக்கும் கற்பனைகளைக் கட்டி அழுவாரா?.. மீள மார்க்கம் தேடுவதை விட்டு, மாள வழி தேடிக்கொள்வாரா?..விடுதலைக்கு வழி பிறந்த பின்னர் அடிமை முறைச் சீட்டில் கையொப்பமிடுவாரா?..கண் தெரியும்போது குழியில் வீழ்வாரா?..

தாம் திராவிடர் எனத்தெரிந்த பிறகு, தம்மை இழிவு செய்து, கொடுமைக்கு ஆளாக்கும் "இந்து மார்க்கத்தில்" போய்ச்சேர இசைவாரா?..வீரத்திராவிடர் என்று ஓர் உணர்ச்சி வீறிட்டு எழப்பெற்றோர், இனி ஈனமாய் நடத்தும் இந்து மார்க்கத்தை ஏறெடுத்தும் பாரார்!.. அதன் இடுக்கில் போய்ச் சேரார்!...இழிவைத் தேடார்!...

அறிஞர் அண்ணா எழுதிய "ஆரியமாயை" என்ற புத்தகத்திலிருந்து..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பே சிவம்!..

வணக்கம் நம்பிக்கை உலகத்தில் பிறகும் ஒவொரு மனிதனும் வேறு ஒரு உறவு அல்லது பல உறவுகளோடு பயணித்தால்தான் நல்லது கெட்டது சந்தோசம் துக்கம் எல்லாத்தையும் அனுபவித்து இறக்க முடியும் அப்படியான வடிவத்தில்தான் கடவுள் வாழ்க்கை வடிவம் அமைத்துள்ளார்.

நாங்கள் பிறந்ததில் இருந்து இறக்கும் வரைக்கும் குறைந்த பட்ஷம் ஒரு உறவோடு ஆவது பயணிக்க வேண்டும் அப்படி பயணிக்கும்போது பல தரப்பட்ட உறவுகளோடு பயணிக்க வேண்டும். இங்கதான் நம்பிக்கை எனும் பிரச்சனை வருகிறது. ஒருவரை எப்படி நம்புவது பின்புலம் நிகழ்காலம் பழக்கவழக்கம் பேசும்முறை வைத்துதான் எவ்வளவு நம்பிக்கை வைக்கலாம் என்பதை உறுதி படுத்தும் நம்பிக்கையில் அளவுகோல் இருக்கிறது

சிலரிடம்தான் முழுமையான நம்பிக்கை வைப்போம் அவர்கள் தான் முதுகில் குத்திபோட்டு செல்வார்கள். இனிக்க இனிக்க அன்பாய் பேசி பழகி தங்கள் தேவை முடிந்தவுடன் போய்விடுவார்கள்

இவர்கள் ஏன் இரக்கமே இல்லாமல் துரோக செயலை செய்கிறார்கள் என்று யோசித்தால்...

1 பணம்
2 பெண்
3 நிலம்
4 சொத்து

இவைதான் முக்கிய காரணமாய் இருக்கும்.

நம்பிக்கை துரோகம் செய்யும் இவர்களுக்கு கடவுள் பல மடங்காய் எங்கள் கண் முன்னால் திருப்பிக் கொடுப்பார். நான் பலதடவை திரும்ப திரும்ப கூறுகிறேன் என்றால் நான் கடந்து வந்த பாதையில் பார்த்தது என்னை சுற்றி நடக்கும் வாழ்க்கையில் பார்க்கிறது இன்று வரைக்கும் செய்துகொண்டு இருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் எப்பதான் மாறப்போகிறார்கள்...

குறைந்த பட்ஷம் என்னை சுற்றி இருப்பவர்களை திரும்பத் திரும்பக் கூற மாறமாட்டார்களா என்று ஆதங்கம். வாழ்க்கையில் நல்ல வழி கெட்ட வழி இரண்டும் இருக்கிறது கடவுள் உருவாக்கினது நல்ல வழி மனதின் உருவாக்கினது கெட்ட வழி எந்த வழியில் நாங்கள் பயணம் செல்கிறோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதில்தான் எங்கள் வாழ்க்கை இருக்கிறது.

நல்ல சிந்தனை நல்ல நோக்கம் சக மனிதர்களை மதித்தல் முடிந்த உதவி செய்தல் சமூக அக்கறை இப்படியான சிந்தனை உள்ளவர்களிடம் கடவுள் எப்போதும் துணை நிற்பார் யாருக்கும் தீங்கு செய்யாமல் நல்லதை யோசித்து நல்லதை செய்து நல்ல வாழ்கை வாழவோம். வாழ்கை ஒருமுறைதான் இந்த வாழ்க்கையை வாழ விட்டால் திரும்பவும் வாழ வாய்ப்பு இல்லை.

பிறப்பு ஒரு சம்பவம் இறப்பு வரலாறாக இருக்கவேண்டும் நாங்கள் புத்தகத்தில் வரலாறு வருகிறமாதிரி இருக்க வேண்டாம் குறைந்த பட்ஷம் பேசுகிற மாதிரி நல்ல வாழ்க்கையை வாழ்வோம். உலகின் மிக பெரிய சக்தி அன்பு அன்பு இருந்தால் எதையும் வென்றிடலாம்.

நல்லது செய்பவர்களுக்கு அன்பு கொடுப்போம். கெட்டது செய்பவர்களுக்கும் அன்பு கொடுப்போம். துரோகம் செய்ப வர்களுக்கும் அன்பு கொடுப்பம். அன்பு எல்லாவற்றையும் நல்வழிப் படுத்தி நல்ல பாதைக்குக் கொண்டுபோகும் என நம்புகிறோம். "நல்லதை நினைப்போம் நலத்தை செய்வோம்" அன்பே சிவம்!...

## உலகில் முதல் தமிழ்ப்பத்திரிகை...

உலகில் முதலாவது தமிழ்ப்பத்திரிகை யாழ்ப்பாணத்தில்தான் வெளிவந்ததாக அறியப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் பிறந்த ஆர்னால்ட் சதாசிவம்பிள்ளை என்பவரால்தான் 1841-1-7ம் திகதியில் வெளிவந்தது. அதன் பெயர் " உதயதாரகை"

சதாசிவம்பிள்ளை அவர்கள் 1820-10-11ம் திகதியில் யாழ்ப்பாணத்தில் பிறந்தவராவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் பாண்டித்துவம் பெற்ற இவர் சுமார் 40 வருடங்களாக 1857ம் ஆண்டுவரை இப்பத்திரிகையின் ஆசிரியராகக் கடமையாற்றியிருக்கின்றார்.

அப்போது வெள்ளைக்காரார் ஆட்சியில் நாடு இருந்த போதும் தமிழ்மொழியையும் பத்திரிகைத்துறையையும் வளர்த்தெடுக்க இவர் அரும்பெரும் பங்காற்றினார் என்பது சிறப்பான விடையமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட மாகாணம் என்றால் என்ன?

வட மாகாண ஆளுனர் பெயர் -P.S.M.சார்ள்ஸ்.
வடக்கில் நிலப்பரப்பில் சிறிய மாவட்டம் - யாழ்ப்பாணம்.
வடக்கில் நிலப்பரப்பில் பெரிய மாவட்டம் - முல்லைத்தீவு.
வடக்கில் கடல்பரப்பில்லாத மாவட்டம-வவுனியா.
வடக்கில் குளங்கள் அதிகமாக காணப்படும் மாவட்டம் -முல்லைத்தீவு.
வடக்கில் காணப்படும் பெரிய தீவு - நெடுந்தீவு.
வடக்கில் சிலிக்கன் மணல் காணப்படும் இடம் - நாகர்கோவில்.
வடக்கு மாகாணசபை அமைந்துள்ள இடம் -கைதடி.
வடமாகாணத்தில்சனத்தொகைஅடர்த்திகூடியமாவட்டம் -யாழ்ப்பாணம்.
வடமாகாணத்தில் சனத்தொகை அடர்த்தி குறைந்த மாவட்டம்-முல்லைத்தீவு.
வடமாகாணத்தின் பரப்பளவு - 8884 சதுர கிலோமீட்டர்.
வடமாகாணத்தின் நிலப்பரப்பு 8290 சதுர கிலோமீட்டர்.
வடக்கில் எண்ணெய் வளம் உள்ள மாவட்டம் - மன்னார்.
வடக்கில் சிறுவர் நீதிமன்றம் அமைந்துள்ள இடம்-குருநகர், யாழ்ப்பாணம்.
வடக்கில் அல்லது இலங்கையில் நீளமான பாலம் வேலணை - புங்குடுதீவு.
வடக்கில் காணப்படும் முனை -பருத்தித்துறை (பேதுறு).
வடக்கில் காணப்படும் நீரேரிகள் - கச்சாய் அல்லது கிளாலி, சுண்டிக்குளம், தொண்டமானாறு.
இலங்கையின் வடக்கின் புராதனபெயர் - நயினாதீவு (நாகதீவு).
வடக்கில் இருந்து பாராளுமன்றம் சென்ற முதலாவது பெண் - 15February 1989 - 24 June 1994-திருமதிபுலேந்திரன்ராஜமனோகரி வன்னி.
வடக்கில் ஓட்டு தொழிற்சாலை ஒட்டுசுட்டானிலும் உப்பளம் ஆனையிறவிலும் சீமேந்து தொழிற்சாலை காங்கேசன்துறையிலும் இரசாயன தொழிற்சாலை பரந்தனிலும் காணப்பட்டது.
வட மாகாணத்தில் பாதுகாக்கப்பட்ட பறவைகள் விலங்குகள் காப்பகம் என அறிவிக்கப்பட்ட இடம் - சுண்டிக்குளம் (கிளிநொச்சி மாவட்டம்).
வேலணை தீவு அல்லது லைடன் தீவுகள் எனப்படுவது வடக்கில் பெரிய கூட்டிணைக்கப்பட்ட தீவாகும்.
யாழ்ப்பாணத்தில்காணப்படும்ஒரேஆறு-வழுக்கைஆறு (பருவகாலஆறு)
இலங்கையில் காணப்படும் குளங்களில் மூன்றாவது பெரிய குளம் - இரணைமடுக் குளம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கையாழியன் என அழைக்கப்படும் வடமாகாணத்தின் எழுத்தாளர் - கலாநிதி க.குணராசா.
அண்மையில் வடக்கில் தொடங்கப்பட்ட கைத்தொழில் பேட்டை - அச்சுவேலி.
வவுனிக்குளத்தை கட்டுவித்தவன் - எல்லாளன்.
வடக்கிற்கான ரயில் சேவை 1989.01.19 பின் 13.10.2014 உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.
வடக்கு ரயில் பாதையை புனரமைத்த இந்திய நிறுவனம் -இர்கொன்.
இரணைமடு நீர் விநியோக திட்டத்திற்கு உதவி வழங்குவது - ஆசிய அபிவிருத்தி வங்கி. இரணமடு நீர் விநியோக திட்டத்திற்கு மாற்றீடான மற்றுமொரு திட்டம் - ஆறுமுகம் திட்டம்.
யாழ்ப்பான பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது - ஆகஸ்ட் 1, 1974
வடமாகாணத்தில் ஒவ்வொரு வருடமும் மரம் நடுகை தினம் நவம்பர் 01 - 30 வரை கொண்டாடப்படுகிறது.
சுன்னாகம் கழிவு ஒயில் தொடர்பான நிறுவனம் - நொதேர்ன் பவெர்.
யாழ்ப்பான நூல்நிலையம் எரிக்கப்பட்ட ஆண்டு - 31.05.1981.
யாழ்ப்பாண வரலாற்றை கூறும் நூல்கள் - வையாபாடல், யாழ் வைபவ மாலை.
யாழ்ப்பான பல்கலைக்கழகத்தை (வைத்தீஸ்வரா கல்லூாி) உருவாக்கியவர் - சேர் பொன் இராமநாதன்.
முறிந்த பனை என்ற நூலை எழுதியவர்கள் - ராஜினி திராணகம, ராஜன் ஹூல், சிறிதரன், தயா சோமசுந்தரம்.
மன்னாருக்கான ரயில் சேவைகள் 1914ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டாலும் யுத்தத்தின் பின்னர் ஆரம்பிக்கப்பட்டது - 14.03.2015.
மன்னார்- நாவற்குழி பிரதான பாதை A32. பரந்தன் - முல்லைத்தீவு பிரதான பாதை A35. மாங்குளம் - முல்லைத்தீவு பிரதான பாதை A34.
முல்லைத்தீவோடு இணைக்கப்பட்ட பிரதேசம் - மணலாறு (வெலிஓயா).
நயினாதீவின் தற்போதைய பெயர் - நாகதீப.
யாழ் நூலகம் ஆரம்பிக்கப்பட்டது 1933 ஆம் ஆண்டு.
இலங்கையில் வறுமை கூடிய மாவட்டம் -கிளிநொச்சி
மதுபான விற்பனை மற்றும் எய்ட்ஸ் பாதிப்பு அதிகரித்து காணப்படும் மாவட்டம் - யாழ்ப்பாணம்.
யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து 1984 பெப்ரவரியில் கிளிநொச்சி மாவட்டம் பிரிக்கப்பட்டது.
யாழ் கோட்டை போர்த்துகேயரால் 1625ல் கட்டப்பட்டது.
தற்போது காணப்படும் யாழ் கோட்டை ஒல்லாந்தரால் உடைக்கப்பட்டு 1658 யூன் 23 ற்கு பின் கட்டப்பட்டதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண அரசின் நாணயம் - சேது நாணயம். யாழ்ப்பாண அரசின் பழைய சின்னமாக விளங்குவது - நந்தி.
வன்னி இராட்சியம் வீழ்ச்சியடைந்தது - 1803ம் ஆண்டு.
ஒல்லாந்தரால் சொத்துரிமை தொடர்பாக யாழ்ப்பாணத்துக்கு மட்டும் உரித்தான சட்டம் - தேசவழமைச் சட்டம்.
யாழ் நூலை எழுதியவர் - சுவாமி விபுலானந்தர் 1947.
சுவாமி விபுலானந்தர் இயற்பெயர் - மயில்வாகனன் 1892.
சைவசமய மறுமலர்ச்சிக்கு வித்திட்ட யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர் - ஆறுமுகநாவலர் (1822 டிசம்பர் 18 ஆறுமுகம்பிள்ளை).
நாவலர் 1872 இல் முதல் உருவாகிய சைவ ஆங்கிலப் பாடசாலை - வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலை.
மன்னாரில் எண்ணெய் வள ஆய்வில் ஈடுபட்ட நிறுவனம் -கெய்ன் இந்தியா நிறுவனத்தின் துணை நிறுவனமான கெய்ன் லங்கா.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடுக்கோ புதிர்ப்போட்டி முடிவு - 11

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 1 | 3 | 8 | 6 | 5 | 2 | 9 | 7 |
| 9 | 5 | 6 | 2 | 3 | 7 | 4 | 8 | 1 |
| 2 | 8 | 7 | 4 | 9 | 1 | 5 | 3 | 6 |
| 8 | 6 | 2 | 9 | 7 | 3 | 1 | 5 | 4 |
| 3 | 4 | 1 | 5 | 8 | 6 | 9 | 7 | 2 |
| 7 | 9 | 5 | 1 | 4 | 2 | 3 | 6 | 8 |
| 1 | 3 | 8 | 6 | 5 | 4 | 7 | 2 | 9 |
| 5 | 2 | 9 | 7 | 1 | 8 | 6 | 4 | 3 |
| 6 | 7 | 4 | 3 | 2 | 9 | 8 | 1 | 5 |

# சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி முடிவு-102

| | | | |
|---|---|---|---|
| ந | த் | தா | ர் |
| ட | டி | ட் | வே |
| ன | ட் | வீ | டு |
| ம் | வ | ண | ஆ |

# குறுக்கெழுத்துப்போட்டி முடிவு - 165

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ந | ல் | நெ | றி | மி | னா | சு |
| த் | பா | ல் | றை | டி | ரோ | ரு |
| தா | து | த் | மு | ன் | கொ | ட் |
| ர் | வ | ல | ன் | க | ப | டு |
| வ | ள் | ளு | வ | ர் | ட | வே |
| ல | ம் | ம | கு | ங் | கு | ட் |
| பு | ன் | ன | கை | க | ர | டி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்தான்......மதவடி மயிலன்.....



நான்தான் மதவடியான் மீண்டும் வந்திருக்கிறன்...வணக்கம்!... வணக்கம்!... எல்லாரும் சுகம் என்று நினைக்க..கோதாரிப்போன கொரோனா வந்து லட்சக்கணக்கானவர்களை தின்று விழுங்கி வருவதை எண்ணி என்னைப் போல நீங்களும் ஆறாத்துயரில்தான் இருப்பீர்கள். முதற்கண் அனைத்து உயிர்களுக்கும் அஞ்சலி.. அதுசரி சினிமா படம் போல 1, 2, 3 வெளியீடு மாதிரியல்லோ கொரோனாவும் 1, 2, 3 எனத்தொடரும்போல கிடக்குது. தொடர்வதும் கட்டுப்படுத்துவதும் எங்கட கையில்தான் இருக்குது பாருங்கோ!.

இல்லை?.. இல்லை!.. நாங்கள் சுகாதார வழிமுறைகளைக் கடைப்பிடிக்க மாட்டோம்?..கொண்டாட்டங்கள் வைப்போம்?.. கோவில் திருவிழாக்கள் நடத்துவம்?..கண்டபடி எல்லா இடமும் பாதுகாப்பு இல்லாமல் திரிவம் என்று நடந்தால் எப்படி இந்தக் கிருமித்தொற்றிலிருந்து விடுபடமுடியும். எல்லாரும் கொஞ்சம் யோசியுங்கோ..தவறினால் கண் மூடவேண்டியதுதான்... நீங்கள் கண்மூடுவதுடன் மற்றவர்களின் கதையையும் முடிக்கப் போகிறீர்கள் என்பதைக் கொஞ்சம் கவனியுங்கோ ராசாக்கள்!..ராசாத்திகள்!..

இப்ப கொரோனா என்ற அச்சம் குறைந்து வருவது எனக்கும் தெரிகிறது. எத்தனை நாட்களுக்குத்தான் பயந்து..பயந்து வாழ்வது. வாழ்வா?..சாவா?..என்ற போராட்டமாகிப் போச்சுது. இப்ப அனேக மக்கள் கொரோனாவுடன் பழக்கப்பட்டு, அதோடு வாழவும் பழகிவிட்டார்கள் போலத்தான் கிடக்குது. வாழவும் வேண்டும். வேறு வழி கிடையாது. கண்ணுக்குத்தெரியாத சிறிய கிருமி இன்று உலகைப்புரட்டிப்போட்டு வருகிறது. இதை அழிக்கவும் ஒழிக்கவும் முடியாமல் உலகம் தத்தளித்துக்கொண்டு இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரி..சரி...பிறப்பும் இறப்பும் நியதி என்று சொன்னாலும்..இது அநியாயமாக இந்தக் கொரோனாக் கிருமிகள் இடைநடு வயதுகளில எத்தனை ஆயிரம் பேரை அள்ளிக்கொண்டு போய்விட்டுதுகள். இந்தப் புலம்பலும் மரணங்களும் நீளும்போலதான் இந்த மயிலனுக்குப் படுகிறது பாருங்கோ!.. கிறிஸ்மஸ் புதுவருடம் தைப்பொங்கல் எல்லாம் அடுக்கடுக்காக வருகுது எல்லாத்தையும் எல்லாரும் சந்தோசமாகக் கொண்டாட இந்தக் கொரோனா கிருமிகள் விடுமோ?.. எல்லாம் எங்கட கையில்தான் கிடக்குது என்றதை கட்டாயம் ஒருவரும் மறந்து விடவேண்டாம்.

இந்த கொரோனாக் காலத்தில வேலையும் குறைவு, சம்பளமும் குறைவு. நேரம் பாஸ்பண்ணுவதற்காக நாட்டு நடப்புகளைக் கொஞ்சம் உங்களோடு அலசலாம் என்று யோசிக்கிறன். இப்பதானே வட்சப், வைபர், பேஸ்புக், பேஸ்ரைம் அது இது என உலகம் முழுவதும் கொட்டிக்கிடக்கின்றன. எல்லாவற்றையும் நன்மைக்குப் பாவியுங்கோ என்றுதான் அவங்கள் கண்டுபிடித்து வெளியில விட நாமோ ஏதோ.. ஏதோ...என்று பாவிக்கிறோம். இந்த சமூக ஊடகங்களைப் பாவித்து கல்வியை, அறிவை, பொதுவிடையங்களை, ஆரோக்கியத்தைப் பெற்று நீடுழி வாழுங்கோ என்று அவங்கள் செய்ய..நாமோ தேவையில்லாத பல விடையங்களுக்குப் பாவிக்கின்றோம்.

குறிப்பாக இந்த பேஸ்புக்பற்றி உங்களோடு கொஞ்சம் கதைப்பம் என்று இந்த மயிலன் யோசிக்கின்றான். நேரமிருந்தால் படித்துப் பாருங்கோ.. பேஸ்புக்கில் பல்லாயிரம் நல்ல விடையங்கள் இருக்கின்றன. அரியபல விடையங்கள், காட்சிகள், காணொளிகள், பொக்கிஷங்கள், நட்புகள், கண்டுபிடிப்புகள், விஞ்ஞான, அறிவியல் செய்திகள், கதைகள், கவிகள், கட்டுரைகள், சிறுகதைகள் இப்படியாகக் கடல்போல பரந்து விரிந்து கிடக்கின்றன. இவற்றைத் தேடிப்படித்துப், பார்த்து வாழ்வில் முன்னேற்றப் பாதைக்குச் செல்லவேண்டும் என்பதே இதன் நோக்கமாகும்.

ஆனால் இன்று உலகில் என்ன நடக்கின்றது. எல்லாம் எதிர்மாறாகவே நடக்கிறது. என்ன நோக்கத்துக்காக இது இருக்கிறதோ அதை எல்லாம் புறந்தள்ளி..எதிர்மறையான விடையங்களையே பலர் வெளியிட்டு பணம் சம்பாதிப்பதும் புகழ்சம்பாதிப்பதும் ஒருபுறம்..வயது வேறுபாடின்றி பல தீய செயல்களையும் படங்களையும் பதிவேற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து, வாழும் சமூகத்துக்குப் பெரும் தீங்கிளைக்கிறார்கள். வளரும் சமூகத்தை வேறு திசைகளுக்குக் கொண்டு செல்கிறார்கள். விஞ்ஞானம் உச்ச வளர்ச்சிகண்டிருந்தாலும் இப்படிப்பட்ட தீமைகளையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளன என்பது உண்மையான விடையமாகும்.

நம்மவர்களை எடுத்துப்பார்த்தால் இது பெரிய கூத்து பாருங்கோ.. இந்தப்பேஸ்புக்கில் ஆக்கபூர்வமான ஆக்கங்களைப் பலர் எழுதுவதும் இல்லை. படிப்பதும் இல்லை. சிலர் அப்படியல்ல அவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். பலரோ தமது பெயர், புகழ், கெட்டித்தனம் காட்டுவதும் பல நூறுபேர் வாழ்த்துவார்கள் என்று எதிர்பார்ப்போடு எதை..எதை எல்லாம் எழுதுகிறார்கள். மலையில், ஆற்றில், குளத்தில், பூந்தோட்டத்தில், இயற்கை அழகுக்காட்சிகளுடன் நின்று படங்களை எடுத்துப் பதிவிட்டு விட்டால் சரி..அல்லது தனது சமூகக்கடமை முடிந்துவிட்டது என்று எண்ணிப் பெயருக்கும் புகழுக்கும் அலையாய் அலைபவர்களை இந்த மயிலனும் பார்த்துப் பல தடவை சிரிக்கிறதா?.. அழுகிறதா?.. என்று விழி பிதுங்கி யோசிக்கிறான்.

சிலருக்கு இது ஏதோ நாளாந்த தொழிலாகவும் போட்டுது பாருங்கோ?..அங்க இங்க என்று படங்களையும் காணொளிகளையும் தேடி எடுத்து அதற்குள் தங்களுடைய படங்களையும் பொருத்தி ஏதோ சினிமாக் கீரோக்கள் மாதிரி எல்லோ படங்காட்டுகினம்.இதைவிட அறிவுரைகள், பொன்மொழிகள், செம்மொழிகள் போன்றவற்றை எங்கெல்லாம் திருடி எடுத்துப் பதிவேற்றம் செய்து தாம் எழுதியவை என்றும் சிலர் அலட்டிக் கொள்கிறார்கள். அப்பப்பா இந்தத் திருக்கூத்துகளைப் பார்த்த எனக்கு என் மண்டையை எங்கு?.கொண்டு சென்று மோதலாம் என்ற ஆதங்கம்தான்.

இதைவிட சூம் கமரா காணொளிகளில் நம் மொழிபேசுவோர்களில் அட்டகாசமான கேள்விகள், கவிகள், ஆற்றல்கள், அறிவுரைகள் எல்லாம் காது புளித்துவிட்டது. என்ன எல்லாம் சும்மாதானே?.. காசு செலவழிக்காமல் பெயரும் புகழும் விண்ணர், வித்தகர், புலவர், புரவலர் எனப் பட்டங்களும் கிடைத்துவிடும் என்ற நோக்கம்தான். இது பற்றி நிறைய எழுதலாம். எல்லாப் புகழும் இறைவனுக்கே அல்ல எல்லாப் புகழும் சிலருக்கு இந்தப் பேஸ்புக்கால் கிடைத்தது என்று கூறிக்கொண்டு அடுத்த முறை இன்னொரு விடையத்தோட மயிலன் வருவான்...நத்தார்!..புதுவருட!.. வாழ்த்துக்கள்!...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை நெறிகள்...

-ஒவ்வொரு நாளும் குறைந்தது மூன்றுபேரையாவது பாராட்டு.
-மாதம் ஒரு முறையாவது சூரிய உதயத்தைப்பார்.
-"நன்றி", "தயவுசெய்து"-இந்த வார்த்தைகளை முடிந்தவரை அதிகம் உபயோகி.
-உன் வசதிக்கும் தகுதிக்கும் உட்பட்டு வாழக் கற்றுக்கொள்.
-உன்னை மற்றவர்கள் எப்படி நடத்த வேண்டும் என்று விரும்புகிறாயோ, அப்படியே நீயும் மற்றவர்களை நடத்து.
-நல்ல நண்பர்களைத் தேடிக்கொள்.பழைய நல்ல நண்பர்களை மறந்துவிடாதே.
-தொழில் ரகசியங்களைக் கற்பதில் நேரத்தை வீணடிக்காமல் தொழிலைக் கற்றுக் கொள்.
-உன் தவறை தயங்காமல் ஒத்துக்கொள். தைரியமாக இரு.
-ஒரு போதும் மற்றவரை ஏமாற்றாதே. கவனிக்கக் கற்றுக்கொள்.
-சந்தர்ப்பங்கள் அமைதியாக சில நேரம் தான் வரும்.
-கோபமாக இருக்கும்போது ஒரு முடிவும் எடுக்காதே.
-உன் தோற்றத்தில் எப்போதும் கவனம் இருக்கட்டும்.
-மேலதிகாரிகளையோ பெரியவர்களையோ சந்திக்க செல்லும்போது காரணத்துடனும் நம்பிக்கையுடனும் செல்.
-ஒரு வேலை முடியுமுன் கூலி கொடுக்காதே.
-வதந்தி,வம்பு பேசுவதைத் தவிர்.
-போரில் வெற்றி பெற சண்டையில் விட்டுக்கொடு.
-ஒரே சமயத்தில் நிறைய வேலைகளை ஒத்துக் கொள்ளாதே.பணிவாக மறுத்து விடுவதில் தவறில்லை.
-வாழ்க்கை எப்போதும் ஒரே சீராக இருக்கும் என்று எதிர்பாராதே.
-பொருட்கள் வாங்கும்போது சிறந்ததையே தேர்ந்தெடு.
-"எனக்குத் தெரியாது", 'மன்னிக்கவும்'', என்பதை சொல்லத் தயங்காதே.
-பெண்களை மதிக்க கற்றுக்கொள்.
-அநியாயம் நடந்தால் தட்டிக் கேள் மறுக்கப்பட்டால் மன்னிக்காதே...!!
-வாழ்க்கையில் முன்னேற உண்மையும் மனத்தைரியத்தையும் வளர்.
-கோபமாக இருப்பவரிடம் கொஞ்சம் விலகி இரு..மௌனமாக இருப்பவரிடம் அறவே விலகி இரு.
-சுயநலம் என்ற நெருப்பு தன்னையே பொசுக்கிவிடும்.
-உழைப்பு, துக்கம், மகிழ்ச்சி இவைகளை மனிதன் அனுபவிக்கப் பிறந்தவன்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50 வயதிற்கு மேல்...

நீங்கள் 50 வயதிற்கு மேற்பட்டவராக இருந்தால், உங்களுக்கான ஆரோக்கிய குறிப்புகள்
(அ) இரண்டு விஷயங்களை உங்களால் முடிந்தவரை சரிபார்த்துக் கொள்ளுங்கள். (1) உங்கள் இரத்த அழுத்தம் உங்கள் இரத்த சர்க்கரை
(ஆ)உங்கள் உணவுகளில் குறைந்தபட்சமாகக் குறைக்க மூன்று விஷ யங்கள்: (1) உப்பு (2) சீனி (3) மா சத்து நிறைந்த உணவுகள்
(இ). உங்கள் உணவுகளில் அதிகம் சேர்க்க நான்கு விஷயங்கள்
(1) பசுமை காய்கறிகள்(2) பீன்ஸ் (3) பழங்கள் (4) கொட்டைகள்,புரதம்
(ஈ) நீங்கள் மறக்க வேண்டிய மூன்று விஷயங்கள்:
(1) உங்கள் வயது(2) உங்கள் கடந்தகால துன்பங்கள் 3) உங்கள் குறைகள்.
(உ) நீங்கள் எவ்வளவு பலவீனமாக இருந்தாலும் அல்லது எவ்வளவு வலிமையாக இருந்தாலும் நான்கு விஷயங்கள் உங்களிடம் இருக்க வேண்டும்
(1) உன்னை உண்மையாக நேசிக்கும் நண்பர்கள்
(2) உங்களை கவனிக்கும் குடும்பம்
(3) நல்ல எண்ணங்கள்
(4) ஒரு சூடான வீடு
(ஊ)ஆரோக்கியமாக இருக்க நீங்கள் செய்ய வேண்டிய ஐந்து விஷ யங்கள்: (1)விரதம்(2) புன்னகை, சிரித்தல் (3) உடற்பயிற்சி4) உங்கள் எடையைக் குறைத்தல் (5) பொதுச் சேவை செய்தல்.
(எ)நீங்கள் செய்ய வேண்டிய ஆறு விஷயங்கள்:
(1) நீங்கள் சாப்பிட பசி வரும் வரை காத்திருக்க வேண்டாம்
(2) நீங்கள் குடிக்க தாகம் வரும் வரை காத்திருக்க வேண்டாம்
(3) நீங்கள் தூங்க தூக்கம் வரும்வரை காத்திருக்க வேண்டாம்
(4) நீங்கள் ஓய்வெடுக்க சோர்வாகும் வரை காத்திருக்க வேண்டாம்
(5) மருத்துவ பரிசோதனைகளுக்கு செல்ல நீங்கள் நோய்வாய்ப்படும் வரை காத்திருக்க வேண்டாம், இல்லையெனில் நீங்கள் பிற்காலத்தில் வருத்தப்படுவீர்கள்
6) உங்கள் கடவுளிடம் ஜெபிப்பதற்கு முன்பு உங்களுக்கு பிரச்சினை வரும் வரை காத்திருக்க வேண்டாம் .

நான் பகிர விரும்புகிறேன், ஏனெனில் நான் 50 க்கு மேல் இருக்கிறேன், தயவுசெய்து பத்திரமாக இருங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்ணீரின் அருமை!..

இரவு நேரங்களில் எழுந்திருக்க வேண்டும் என்பதால் எத்தனை பேர் படுக்கைக்குச் செல்வதற்கு முன்பு எதையும் குடிக்க விரும்பவில்லை என்று கூறுகிறார்கள்? எனக்குத் தெரியாத வேறு விஷயம் ... மக்கள் ஏன் இரவில் இவ்வளவு சிறுநீர் கழிக்க வேண்டும்? இதய மருத்துவரிடமிருந்து (இருதயநோய் நிபுணர்) பதில்: 'நீங்கள் நிமிர்ந்து நிற்கும்போது பொதுவாக கால்களில் வீக்கம் இருக்கும், ஏனென்றால் ஈர்ப்பு உங்கள் உடலின் மிகக் குறைந்த பகுதியில் தண்ணீரை வைத்திருக்கிறது.

இப்போது நீங்கள் படுத்துக் கொண்டால், உங்கள் கீழ் உடல் (துண்டு, கால்கள் போன்றவை) உங்கள் சிறுநீரகங்களுடன் சமமாக இருந்தால், சிறுநீரகங்கள் தண்ணீரை அகற்றுகின்றன, ஏனெனில் இது மிகவும் எளிதானது. அது கடைசி அறிக்கைக்கு பொருந்துகிறது! உங்கள் உடலில் இருந்து நச்சுகளை வெளியேற்றஎங்களுக்கு குறைந்தபட்சம் தண்ணீர் தேவை என்று எனக்குத் தெரியும், ஆனால் இது எனக்கு புதியது! பிறகு தண்ணீர் குடிக்க சரியான நேரம் எது? அதை நன்கு அறிவது மிகவும் முக்கியம்.

இதய நிபுணரின் வார்த்தைகள் ....! குறிப்பிட்ட நேரத்தில் தண்ணீர் குடிப்பது, உடலில் அதன் விளைவுகளை அதிகரிக்கிறது:

1. எழுந்த பிறகு இரண்டு (2) கிளாஸ் தண்ணீர் - உள் உறுப்புகளை செயல்படுத்த உதவுகிறது
2. உணவுக்கு 30 நிமிடங்களுக்கு முன் ஒரு (1) கிளாஸ் தண்ணீர் - செரிமானத்திற்கு உதவுகிறது
3. குளிப்பதற்கு முன் ஒரு (1) கிளாஸ் தண்ணீர் - இரத்த அழுத்தத்தைக் குறைக்க உதவுகிறது (யாருக்குத் தெரியும் ???)
4. படுக்கைக்கு முன் ஒரு (1) கிளாஸ் தண்ணீர் - பக்கவாதம் அல்லது மாரடைப்பைத் தடுக்கலாம் (தெரிந்து கொள்வது நல்லது!)
5. கூடுதலாக, படுக்கை நேரத்தில் தண்ணீர் இரவில் கால் பிடிப்பைத் தடுக்க உதவுகிறது.
6. கால் தசைகள் சுருங்கும்போது ஈரப்பதத்தைத் தேடுகின்றன மற்றும் சார்லி ஹார்ஸ் (கன்று பிடிப்பு) மூலம் உங்களை எழுப்புகின்றன.

ஒவ்வொரு நபரும் 10 பேருக்கு இந்த செய்தியைப் பகிர்ந்துகொண்டால் குறைந்தபட்சம் 1 உயிர் காப்பாற்றப்படலாம் என்று ஒரு இருதயநோய் நிபுணர் கூறினார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடலைப்பற்றித்தெரிந்துகொள்வோம்!...

எமது உடலிலுள்ள வேகங்களைக் கட்டுப்படுத்துவதனால் பல விளைவுகள் ஏற்படுகின்றன. இதனால் நமது ஆயுளும் குறைவடைவதாக மருத்துவக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. நமது உடலானது 14 வகையான வேகங்களைக் கட்டுப் படுத்துகின்றது. இப்படியாகக் கட்டுப்படுத்துவதால் பல பாதிப்புகளை எதிர்கொள்ள நேரிடும். எனவே அவற்றின் கட்டுப்படுத்துதலை கூடிய அளவு தவிர்த்துக் கொள்ளல் அவசியமாகும். இந்தச் செயற்பாடுகளைப் பார்ப்போம்..

01-நமது உடலில் இருந்து இயற்கையாக வெளியேறும் வாயு, ஏப்பம்.

| | | |
|---|---|---|
| 02-தும்மல் | 03-சிறுநீர் | |
| 04-மலம் | 05-கொட்டாவி, மூச்சு | |
| 06-பசி | 07-நீர் வேட்கை, | |
| 08-வாந்தி | 09-தாகம் | |
| 10-இளைப்பு, | 11-பெருமூச்சு | |
| 12-தூக்கம் | 13-கண்ணீர் | 14- விந்து |

---

# நோய் எதிர்ப்பு சக்தியைத் தரும் நெல்லிக்காய்

அப்பிள் பழத்தை விட சக்தி வாய்ந்ததாக நெல்லிக்காய் விளங்குகிறது. மேலும் ஈரலைத் தூண்டி, நன்கு செயற்பட வைத்து கழிவுகளை வெளியேற்ற இது உதவுகிறது.வேறு எந்த வகை காய்கறி, பழங்களிலும் இல்லாத அளவுக்கு நெல்லிக்காயில் விற்றமின் "சி" 600 மில்லிகிராம் உள்ளது. கல்சியம் 50 மில்லிகிராம், பொஸ்பரஸ்-20 மில்லிகிராம், இரும்புச்சத்து 1.2 மில்லிகிராம் இருக்கிறது. தலைமுடி உதிராமல், வளர்ந்து, நரைமுடி தோன்றுவதைத் தவிர்க்கிறது. ஜீரண சக்தியை அதிகரித்து, தாதுக்களை நம் உடல் ஏற்றுக்கொள்ள துணை புரிகிறது. கண்களுக்கு தெளிவைக் கொடுக்கிறது.

மேலும் நுரையீரலைப் பலப்படுத்தி சுவாச நோய்களைக் கட்டுப்படுத்த உதவுகிறது. நரம்பு மண்டலத்தைத் தூண்டுகிறது. மூளைச் செல்களுக்கு புத்துணர்ச்சியளிக்கிறது. இதனால் மனத்தெளிவு, புத்திக்கூர்மை மற்றும் ஞாபசக்தி உண்டாகிறது. உடல் எடையைக் கூட்டாமல் தசைகளுக்கு பலம் அளிக்கக் கூடிய தன்மை நெல்லிக்காய்க்கு உண்டு. நீரிழிவைக் கட்டுப்படுத்தும் சக்தி நெல்லிக்காயில் உள்ளது. இதில் விற்றமின் "சி " சத்து அதிகம் உள்ளதால் நோய் எதிர்ப்பு சக்தியாகச் செயற்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**ஆளுமையுள்ள பண்பாளனை இழந்துவிட்டோம்!...**
**அமரர் கணபதிப்பிள்ளை பத்மகுணசீலன்**
**தோற்றம்:- 21.05.1942 இலங்கை -- மறைவு:- 26.10.2020 யேர்மனி**

"மண்" அட்டை உள்ப்பக்கத் தொடர்ச்சி...

**கல்வி, கலை, இலக்கிய, எழுத்துப்பணிகள்..**
தமிழ், சிங்கள, இஸ்லாமிய, மலையக நண்பர்களுக்குக் குறைவே இல்லை. தான் வாழ்ந்த இடங்களிலெல்லாம் சகல இன மக்களுடன் ஒற்றுமையாகவும் ஐக்கியமாகவும் வாழ்ந்துகாட்டினார்.இவர் அரச திணைக்களங்களில் கடமைபுரிந்த காலத்தில் திணைக்களங்களின் தமிழ், சிங்கள, ஆங்கில வெளியீடுகள், சஞ்சிகைகள், பிரசுரங்கள் போன்றவைகளின் ஆசிரியராகவும் செயற்பட்டிருக்கிறார். தினகரன், வீரகேசரி பத்திரிகைகளுக்கும் சஞ்சிகைகளுக்கும் அவ்வப்போது எழுதிவந்திருக்கிறார்.

பின்பு நாட்டில் ஏற்பட்ட பிரச்சனைகளால் 1986ம் ஆண்டு அகதியாக யேர்மனிக்கு வந்து சேர்ந்தார். யேர்மனியில் வாழ்ந்த காலத்தில் தான்வாழ்ந்த கீல் நகரின் தமிழ்ப்பிள்ளைகளின் எதிர்கால நலனில் அக்கறைகொண்டு தமிழ்ப்பாடசாலை ஒன்றை உருவாக்கிப் பிள்ளைகளுக்குத் தமிழ் கற்பித்தார். வருடாவருடம் பல போட்டிகளை நடாத்தி தனது செலவில் பரிசில்களை வேண்டிக்கொடுத்து கல்விச் சமூகத்துக்குப் பெரும் பங்காற்றியிருக்கிறார்.யேர்மனியில் வெளிவந்த வெளிவந்துகொண்டிருக்கின்ற பல சஞ்சிகைகள் பத்திரிகைகளுக்கு அவ்வப்போது பல ஆக்கங்களை எழுதியிருக்கிறார். யேர்மனி தமிழ்க் கல்விச்சேவையின் (ஐரோப்பா) வளர்ச்சியில் ஆலோசனைகள் வழங்கி வந்தார்.ஐரோப்பிய பல தமிழ் வானொலிகளில் பல தடவைகள் தனது அனுபவங்களையும் ஆளுமைகளையும் வெளிப்படுத்தியிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்குறள்...

உலகப்பொதுமறையாம் திருக்குறளின் சிறப்பை உலகமெல்லாம் பரப்ப அரும்பாடுபட்டிருக்கிறார். திருக்குறளைப் பாதுகாத்து உலகெல்லாம் பரவச்செய்ய வருடாவருடம் திருக்குறள் போட்டிகளை நடாத்தி தனது செலவில் பரிசில்களை வேண்டிக்கொடுத்து தமிழ்க் கல்விச் சமூகத்துக்குப் பெரும் பங்காற்றியிருக்கிறார். தான் வாழ்ந்த கீல் நகரில் திருக்குறளை ரஷ்ஷிய, டொச் மொழிகளில், மொழி மாற்றம் செய்து ரஷ்ஷிய, போலந்து நாட்டவர்களுக்கும் யேர்மனிய நாட்டவர்களுக்கும் திருக்குறளின் சிறப்புகளைப் போதித்திருக்கிறார்.

யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்துடன்..

இச்சங்கத்தின் அங்கத்தவராகச் சுமார் 15 ஆண்டுகள் இருந்திருக்கிறார். இச்சங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட பல விழாக்களில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றியிருக்கிறார். இலங்கைப் இனப்போர் முடிந்து (18.05.2009) இலங்கையில் நடைபெற்ற அகில உலக எழுத்தாளர் மாகாநாட்டில்(10.01.2011) யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சார்பில்கலந்துகொண்டு சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தினார். இப்படியாக இவர் செய்த பணிகளின் சிறப்பைக் கண்ட இச்சங்கம் "வாழும்போதே தமிழுக்குப் பணிபுரிந்தவர்களைக் கௌரவிக்க வேண்டும்" என்ற நல் நோக்கில் யேர்மனிவாழ் ஐந்து முதிய எழுத்தாளர்களைக் சிறப்பிக்கும் நிகழ்வில் (27.04.2014) இவரையும் அழைத்து பொன்னாடை பூமாலை அணிந்து பாராட்டிக் கௌரவம் செய்த பொன்னான நிகழ்வும் நடந்தது.

"மண்" சஞ்சிகையோடு பணிகள்...

யேர்மனியில் கடந்த 30 வருடங்களுக்கும்மேலாக வெளிவந்து கொண்டிருக்கும் "மண்" கல்வி, கலை, இலக்கிய, சமூக சஞ்சிகையின் மிக நீண்டகால வாசகரும் எழுத்தாளருமான இவர் பல படைப்புக்களை எழுதியிருக்கிறார். வயது முதிர்ந்த காலத்திலும் நோய்வாய்ப்பட்டிருந்த காலத்திலும் அவர் தனது பேனாவுக்கு ஓய்வு கொடுக்கவில்லை. தான் இச்சமூகத்தில் வாழ்ந்ததற்கு அர்த்தம் வேண்டும் என்ற நோக்கால் பேனாபிடித்து எழுதமுடியாத சூழ்நிலையிலும் தொலைபேசியில் அவர் சொல்லச் சொல்ல நான் எழுதிக் கணனியில் அச்சுப்பதிவு செய்த நிகழ்வுகள் பல உண்டு. எமது ஆண்டு விழாக்களில் பிரதமவிருந்தினராக அழைத்து கௌரவம் அளித்துப் பாராட்டியிருக்கிறோம்.

மனிதநேயப்பணிகள்..

இலங்கையில் வாழ்ந்த காலத்தில் செஞ்சிலுவைச் சங்கம், சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் சேவை போன்ற தொண்டு நிறுவனங்களிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்று உத்தியோகத்தராகவும் இலங்கையின் பல பாகங்களிலும் வேலை செய்தபடியால் பாதிக்கப்பட்ட தாயக மக்களுக்கு உதவும் பொருட்டு, யேர்மனிய அரச தொண்டு நிறுவனங்களோடு அவ்வப்போது தொடர்புகளை ஏற்படுத்திப் பெரும் உதவிகளைச் செய்திருக்கிறார்.

தனிமனித முயற்சியாக தனது திறமைகளைப் பாவித்து தாயகத்தில் நடக்கமுடியாத நோயாளிகள், மாற்றுத்திறனாளிகள், வறியவர்கள் போன்றவர்களுக்கு உதவும் பொருட்டு இங்குள்ள உதவும் நிறுவனங்களுடன் தொடர்புகளைப் பேணி இரு தடவைகள் கப்பல் மூலமாக நூற்றுக்கும் மேற்பட்ட மூன்று சில்லு வண்டிகள், சைக்கிள்கள், கைத்தடிகள், ஊன்றுகோல்கள், மருத்துவ பாவனைப்பொருட்கள், உபகரணங்கள், மருந்துகள் போன்றவற்றை அனுப்பியிருக்கிறார்.

அவை மட்டுமல்லாமல் தனது சொந்தப் பணத்தை இப்படிப்பட்ட பாதிக்கப்பட்ட மக்களுக்குக்கொடுத்திருக்கிறார். இவரின் முயற்சியால் கைத்தடிகள், ஊன்றுகோல்கள், மருத்துவ பாவனைப்பொருட்கள், உபகரணங்கள், மருந்துகள் போன்றவற்றை அனுப்பியிருக்கிறார். அவை மட்டுமல்லாமல் தனது சொந்தப் பணத்தை இப்படிப்பட்ட பாதிக்கப்பட்ட மக்களுக்குக்கொடுத்திருக்கிறார். இவரின் முயற்சியால் மண் சஞ்சிகையூடாகப் பல தடவைகள் பணம் அனுப்பப்பட்டது. உரியவர்களைச் சென்றடையப் பல வழிகளிலும பணிபுரிந்த மனிதநேயச் செயற்பாட்டாளரை தமிழ் உலகிற்கு எடுத்துக்காட்டவேண்டிய கடமை எமக்கு உண்டு.

மனிதன் பிறந்தான் உண்டான் வாழ்ந்தான், இறந்தான் என்று இருக்காமல் தான் வாழ்ந்த இந்த மனித சமூகத்துக்குப் பல வழிகளிலும் உதவவேண்டும் என்ற நல்நோக்கில் வாழ்ந்துகாட்டிய இந்த முன்னோடியின் வாழ்க்கை எமக்கும் ஒரு பாடமாக அமையும் என எண்ணுவோம். இந்த மாமனிதனின் உன்னத பணிகளை மதிப்போம் போற்றுவோம். அவர் பணிகள் போல நாமும் செய்வோம். இச்சந்தர்ப்பத்தில் இந்த மனிதநேயப்பணியாளனுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்கி நன்றியையும் பாராட்டையும் தெரிவிக்கின்றோம். அன்னாரின் சாத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம். அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு ஆறுதலையும் இரங்கலையும் தெரிவித்துக் கொள்கின்றோம்!...

சாந்தி!...சாந்தி!...

பிரதம ஆசிரியர் "மண்" சஞ்சிகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"மண்"அட்டை உள்பக்கத் தொடர்ச்சி... அமரர் தம்பிமுத்து மார்க்கண்டு..
(09.07.194 - 09.08.2020)

நிலைநாட்டவேண்டிய பொறுப்புக்கள் யாவும் இவர் கையிலேயே இருந்தன. இந்தப்பிரதேசத்தில் வன்னியை நிரந்தரமாகக்கொண்டு பிறந்து வளர்ந்த மக்கள், யாழ் மாவட்டத்திலிருந்தும் பல கிராமங்களிலிருந்து குடியேறிய மக்கள் எனவும் குறிப்பாகத் தீவுப்பகுதிகளின் மக்களே கூடுதலாகக் குடியேறி வாழ்ந்து வந்தனர்.

இவர் மண்பற்று, மொழிப்பற்றுக் கொண்டு செயற்பட்டார். தமிழர் நிலங்களில் தமிழினமும், தமிழும் கோலோச்சி வாழவேண்டும் என்பதில் தாகம்கொண்டு செயற்பட்டார். பல ஏழை மக்களுக்கு அரசகாணிகளைப் பங்கிட்டுக் கொடுத்து அவர்களை வாழவைத்தார். வருடாவருடம் முத்தமிழக்கு விழா எடுத்து கலை விழாக்களைக் கொண்டாடித் தமிழையும் தமிழ் மக்களையும் சிறப்பித்தார். நானும் அந்தப் பிரதேசத்தில் (மல்லாவி-யோகபுரம்) வாழ்ந்தபடியால் இவரைப்பற்றிய விபரங்களை அப்போது அறிந்துகொண்டேன்.

அப்போது நான் யாழ் ஈழநாடு பத்திரிகையின் வன்னிப்பிராந்திய நிருபராகக் கடமையாற்றிக்கொண்டிருந்தபடியால் அவரை அடிக்கடி சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அடிக்கடி என்னை அழைத்து அந்தப் பிராந்தியத்தின் செய்திகளை அவர் கூற, நான் குறிப்பெடுத்து பின்னர் பத்திரிகைக்கு எழுதுவது வழக்கமாக இருந்தது. நான் கடமையாற்றிய கூட்டுறவுத் துறையில் அவர் முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு ஆணையாளராகக் கடமையாற்றியபோது காரியாலய அலுவல்களாக இவருடன் பேசிப் பழகிய அனுபவங்கள் (1977 -1980 காலப்பகுதியில்) பல உண்டு.

"மண்"சஞ்சிகையோடு இவர்....

யேர்மனியில் கடந்த 31 வருடங்களாக இயங்கிவரும் மண் சஞ்சிகைக்காக இவர் பதவியில் இருந்தபோதும் ஓய்வுபெற்றபோதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவகையான உதவிகளைச் செய்து வந்திருக்கிறார். மண் சஞ்சிகையின் நீண்டகால வாசகராகவும் இருந்திருக்கிறார். அவ்வப்போதெல்லாம் எனக்குப் பல அறிவுரைகளையும் ஆலோசனைகளைக் கூறி மண் சஞ்சிகையையும் என்னையும் நல்வழிப்படுத்தியிருக்கிறார். சஞ்சிகைக்குப் பல தடவைகள் பல ஆக்கங்கள் எழுதியிருக்கிறார். இவைமட்டுமல்ல தனது பதவிக்காலங்களிலும் வயதான காலங்களிலும் வடக்கு-கிழக்கு மாகாணத்திலிலுள்ள ஆதரவற்ற சிறார் இல்லங்களைப் பார்வையிட்டு அறிக்கைகளையும் சிபார்சுகளையும அடிக்கடி அனுப்பிக்கொண்டிருந்த படியால் நமது உதவும் பணிகளை சரிவரவும் உத்வேகத்துடனும் செய்யக்கூடியதாக இருந்தமை குறிப்பிடத்தக்க விடையமாகும்.

மண் சஞ்சிகையால் சுமார் முப்பது வருடங்களுக்கு மேலாக தாயக ஆதரவற்ற சிறார்களுக்கு உதவும் எங்களுடைய இந்தப் பணிக்குப் பெரும் உதவியாக இருந்து தாயகத்தின் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதில் எம்மோடு இணைந்திருந்தார். மண் சஞ்சிகையின் 15, 20, 25 ஆண்டு நிறைவு ஆண்டு மலர்களில் இவரின் வாழ்த்துக்கள் அலங்கரித்திருக்கின்றன. அத்துடன் அவ்வப்போது பல கட்டுரைகளையும் எழுதியிருக்கிறார். நல்லதொரு வாசகராகவும் படைப்பாளியாகவும் இவரை அடையாளம் காணக்கூடியதாக இருந்தது.

இன்றுவரை அவரின் மனிதநேயப்பணிகளை எண்ணி வியந்து நோக்குகின்றேன்.இவர் என் மனம் கவர்ந்தவர் என்பதைக் கூறவேண்டும். நல்ல ஒரு நிர்வாகத்திறன் கொண்ட அதிகாரி. மண்ணையும் மக்களையும் தாய்மொழியையும் நேசித்துவந்த பெரியவர். எந்தக்காரியத்தையும் உடனுக்குடன் செய்து முடிக்கும் ஆற்றல் படைத்தவர். இழுத்தடித்து வேலைப்பழுவை வைக்காமல் காரியங்களைச் செய்துமுடிக்கும் இவரின் அனுபவங்கள் எனது வாழ்வில் பல பாடங்களாக அமைந்தன என்பதைப் பெருமையாகக் கூறிக்கொள்கிறேன். ஆகவே இந்த நல் மனம் படைத்த பழுத்த நிர்வாக சேவை அதிகாரியின் மனக்கிடக்கைகள் என் வாழ்வில் பல மாற்றங்களை ஏற்படுத்தின என்பது உண்மையான விடையமாகும்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவர் அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் உறவுகள் நட்புக்களுக்கு எமது சஞ்சிகையின் சார்பில் ஆறுதல் கூறுகின்றோம். மண்ணையும் மக்களையும், மொழியையும் இனத்தையும் ஆழமாக நேசித்த இந்தப் பெருந்தகைக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்!...

பிரதம ஆசிரியர்
மண் கல்வி, கலை, இலக்கிய,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Franch Open – 2020

## பிரான்ஸ் பகிரங்க ரெனிஸ் போட்டி - 2020

உலகில் இடம்பெறும் விளையாட்டுக்களில் ரெனிஸ்போட்டியும் பிரபலமானதாக விளங்குகின்றது. உலகில் பல நாடுகளில் விளையாடப்படும் இவ்விளையாட்டை ஊக்குவிப்பதற்காகப் பல நாடுகளின் விளையாட்டு வீரர்கள் உற்சாகப்படுத்தப்படுகிறார்கள். குறிப்பாக ரெனிஸ் விளையாட்டானது பணக்காரர்களின் விளையாட்டு எனவும் கருதப்படுகிறது. அந்த அளவுக்கு வெற்றியாளர்களுக்குப் பணப் பரிசுகள் வழங்கப்படுகின்றது.

இந்த விளையாட்டில் அவுஸ்திரேலியா, பிரென்ஸ், விம்பிள்டன், அமெரிக்கா பகிரங்கப் போட்டிகள்தான் மிகக்கூடுதலான பணப்பரிசையும் மிகக்கூடுதலான புள்ளிகளையும் வீரர்களுக்கு வழங்கப்படுகின்றது. 1891 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்போட்டி 129 வருடங்களைக் கடந்துள்ளது. கிராண்ட் ஸ்லம் (புசயனௌடயஅ) என்று அழைக்கப்படும் பிரபலமான போட்டிகளாக யுரளவசயடயைெ ழிநஜெ குசயஉொ ழிநஜெ றுஅடிடநனழஜெ ருளு ழிநெ என்பனவே விளங்குகின்றன. இப்போட்டிகளில்தான் மிகக்கூடுதலான பணப்பரிசு வழங்கப்படுகின்றது.

இந்த வருடம் கொரோனா தாக்கத்தால் இங்கிலாந்து விம்பிள்டன் போட்டிகள் நடைபெறவில்லை. மற்றைய மூன்று போட்டிகளும் நடைபெற்றன. இந்த வருடத்தின் இறுதியாக இடம்பெற்ற போட்டி என்றால் பிரான்ஸ் பகிரங்க ரெனிஸ் போட்டியாகும். இப்போட்டி 21.09.2020 தொடக்கம் 11.10.2020 வரை பிரான்ஸில் நடைபெற்று முடிந்தது. இப்போட்டி பற்றிய குறிப்பைப் பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆண்கள் - றவைல் நடால்** (Rafael Nadal)

**34 வயதுடைய (3.6.1986) இவர் 2001ம் ஆண்டு தொடக்கம் ரெனிஸ் விளையாடிவருகிறார். 209 வாரங்கள் உலக தரவரிசையில் முதலாவது இடத்தில் இருந்திருக்கிறார். இதுவரை இவர் பெற்ற பரிசுப்பணம் 12.10.44.734** US Doller **களாகும்**

**ஆண்களுக்கான போட்டிகளில் ஸ்பெயின் நாட்டு வீரரான றவைல் நடால்** (Rafael Nadal) **வெற்றி பெற்றார். இவர் பிரென்ஸ் பகிரங்கப் போட்டியின் வரலாற்றில் இக்கிண்ணத்தை 13 தடவைகள் பெற்றுச் சாதனை படைத்துள்ளார். இவர்தான் இந்த வெற்றிக் கிண்ணத்தைக் கூடுதலாகப் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இது மட்டுமல்ல கிறாண்ட்ஸ்லம்** (Grand Slam) **என்று அழைக்கப்படும் உலகப்பெரு வெற்றியில் 20 வெற்றிகளைப் பெற்றிருந்த சுவீஸ் நாட்டு வீரர் றோஜர் பெடரர்** (Roger Federer) **பெற்ற வெற்றிகளைச் சமம்படுத்தியுள்ளார் (20 வெற்றிகள்)**

**இவர் பெற்ற கிறாண்ட் ஸ்லாம்** (GrandSlam) **வெற்றிகள்..**

| | | | |
|---|---|---|---|
| -Australian open | – 1 | தடவை | (2009) |
| -Wimbledon | – 2 | " | (2008,2010) |
| -US Open | – 4 | " | (2010, 2013, 2017, 2019 |
| -Franch Open | – 13 | " | (2005,2006,2007,2008,2010,2011,2012,2013,2014, 2017,2018,2019,2020) |
| Total | – 20 | " | |

**பரிசுப்பணம்..**


**11.10.2020 அன்று நடைபெற்ற இறுதிப்போட்டியில் சேர்பியா நாட்டு வீரரும் உலகின் 1வது இடத்தில் இருப்பவருமான ழேஎயம ஞழமழஎளைஉ என்பவருடன் மோதி 6-3, என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றார். இந்த வெற்றியின் மூலம் இவர் பெற்ற பரிசுப்பணம் 16.00.000 யூரோ (16 லட்சம்) தோல்வியடைந்தவருக்கு வழங்கப்பட்ட பரிசுப்பணம் 8.00.000 யூரோ (8 லட்சம்)**

**பெண்கள்..**

**பெண்களுக்கான ரெனிஸ் இறுதிப் போட்டியில் அமெரிக்க வீராங்கனை சோபியா கெனின்** (Sofia Kenin) **என்பவரும் போலந்து நாட்டவரான 19 வயதுடைய இகா சுவெற்றிக்** (Iga Swiatek) **என்பவரும் மோதியதில் இகா சுவெற்றிக் முதல் தடவையாக பிரென்ஸ் வெற்றிக்கிண்ணத்தை 6 – 4, 6 – 1 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று 8.00.000(8லட்சம்) யூரோக்களைப் பரிசுப்பணமாக வென்றிருக்கிறார். இந்த வெற்றியின்மூலம் 1வது கிறாண்ஸ்லாம் வெற்றியைப் பதிவு** (Rafael Nadal) **செய்திருக்கிறார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியும் உப ஜனாதிபதியும்...

உலகின் மிகப்பெரும் வல்லரசு நாடான அமெரிக்காவின் 46 வது ஜனாதிபதியைத் தெரிவுசெய்யும் தேர்தல் முடிவுகள் பல இழுபறிகளின் மத்தியில் 07.11-2020 அன்று மாலை உத்தியோகபூர்வமாக வெளியாகின. ஜோ பைடன் அவர்கள் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது.
கடந்த 03-11-2020ல் நடைபெற்ற அமெரிக்க ஜனாதிபதி தேர்தலின் முடிவுகள் உடனடியாக வெளிவராமல் பெரிய சர்ச்சையைத் தோற்றுவித்ததற்கு தற்போதய ஜனாதிபதியான டொனால்ட் ட்றம் அவர்களே காரணம் என அனைவரும் குற்றம் சாட்டினர். கொரோனா காரணமாக பெரும்பான்மையான மக்கள் தபால் மூலம் வாக்களித்தபடியால் வாக்குகள் எண்ணும் பணிகள் தாமதமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. இதற்கிடையில் தனது தோல்வியை ஏற்றுக்கொள்ளாத முன்னாள் ஜனாதிபதி ட்றம் பல வழிகளிலும் இடையூறு விளைவித்ததாக சமூக ஊடகங்கள் கருத்துக்களை வெளியட்டன. இருப்பினும் வாக்கு எண்ணும் வேலைகள் நிறைவடைந்து 07.11.2020 அன்று மாலையே தேர்தல் முடிவுகள் வெளியாகின.-முடிவுகள்..

| | ஜோ பைடன் | | டொனால்ட் ட்றம் |
|---|---|---|---|
| -கிடைத்த வாக்குகள் | 7.63.43.332 | - | 7.14.44.567 |
| -கிடைத்த வாக்கு வீதம் | 51.0 வீதம் | - | 47.3 வீதம் |
| -வெற்றிபெற்ற இடங்கள் | 306 | - | 232 |

-ஒருவர் 270 இடங்களைப் பெற்றால் அவரே வெற்றி என்ற நிலையில் ஜோ பைடன் அவர்கள் வெற்றி உறுதிப்படுத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-ஜோ பைடன் அவர்கள் டொனால் ட்றம்மைவிட 57.25.824 வாக்குகள் (சுமார் 57 லட்சம்) அதிகமாகப் பெற்று வெற்றி பெற்றார்.
-டொனால்ட் ட்றம் மிக அதிகமாக வென்ற இடம்..Wyoming மாவட்டம்
டொனால்ட் ட்றம் -70.4 வீதம்
ஜோ பைடன் -26.7 வீதம்
-ஜோ பைடன் மிக அதிகமாக வென்ற இடம்.. Vermont மாவட்டம்
ஜோ பைடன் - 66.4 வீதம்
டோனால்ட் ட்றம் - 30.8 வீதம்
ஜோ பைடன் -Jeo Biden
-முதன்முறையாக ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயகக் கட்சியில் (Democratic) போட்டியிட்டு வெற்றிபெற்றுள்ளார்.
-2001 - 2009 காலப்பகுதியில் (பராக் ஒபாமா அரசில்) அமெரிக்காவின் துணை ஜனாதிபதியாகப் பதவி வகித்தவர்.
-20.11.1942 (78வயது) பிறந்த இவர் ஒரு பட்டதாரி, வழக்கறிஞர், எழுத்தாளர், அரசியல்வாதி என அனுபவம் கொண்டவர். அமெரிக்க வரலாற்றில் இவர்தான் அதிகூடிய வயதில் ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ளார்.
-அமெரிக்க தேர்தல் வரலாற்றில் இவர்தான் அதிகூடிய 7.86.62.167 (7.8கோடி) வாக்குகளைப் பெற்று புதிய சாதனையைப் படைத்திருக்கின்றார்.
-01.03.1973 - 20.01.2009 வரை மாநில ஆளுநராகவும் பதவி வகித்திருக்கிறார்.
முதலாவது மனைவி - நைய்லியா ட்ரேசி (Neilia Hunter)
-இவரை 1962 ம் ஆண்டு திருமணம் செய்தார். அவர் 1972ம் ஆண்டு இறந்துவிட்டார்.
-இரண்டாவது மனைவி - ஜில் ஜேக்கப்ஸ் (Jill Jocobas)
ஆண்டு திருமணம் செய்து 4 பிள்ளைகளுடன் வாழ்ந்து வருகிறார்.
(Ashley, Naomi, Beau, Hunter )
சாதனை...
-இவர் இத்தேர்தலில் வெற்றிபெற்றதால் இவர்தான் அமெரிக்க வரலாற்றில்
-அதிகூடிய வயதில் (78 வயதில்) ஜனாதிபதியாகத் தெரிவானவர் என இடம்பிடித்துள்ளார்.
-அமெரிக்க அரசியல் வரலாற்றில் கடந்த 30 ஆண்டுகளுக்குப் பின்பு பதவியிலிருந்த ஜனாதிபதி தோல்விகண்டார். (டொனால் ட்றம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

US Election - 2020புதிய ஜனாதிபதியும் உப ஜனாதிபதியும் 20-01-2021 திகதியில் பதவி ஏற்பார்கள்.

-2016 ஜனாதிபதி தேர்தல் முடிவுகள்..

| பெயர் | வெற்றிபெற்ற | வாக்குவீதம் | வாக்குகள்இடங்கள் |
|---|---|---|---|
| Donal Trump | 304 | 46.09% | 6.29.84.825 |
| Hillary Clinton | 227 | 48.18% | 6.58.53.516 |

கமலாதேவி ஹரிஸ் (Kamalydevi Harris)

-அமெரிக்க அரசியல் வரலாற்றில முதன்முறையாக கலப்பினத்துப் பெண் ஒருவர் உப ஜனாதிபதிக்குப் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார்.

-20.10.1964 திகதியில் பிறந்த இவருக்குத் தற்போது வயது 56.

-இவரது தாய் இந்தியா தமிழ்நாட்டைச்சேர்ந்த சியாமளா கோபாலன், தந்தை ஜமேக்கா நாட்டைச் சேர்ந்த டொனால் ஹரிஸ் (Donald Harris) ஆகியோரின் மகளாவர்.தாயும் தந்தையும் பல்கலைக்கழகப் பட்டப்படிப்பை முடித்து தொழில் புரிந்தனர். தாய் சியாமளாவும் தந்தை ஹரிசும் பட்டப்படிப்பு தொழிலுக்காக அமெரிக்கா குடியுரிமைபெற்று வாழ்ந்த பொழுதே காதல் திருமணம் செய்துகொண்டனர். இவர்களுக்குப் பிறந்தவர்தான் கமலா. இன்னொரு மகள் மாஜா ஹரிஸ் (Maya Harris) தாய் சியாமளா இறந்துவிட்டார் (07.04.1938 - 11.02.2009) தந்தை ஹரிசுக்கு இப்பொழுது வயது 82 (23.08.1938) அமெரிக்காவில் வாழ்கிறார்.

-கமலாவின் கணவர் பெயர் டக்ளஸ் எம்கொவ் (Douglas Emhoff) 13.10.1964 ல் பிறந்தவர் தற்போது வயது 56. 2014ல் திருமணம் செய்த இவர்களுக்குப் பிள்ளைகள் இல்லை.

-உப ஜனாதிபதிக்குப் போட்டியிட்ட கமலா ஹரிஸ் அவர்கள் அமெரிக்காவில் பட்டப்படிப்பை முடித்து, வழக்கறிஞராகவும் தலைமை வழக்கறிஞராகவும் கடமையாற்றினார்.

-முன்னர் கலிபோர்ணியா மாநிலத்தின் ஆளுநராகவும் கடமைபுரிந்திருக்கிறார்.

-ஜனநாயகக் கட்சியில் (Democratic) சேர்ந்து அரசியலில் ஈடுபட்டார் அரசியலில் படிப்படியாக முன்னேறி இன்று உப ஜனாதிபதியாக வெற்றிபெற்றிருக்கிறார்.

-இவர் வெற்றிபெற்றதால்..

(1) ஆபிரிக்க, அமெரிக்க மற்றும் ஆசிய (இந்தியா) இனத்தைச் சேர்ந்த ஒருவர் அமெரிக்காவில் உப ஜனாதிபதி என்ற இடத்தைப் பெறுகிறார்.

(2)அமெரிக்க வரலாற்றில் 1 வது பெண் துணை ஜனாதிபதி என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Nobel Prize -2020 நோபல் பரிசுகள்....

சுவீடன் நாட்டவரான நோபல் என்பவரின் நினைவாக ஆண்டுதோறும் வழங்கப்படும் இந்தப் பரிசு வழங்கும் திட்டம் 1901ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு தற்போது 118 வருடங்கள் நிறைவுகண்டுள்ளன. இந்த ஆண்டு வழங்கப்பட்ட நோபல் பரிசுகளைப் பெறுபவர்களின் விபரம்.

1-பௌதீகம்(இயற்பியல்) Physics
-Roger Penrose -UK - ஆண்
-Reinhard Genzel -Germany - ஆண்
-Andrea Ghez - USA - பெண்

2-இரசாயனம் (வேதியல்) Chemistry
-Emmanuelle Charpentier-France - பெண்
-Jennifer A. Doudna-USA - பெண்

3-மருத்துவம் / உடற்கூற்றியல் Physiology or Medicine
-Harvey J. Alter -USA - ஆண்
-Michael Houghton - UK - ஆண்
-Charles M. Rice -USA - ஆண்

4-இலக்கியம் Literature
- Louise Glück-USA - பெண்

5-சமாதானம் Peace Prize - World Food Programme (WFP)
உலக உணவுத் திட்டம் (ஐக்கியநாடுகள்சபை)

6- பொருளாதாரம் Economic
-Paul R. Milgrom -USA - ஆண்
-Robert B. Wilson-USa - ஆண்

## 1901 - 2020

-இந்த வருடம் 11 தனிநபர்களுக்கு வழங்கப்பட்டதில் 7 ஆண்களுக்கும் 4 பெண்களுக்கும் இப்பரிசு வழங்கப்பட்டன.
-118 வருட காலத்தில் 930 தனிநபர்களுக்கு இப்பரிசு வழங்கப்பட்டன. 873 ஆண்களுக்கும் 57 பெண்களுக்கும் வழங்கப்பட்டன
-ஒரே ஆண்டில் அதாவது 2009ல் 5 பெண்களுக்கும் 2018, 2020 ஆண்டுகளில் 4 பெண்களுக்கும் இப்பரிசு வழங்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்து பிறப்பு விழா...

(ஜெயா நடேசன்)



கிறிஸ்து பிறப்பு விழா ஒரு விடுதலை விழா, நம்பிக்கை விழா, மகிழ்வின் விழா. இறைமகன் மனிதனாக மண்ணில் பிறந்ததை மீண்டும்..மீண்டும்..கொண்டாடி, செபித்துக் கொண்டாடுவதன் மூலம் விழுந்த மனிதன் மீண்டும் எழுந்து வாழமுடியும் என்ற நம்பிக்கையை அவன் வாழ்வில் கொடுக்கும் விழாவாகும்.

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் கூறப்பட்ட இறைவனின் வாக்கு தூதர் கபிரியேல் மரியாவிடம் "தூய ஆவி உம்மீது வரும் உன்னத கடவுளின் வல்லமை உம்மீது நிழலிடும்" என்ற வாழ்த்துக்கு மரியா நான் ஆண்டவரின் அடிமை, "உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" என்று பதில் கூறிய பொழுது இயேசு கருவாய் உருப்பெற்றது கிறிஸ்த்து மரியாளில் கருக்கொண்டார் என்றால் இயேசு தெரிந்து கொண்ட உடலைப் பார்க்காமல் அக்குழந்தையினூடாகக் கருக்கொண்டது இறையன்பு என்று எண்ணிப்பார்த்தால் மரியாள் மட்டுமல்ல எல்லா மனிதரும் ஆண்-பெண் பேதமின்றி கிறிஸ்துவைக் கருக்கொள்ளலாம்.

கருவறையில் இல்லை இதய அறையில் கருக்கொண்ட மரியாள் இயேசுவை பிறப்பிப்பதற்கு பத்துமாதங்கள் சென்றன. இயேசுவின் பிறப்பு என்பது பரிசுத்த ஆவியின் பிறப்பு என எண்ணிப்பார்த்தால் தப்பிருக்காது.. பரிசுத்த ஆவி எம் உதரத்தில் அல்ல இதயத்தில் கருக்கொள்ளத் தயாராக உள்ளவர் கருக்கொண்ட இயேசுவை நாம் யோசிக்காவிட்டால் கருக்கலைந்துவிடும். பரிசுத்த ஆவியின் செயற்பாடுகள் நம்மில் நிலைத்திருக்காது. இந்தக் கிறிஸ்மஸ் எம் இதயங்களுக்கு சந்தோஷமாக இருக்குமா?..இறைவன்தான் கண் திறக்க வேண்டும்!..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நத்தார்தினம்...

-கெங்கா ஸ்டான்லி-

இயேசு இப்பூமியில் அவதரித்தநாள் நத்தார் தினமாகக் கொண்டாடப்படுகிறது. இயேசு ஏன் பூமியில் அதுவும் மனிதனாகப்பிறந்தார். மக்களுடைய பாவங்களைத் தான்சுமந்து அவர்களுக்குப் பாவவிமோசனம் தருவதற்காகவே பிறந்தார். அதாவது பிதா தனது ஒரே குமாரனாகிய இயேசுவைப் பூமிக்கு அனுப்பியது மக்களுடைய பாவங்களைப் போக்குவதற்கு.

அதற்காகவே கன்னிமரியாளின் கருவில் உருவாக்கி இயேசுவாக இப்பூலோகிற்குக் கொண்டுவந்தார். ஆனால் மரியாளோ இன்னொருவருக்கு நிச்சயிக்கப்பட்ட பெண். இருந்தும் பிதாவின் கட்டளையால் அதை ஏற்றுக்கொண்டாள். ஆனால் நிச்சயிக்கப்பட்ட யோசேப் தடுமாறி அப்பெண்ணை விலக்க நினைத்தார். அத்தருணம் பிதா வாக்கால் தெளிவடைந்து அவளை ஏற்றுக்கோண்டார்.

கன்னிமரியாளின் கருவில் உருவாகி மண்ணில் அவதரித்த மகன் இயேசுபிரான். அவர் பிறந்ததினத்தையே நத்தார் தினமாக கொ ண்டாடுகிறார்கள். இதில் சிறப்புயாதெனில் அந்த ஒருநாள் உலகமெங்கும் கூடுதலாக விடுமுறைநாளாக இருக்கும். அத்துடன் மத பேதமின்றி அனைத்து மக்களும் கொண்டாடும் தினம் என்றும்சொல்லலாம்.நத்தார் தினம் மக்களுக்கு மகிழ்ச்சியூட்டும் தினம். பொதுவாக சிறுபிள்ளைகளுக்குப் பிடித்ததினம். அதை அவர்கள் ஆவலுடன் எதிர்பார்ப்பார்கள். நத்தார்தினத்தில் நத்தாரப்பாப்பா வருகை. அவர்கொண்டுவரும் பரிசுப்பொருள்.சாக்லேட்,இவையெல்லாம் மழலைகள் மனதை மகிழ்விக்கும்.

இயேசுவும் குழந்தைகளை மிகவும் நேசிப்பவர். அதனால் குழந்தைகளுக்குக் கொண்டாட்டம் நத்தார்தினம். எங்கள் திருநாட்களை சிலர்தான் கொண்டாடுவார்கள். இயேசு பிறந்த நத்தார்தினத்தில் மூன்று ராஜாக்கள் பரிசுப்பொருள் கொண்டுவந்து அவருக்குக் கொடுத்தார்கள். அதனால்தான் பிறந்தநாளுக்குப் பரிசுகொடுக்கும் வழக்கம் இங்கு ஏற்பட்டிருக்கலாம்.

தொடர்ச்சி 65ம் பக்கம்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SPB என்னும் அணையா விளக்கு!...

(கலைவாணி. ஏகானந்தராஜா)

ஜாதி, மத, மொழி பேதமின்றி ஒவ்வொருவரின் மூச்சுக்காற்றிலும் இசையோடு கலந்தவர் S P B அவர்கள். பதினாறு மொழிகளில் பாடியுள்ளார். மத வேறுபாடின்றி பல மதப் பாடல்களையும் பாடியுள்ளார். ஜாதி என்பது அவரைப் பொறுத்தவரை ஆண்ஜாதி, பெண்ஜாதி தான். சிறுவர், இளையோர், பெரியோர், சிறியோர் என்று எந்த பாகு பாட்டையும் யாரிடமும் காட்டியதில்லை. யாருடனும் பாடுவதற்கு தயக்கம் காட்டியதும் இல்லை.

இசையை நேசிப்பது போல் அணைவரையும் நேசித்தார்.யாரிடமும் ஏற்றத்தாழ்வு காட்டியதாக இல்லை. ஒரு குழந்தையுடனும் பாடுவார். முதியவருடனும் பாடுவார். அதே போல் இசையை கற்க ஆரம்பிக்கும் சிறார்களுடன் கூட பாடத் தயங்குவதில்லை. தவறாகப்பாடினால் கூட தட்டிக் கொடுத்து வளர்த்து விடும் உன்னதமான பண்புகொண்ட மாமனிதர்..

இசையால் மயங்கும் இதயங்களுக்கெல்லாம் இயக்கம் கொடுத்தவர்.பாடுபவர்கள் யாராக இருந்தாலும் மனதார தட்டிக்கொடுத்து ஊக்குவிப்பார்.இசையையே இறைவனாய் பார்த்தவர் SPB. அதனால்தான் அவரிடம் இளமை, இனிமை, பண்பு, அன்பு அனைத்தும்குடிகொண்டிருந்தன. எத்தனை விருதுகள் கிடைத்தாலும், எவ்வளவு உயரத்தை தொட்டாலும் தலைக்கனமோ, ஈகோவோ இவரிடம் இருந்ததில்லை.

சிறிய உதவிகளைச் செய்தால் கூட பெரிதாக மதிப்பவர்.பெற்ற உதவியை ஒருபோதும் மறந்ததில்லை. அதனை மறக்காமல் இருப்பதற்காகவே சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் மேடைகளில் சொல்லி விடுவார். ஒருவருடன் அறிமுகமானால் அறிமுகப்படுத்தியவரையும் மறக்க மாட்டார். அறிமுகமானவரையும் மறக்கமாட்டார். எத்தகைய பெருந்தன்மை இது. பலர் தற்போது தம்மை அறிமுகம் செய்தவர்களைப் புறந்தள்ளிவிட்டு தம் காரியங்களை சாதித்துவிட்டு போகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன் தம்மை ஏணிப்படிகளாய்த் தாங்கி உயர்த்தி வைத்த வர்களையே உதைந்து தள்ளிவிட்டுப் போகின்றனர். எத்தனை திறமைகளைத் தன்னகத்தே கொண்டிருந்தார். எப்போதாவது எந்த மேடையிலாவது தன் புகழ் பேசியிருந்தாரா? தன்னால் இதுமுடியும் அது முடியும் என்று சவால் விட்டிருப்பாரா?

தற்பெருமையில்லாத ஒரு ஜீவன். இப்படி ஒரு பாடகனை இனிக் காண்போமா? இப்படி ஒரு குணச்சித்திரத்தை இனிக் காண்போமா? உள்ளம் வெடித்துச்சிதறிவிடும் போன்ற கவலையுணர்வு.

எனக்கு மட்டுமா ? இல்லை பல கோடி மக்களின் நிலமை இது. ஏன் ஏன் ஏன் SPB இப்போதான் தெய்வமாகினாரா? இல்லை! எம் மத்தியில் வாழ்ந்த தெய்வத்தின் அவதாரம் S P B .27.09.2020 அன்று உலக மக்களின் கண்ணீரால் குளிப்பாட்டப்பட்ட அவரதுஉடல் அவரது பண்ணை வீட்டில் சமாதியில் வைக்கப்பட்டது. அவரது மூச்சுக்காற்று இசையுடன் கலந்து, அணையா விளக்காய் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. அந்த ஆத்மா நின்மதியாக உறங்கட்டும்.ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

SPB வழங்கிய கொரோனா நிதி உதவிகளைச் சுருக்கமாகப்பார்ப்போம்..

| | | |
|---|---|---|
| 1-இந்தியப் பிரதமமந்திரி கொரோனா நிதி உதவிக்கு | | - 5.00.000-00 |
| 2-பாதிக்கப்பட்ட 272 இசைக்கலைஞர்களுக்கு | X 4.000 | - 10.88.000-00 |
| 3-புகைப்படக் கலைஞர்கள் 100 பேர் | X 4.000 | - 4.00.000-00 |
| 4-துப்பரவுத் தொழிலாளர்கள்100 பேர் | X 2000 | - 2.00.000-00 |
| 5-வீதிக்கலைஞர்கள் 158 பேர் | X 1.500 | - 2.37.000-00 |
| 6-நாடகக் கலைஞர்கள் 100 பேர் | X 1.000 | - 1.00.000-00 |

-----------

மொத்தம்- 25.25.000.00

(இருபத்தைந்து லட்சத்து இருபத்தைந்தாயிரம் இந்திய ரூபா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிரேஷ்ட பேராசிரியர் எஸ்.சிறிசற்குணராஜா

# யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர்

யாழ் பல்கலைக்கழக துணைவேந்தராக சிறிசற்குணராஜா தெரிவு! யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக கணிதப் புள்ளி விபரவியல் துறையின் சிரேஷ்ட பேராசிரியர் எஸ்.சிறிசற்குணராஜா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்துக்கமைவாக, ஜனாதிபதிக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவத்தின் படி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் சிரேஷ்ட பேராசிரியர் எஸ். சிறிசற்குணராஜா யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

Chancellors, vice-chancellors and presidents
யாழ் பல்கலைக்கழகத்தின் வேந்தர்களாகவும் உபவேந்தர்களாகவும் கடமைபுரிந்தவர்கள் விபரம்..

Presidents of the Jaffna Campus of the University of Sri Lanka

| | |
|---|---|
| கே.கைலாசபதி | 01.08-1974 - 31.07.1977 |
| எஸ.வித்தியானந்தன் | 01.08.1977 - 31.12.1978 |

**வேந்தர்கள்** Chancellors of the University of Jaffna

| | |
|---|---|
| வீ.மாணிக்கவாசகர் | 01.01.1979 - 1984 |
| ரி.நடராசா | 1984 - 2004 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உபவேந்தர்கள்** Vice-chancellors of the University of Jaffna

| | |
|---|---|
| எஸ்.வித்தியானந்தன் | 1979 - 1988 |
| ஏ.துரைராசா | 1988 - 1994 |
| கே.குணரட்ணம் | 1994 - 1997 |
| பி.பாலசுந்தரம்பிள்ளை | 1997 - 2003 |
| எஸ் மோகனதாஸ் | 2003 - 2006 |
| ஆர்.குமாரவடிவேல் | 2006- 2007 |
| என்.சண்முகலிங்கம் | 2007 - 2011 |
| திருமதி வசந்தி அரசரட்ணம் | 2011 - 2017 |
| ஆர்.விக்னேஸ்வரன் | 2017 - 2020 |
| எஸ்.சிறிசற்குணராசா | 2020 ... |

யாழ் பல்கலைக்கழக 46 ஆண்டுகள் வரலாற்றில் ஒரே ஒரு பெண்மணிதான் உபவேந்தராக இருந்துள்ளார். திருமதி வசந்தி அரசரட்ணம் 2011 - 2017 வரை என்பது குறிப்பிடத்தக்கது.






---


## புத்தகங்கள்!..

ஈரான் நாட்டிலுள்ள புத்தகச்சந்தையில் இரவிலும் புத்தகங்கள் அப்படியே வெளியில் வைத்து சந்தை மூடப்படும். அதற்கு அவர்கள் கூறும் காராணம்..

"வாசிப்புப் பழக்கமுள்ளவர்கள் ஒருபோதும் திருடுவதில்லை
திருடர்கள் ஒருபோதும் புத்தகங்கள் வாசிப்பதில்லை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01-12-1940  15-09-2020



# அமரர் ரஞ்சிதம் கந்தையா
(இளைப்பாறிய ஆசிரியை)

யாழ் பண்டத்தரிப்பு-பனிப்புலத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் இளைப்பாறிய ஆசிரியருமான திருமதி ரஞ்சிதம் கந்தையா அவர்கள் கனடாவில் தனது 80வது அகவையில் காலமானார். யாழ்ப்பாணம், திருகோணமலை மாவட்டங்களில் ஆசிரியப்பணியாற்றியவர். இளைப்பாறியபின்னர் கனடாவில் வாழ்ந்துவந்த வேளையிலே இறைவனடி சேர்ந்திருக்கிறார் என்ற செய்தி எம்மனதை வேதனையில் ஆழ்த்தியது.

பழகுவதற்கு இனிமையானவர், பொறுமையானவர், அன்பானவர், தெளிந்த சிந்தனையாளர். துணிவாகக் கருத்துக்களைப் பகிர்ந்துகொள்பவர். நல்லதொரு மேடைப் பேச்சாளர். ஆற்றல்மிக்க ஆசிரியர். இவரோடு சிறிதுகாலம் பழகிய நினைவுகள் பசுமையானவையே. தனது பிள்ளைகளிடம் ஜேர்மனிக்கு வந்தபோது நான்கு தடவைகள் அவரோடு பழகிய நினைவுகளை மறக்கமுடியவில்லை. நான் யேர்மனிய எழுத்தாளர் சங்கத்தின் தலைவராக இருந்தபோது எமது தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் நூல்வெளியீட்டுவிழாவுக்கு சிறப்பு விருந்தினராக அவரையும் அவரது கணவன் கந்தையா ஆசிரியர் அவர்களையும் பிரதம விருந்தினராக அழைத்து கௌரவித்திருக்கிறோம்.

அடுத்தது ஜேர்மனி கல்விச்சேவையின் ஆண்டு விழாவிலும் இவரை அழைத்துக் கௌரவித்தபோது நானும் அவர்களோடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலந்துகொண்டு உரையாடி அகமகிழ்ந்த நினைவுகள். இதைவிட கம் காமாட்சி அம்மன்கோவிலில், டோட்முண்ட் நகரில் என இவர்கள் இருவருடனும் பழகிய நினைவுகள் மறக்கமுடியவில்லையே..

இணைபிரியா சோடிகளாக வலம்வந்த இந்த அன்புத்தம்பதிகளில் ஒருவர் இழப்பானது பெரும் துன்பத்தை ஏற்படுத்திவிட்டது. என்ன செய்ய முடியும். எல்லோருக்கும் நடக்கும் துன்பியல்தானே..ஆருயிர் கணவர் திரு கந்தையா ஆசான் அவர்களுக்கும் அவர்தம் குடும்பத்தவர்களுக்கும் ஆறுதலைத் தெரிவித்துக்கொள்கிறோம். எமைவிட்டுப் பிரிந்த ரஞ்சிதம் அம்மாவின் ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

சாந்தி!...சாந்தி!...

பிரதம ஆசிரியர் -"மண்" சஞ்சிகை

---

59ம் பக்கத்தொடர்ச்சி... நத்தார் தினம்...

பாலகன் பிறந்ததினமாகிய நத்தார் தினத்தை பாரெல்லாம் கொண்டாட, சீர்கொடுத்து சிந்தைமகிழ்ந்து மக்கள் துதிபாட நத்தார்தினம் நற்ஷோபனம் சொல்ல ,நத்தார்தினம் கொண்டாட மக்கள் செய்யும் ஆரவாரம், சோடனைகள் என்ன மின்விளக்கின் ஒளிஎன்ன. ருசியான தீன்பண்டங்கள் என்ன அத்தனையும் நிறைந்திருக்கும். இதுவெல்லாம் இயேசுவுக்கு மகிமையன்றோ.

நத்தார்தினத்திலே, நத்தார் மரம்வைத்து அதைச்சோடித்து அதன்கீழ் பரிசுப்பொருட்களை வைப்பார்கள். அன்றையநாள் குடும்பத்துடன் எல்லோரும் சேர்ந்து குடும்பங்களாகக் குழமி கொண்டாடுவர். பரிசுப்பொருட்களைப் பகிர்ந்துகொள்ளுவர். ஆக நத்தார்தினம் இயேசுவின் பிறந்தநாள். அத்தினத்தை மக்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடுகிறார்கள். இந்த நத்தார்தினத்தை நாமும் எங்கள் குடும்பங்களுடன் மகிழ்ச்சியாக் கொண்டாடுவோமாக. எல்லோருக்கும் இனிய நத்தார்தின வாழ்த்துக்கள்!...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எஸ். பி. பாலசுப்பிரமணியம்
## (1946 - 2020)



**ஸ்ரீபதி பண்டிதாரத்யுல பாலசுப்ரமணியம்**

S. P. Balasubrahmanyam

பிறப்பு:- 4 யூன், 1946 - இறப்பு:- 25 செப்டம்பர், 2020

புகழ்பெற்ற இந்தியத் திரைப்பட இசைப் பாடகர் ஆவார். இவர் எஸ். பி. பி. (S.P.B.) என்ற மூன்றெழுத்துகளால் பரவலாக அறியப்படுகிறார். 1966இல் ஒரு தெலுங்குத் திரைப்படத்தில் பாடியதில் இருந்து திரைப்படங்களில் பாடத் தொடங்கினார். 1966 முதல் பல்லாயிரக்கணக்கான பாடல்களைப் பாடியுள்ளார். உலக அளவில் அதிக எண்ணிக்கையிலான பாடல்களைப் பாடியதற்காக கின்னஸ் உலக சாதனைகள் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளார். திரைப்பட பாடகர் மட்டுமல்லாது இவர் திரைப்பட இசை அமைப்பாளர், திரைப்படத் தயாரிப்பாளர், திரைப்பட நடிகர், திரைப்பட பின்னணிக் குரல் தருபவர் எனப் பன்முக அடையாளம் கொண்டவர். இந்திய அரசு இவருக்கு 2001 ஆம் ஆண்டில் பத்மஸ்ரீ விருதும் 2011 ஆம் ஆண்டில் பத்மபூஷண் விருதும் வழங்கியது. இவருக்கு 2016 ஆம் ஆண்டு 47வது இந்திய சர்வதேச திரைப்பட விழாவில் இந்திய திரைப்பட பிரமுகர் விருது வழங்கப்பட்டது.

பாலசுப்பிரமணியம் எஸ் பி சம்பமூர்த்தி மற்றும் சகுந்தலம்மா தம்பதியருக்கு மகனாக கொண்டம்பேட்டை, நெல்லூர் மாவட்டம், ஆந்திர மாநிலத்தில் பிறந்தாரா். இவருடைய தந்தை எஸ் பி சம்பமூர்த்தி ஹரிஹத கலைஞர் ஆவார். இவர் உடன் பிறந்தவர்கள் இரண்டு சகோதரர்கள் மற்றும் ஐந்து சகோதரிகள் இருக்கின்றனர். இவர்களில் எஸ். பி. சைலஜா, கிரிஜாஜ இளைய தங்கைகள் ஆவார். சைலஜா 5000க்கும் மேற்பட்ட பாடல்களை தென்னிந்திய மொழிகளில் பாடியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1964 ஆம் ஆண்டு அமெட்டூர் பாடகர்கள் ஏற்பாடு செய்திருந்த சென்னை மையமாக கொண்ட தெலுங்கு கலாச்சார நிறுவனம் நடத்திய இசை நிகழ்ச்சியில் எஸ் பி பி முதல் பரிசு பெற்றார்.

ஆரம்பகாலத்தில் மெல்லிசைக் குழு ஒன்று நடத்தி வந்தார். இசை நிகழ்ச்சிகளையும் நாடகக்கச்சேரிகளில் பாடல்கள் பாடுவதையும் வழக்கமாக கொண்டிருந்தார். எஸ் பி கோதண்டபாணி மற்றும் கண்டசாலா நடுவராக இருந்து பங்குபெற்ற பாட்டுப்போட்டியில் எஸ் பி பி சிறந்த பாடகராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அடிக்கடி இசையமைப்பாளர்களை சந்திப்பதும், பாட வாய்ப்பு கேட்பதுமாக இருந்த எஸ் பி பிக்கு முதல் போட்டி பாடல் பி. பி. ஸ்ரீனிவாஸ் பாடிய நிலவே என்னிடம் நெருங்காதே என்ற பாடலாகும்.

## தமிழில் முதல் பாடல்..

1966ம் ஆண்டளவில் கன்னடப்பாடல்கள் பாடி வந்ததுடன் கன்னடத்தில் நடிகர்களுக்குக் குரல் கொடுத்துவந்தார். 1969ம் ஆண்டளவில் தமிழில் மெல்லிசை மன்னரின் இசையமைப்பில் எல். ஆர் ஈஸ்வரியுடன் சேர்ந்து "அத்தானோடு இப்படி இருந்து எத்தனை நாளாச்சு" என்ற பாடலைப் பாடினார். அது வெளிவரவில்லை. அடுத்த பாடலாக சாந்தி நிலையம் படத்தில் "இயற்கை என்னும் இளைய கன்னி" என்ற பாடலைப் பாடினார். இப்பாடல் திரைக்கு வரமுன்னரே அடிமைப்பெண் படத்தில் "ஆயிரம் நிலவே வா" என்ற பாடலைப் பாடினார். அதுவே வெளிவந்த முதல்பாடலாகும்.

## பாடல் வகைகள்..

இவர்பாடிய பாடல்களோ பற்பல வகைகளாகும். சோகம், மகிழ்வு, துள்ளிசை,காதல், பரிவு, பிரிவு, புரட்சி, விடுதலை, அரசியல், தத்துவம், பக்தி, கரகோஷம், ஒற்றுமை, இயற்கை, சுற்றாடல், இயல், பன்மொழி, வர்ணனை, வாழ்வியல், கண்ணீர், தாயன்பு, கண்ணீர், பாசம் எனப் 16 மொழிகளில் பாடியிருக்கிறார்.

## குடும்ப வாழ்க்கை

பாலசுப்பிரமணியம் காதலித்து திருமணம் செய்து கொண்டார். இவருடைய மனைவி பெயர் சாவித்ரி, மகள் பல்லவி, மகன் எஸ். பி. பி. சரண், சரண் சிறந்த பின்னணி பாடகர், நடிகர், சின்னத்திரை தொடர் நடிகர், தயாரிப்பாளர் என பன்முகம் கொண்டு வளர்ந்து வருகிறார். சகோதரி சைலஜா 5.000 அதிகமான பாடல்களையும் பாடியிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனைகள்..

நாற்பதாயிரம் பாடல்களைப் பாடி கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம் பிடித்திருக்கிறார்.

ஆறு முறை சிறந்த பின்னணிப் பாடகருக்கான தேசிய விருதினைப் பெற்றிருக்கிறார்.

எஸ். பி. பி. முறையாக கர்நாடக இசையைப் பயின்றது இல்லை என்றாலும் சங்கராபரணம் என்ற படத்தில் கர்நாடக இசையில் அமைந்த பாடலுக்காக தேசிய விருது பெற்றார்.

இதுவரை தேசிய விருதினை நான்கு மொழிகளுக்குப் பெற்ற ஒரே திரைப்படப் பின்னணிப் பாடகர் இவர் ஒருவரே.

பிலிம்பேர் விருதினை ஒரு முறையும் பிலிம்பேர் விருது (தெற்கு) மூன்று முறையும் பெற்றுள்ளார்.

மேலும் இவர் தமிழக மற்றும் கர்நாடக அரசுகளின் பல மாநில விருதுகளும் ஆந்திர அரசின் நந்தி விருதினை 25 முறையும் பெற்றார்.

இவர் 1981 ஆம் ஆண்டு தமிழக அரசின் கலைமாமணி விருது பெற்றிருக்கிறார்.

எஸ் பி பி எந்த பாடகரும் செய்யாத சாதனைகளை இந்திய திரையிசையில் செய்திருக்கிறார். இவர் 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி 8 ஆம் தேதி கர்நாடகா, பெங்களூரில் உள்ள பதிவரங்கில் காலை 9 மணியில் இருந்து இரவு 9 மணி வரை ஒரே நாளில் 21 பாடல்களை கன்னட மொழி இசையமைப்பாளர் உபேந்திர குமாருக்காக பாடி சாதனை செய்துள்ளார்.

மேலும் தமிழ் மொழியில் 19 பாடல்களையும் (ஒரேநாளில்), இந்தி மொழியில் 16 பாடல்களையும் (6மணி நேரத்தில்) பாடி சாதனை செய்திருக்கிறார். இவைகளெல்லாம் இவருடைய குறிப்பிடத்தக்க சாதனைகளாகும்.

எஸ் பி பி 2000ஆம் ஆண்டிற்கு பிறகு இளைய தலைமுறை இசையமைப்பாளர்களான ரகுமான், யுவன் சங்கர் ராஜா, கார்த்திக் ராஜா, ஹாரிஸ் ஜெயராஜ், டி. இமான், ஜி. வி. பிரகாஷ்குமார், நிவாஸ் கே. பிரசன்னா, அனிருத் ரவிச்சந்திரன், பிரேம்ஜி அமரன் போன்றோரின் இசையமைப்பில் பாடியிருக்கிறார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனைகள் வரிசையில்..

1-சுமார் 50 வருடங்கள் நிறைவுகண்டு பாடிவந்த இவர் பாடிய பாடல்கள் 16 மொழிகளில் சுமார் 40.000 மேல்

2-சிறந்த பாடகருக்கான இந்திய தேசியவிருதுகள் 6 தடவைகள் பெற்றிருக்கிறார்
-தெலுங்கு 1979,1983, 1988 - 3
-இந்தி 1981 - 1
-கன்னடம் 1995 - 1
-தமிழ் 1996 - 1 (தங்கத் தாமரையே என்ற பாடல்)
-இவற்றைவிட இந்தியா, இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, அவுஸ்திரேலியா, ஐரோப்பா, கனடா, அமெரிக்கா, தென்னாபிரிக்கா போன்ற பல நாடுகளில் பலநூறு விருதுகள் பெற்றிருக்கிறார்.

3-நடித்த திரைப்படங்கள் - 76 - (1969 - 2018)
தெலுங்கு - 38
தமிழ் - 28
கன்னடம் - 10
முதல் தமிழ்ப்படம் - 1987 - "மனதில் உறுதி வேண்டும்"
கடைசி தமிழ்ப்படம் - 2015 - "மூணே மூணுவார்த்தை"

4-இசையமைத்த திரைப்படங்கள் - 49 - (1977 - 2003)
(தமிழ், கன்னடம், தெலுங்கு, இந்தி)
தமிழில் 8 படங்களுக்கு இசையமைத்துள்ளார்.
முதல்ப்படம் 1983 - "துடிக்கும்கரங்கள்"
கடைசித் தமிழ்ப்படம் 2003 - "உன்னைச்சரணடைந்தேன்"

5-பின்னணிக்குரல் கொடுத்த படங்கள் - 9 - (1982 - 2012)
தமிழில் 4 படங்களுக்குப் பின்னணி கொடுத்திருக்கிறார்
முதல்ப்படம் - 1988 - "சத்யா"
கடைசிப்படம் - 2012 - "சிறீராம ராஜ்ஜியம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பு...

சினிமாத்துறையில் மெல்லிசைக்குரலோன், பெரும் பொக்கிஷம், கானக்குரலால் கோடானகோடி மக்களை இசையால் மயங்க வைத்தவர். தனது வசீகரக் குரலால் இனம், மதம், நிறம், மொழிகடந்து தனது பாடல்களால் பல கோடி மக்களைக் கொள்ளை கொண்டவர். ஒட்டுமொத்த இந்திய சினிமாவில் சிம்மக்குரல். தேமதுரக் குரலால் உலக மக்களை மகிழ்வித்தவர். அவரின் பாடல்களால் பல்லாயிரம் மக்கள் புத்துயிர் பெற வழிவகுத்தது. மனஅழுத்தம் போன்ற நோயாளிகளுக்குப் பெரிய மருந்தாக இவரின் பாடல்கள் உயிர் தந்தன. இன்பத்திலும் துன்பத்திலும் தத்தளித்த கோடிக்கணக்கான மக்களுக்குப் பெருவிருந்தளித்த இந்த மாமனிதன் எப்போதும் சிறுபிள்ளைகளைப் போல அன்பாகவும் பண்பாகவும் நடந்துகொள்ளும் ஒரு சிறந்த மானிடராவர். எல்லோரும் வாழ்வில் உயர்ச்சி பெறவேண்டும், சந்தோசமாக வாழவேண்டும் என்னும் நல் நோக்கில் ஒரு முன்னோடியாக வாழ்ந்து காட்டியவராவர். இது தேசம் கடந்த பேரிழப்பாகவே கருதப்படுகின்றது.

இறப்பு

இவருக்கு ஆகஸ்ட் 5, 2020 அன்று, கோவிட்-19 தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டதை தொடர்ந்து, சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். சில நாட்களில் மோசமடைந்த அவரது உடல்நிலை, பின்பு கொஞ்சம் கொஞ்சமாக சகஜ நிலைக்கு வந்தது மற்றும் வாய் வழியே சாப்பிடும் அளவுக்கு இவருடைய உடல்நிலை தேறியது. ஆனால் திடீரென்று செப்டம்பர் 24, 2020 அன்று, இவருடைய உடல்நிலை மீண்டும் மோசமடைந்ததை தொடர்ந்து, இவருக்கு மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்தனர். ஆனால் சிகிச்சை பலனளிக்காமல், செப்டம்பர் 25, 2020 அன்று, இவருடைய உயிர் மதியம் 1:04 மணிக்கு பிரிந்தது. அன்னாருக்கு எல்லோரும் இரங்கலையும் ஆறுதலையும் தெரிவிப்போம் ஆத்மா சாந்திபெற இறையருளை வேண்டுவோம்.

இரங்கல்..

இந்தியப் பிரதமர் மோடி, இந்திய குடியரசுத்தலைவர், மாநில முதல்வர்கள், அமைச்சர்கள், அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள், இயல் இசை வல்லுனர்கள், திரைப்படத்துறையினர், சாதாரண பொதுமக்கள், ரசிகப்பெருமக்கள் என கோடான கோடி மக்கள் கண்ணீர் வெள்ளத்துடன் விடைபெற்றார். உலக சாதனையாளர் அமரர் எஸ்.பி.பாலசுப்பிரமணியம் அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதநேயப்பணியில் இணைந்துகொண்டவர்கள்!..

தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள் மற்றும்கல்விச்செலவுக ளைப்பொறுப்பேற்றுஉதவும் மனிதநேயப்பணிகளில் மண் சஞ்சிகையோடு இணைந்து கரம்கொடுத்துவரும் அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகின்றோம்.எனவே நீங்களும் இந்தப்பணியுடன் இணைந்து உதவலாம். இதுவரை இத்திட்டத்தில் இணைந்து உதவிவரும் நல்லுள்ளங்களின் விபரம்....

01. திருமதி.சிவதர்சினி.பிராங்ளின் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு- வவுனியா) - 480-00

02. செல்வன்.நகுல்.துரையரங்கன் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவுதிருகோணமலை -480-00

03. செல்வி.அஜந்தி.அழகராசா - பிரித்தானியா
ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு- மன்னார் -480-00

04. திருமதி.பிரிந்தாவனி.ஏகானந்தராசா - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா -480-00

05. செல்வி அனிதா றஞ்சன் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - மட்டக்களப்பு -480-00

06. திரு. Johannas Gruendler - ஜேர்மனி - 480-00
ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா

07. செல்வி.சுகிர்தா தவராஜ் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு- கிளிநொச்சி -200-00

08. செல்வன். சியாந்த் எமில் சர்வானந்தன் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு- வவுனியா - 200-00

09. செல்வன் பிரணவன் யோகராசா - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு- வவுனியா - 240-00



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதரவற்றோர் நிதி உதவிக் கணக்கு

ஆரம்ப இருப்பு 1-09-2020 (மேலதிகச் செலவு) - 181-87

அன்பளிப்புகள்:-

01. திருமதி. சிவதர்சினி பிராங்ளின் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

02. செல்வி. அனித்தா றஞ்சன் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

03. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - Essen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)

04.திருமதி அஜந்தி பத்மநாதன் - London + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)

05. திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Weeze + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

06. திரு. Johannas Gruendler - Köln + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

07. செல்வி லாவண்யா அற்புதராசா - Soest + 50-00
(பிறந்தநாள் அன்பளிப்பு)

-------

\+ 348-13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

+ 348-13

அனுப்பியது...

திருஞானசம்பந்தர் குருகுலம்
சிறுவர் காப்பகம் -மட்டக்களப்பு - 480-00

மண் கணக்கு வங்கி வரி..
01.09.2020 - 30.09.2020 - 9.35
01.10.2020 - 31.10.2020 - 10.53
------
19.88 - 19.88 - 499.88
-----------
31.10.2020 மிகுதி (மேலதிகச்செலவு) - 151-75
-----------

இறந்தவர்களது குழந்தைகளை இருப்பவர்கள் காப்போம்
දෙමව්පියන්ට අහිමි දරුවන් අපි ආරක්ෂා කරමු
Parentless Children Pity rescue, Protect them
**HINDU ANPAGAM**
Veppankulam, Vavuniya - Sri Lanka

T.P : 024-2223683 திகதி : 30.04.2020

திரு/திருமதி/செல்வி சிவராஜா (பிரதம ஆசிரியர் மண்சஞ்சிகை, ஜேர்மன்)

விபரம் : இல்லப்பிள்ளைகளின் பராமரிப்புச் செலவிற்காக

நடைபெறும் திகதி :

பணம் ரூபா தொண்ணூற்று ஆறாயிரத்து முந்நூற்று ஐம்பத்து ஒரு ரூபா பதின்மூன்று சதம்.

நன்றியுடன் பெற்றுக்கொண்டோம்.

ரூபா: 96351.13/=  1501

இவ்வண்ணம்
[signature]
பொறுப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

இறந்தவர்களது குழந்தைகளை இருப்பவர்கள் காப்போம்
දෙමව්පියන්ට අහිමි දරුවන් අපි ආරක්ෂා කරමු
Parentless Children Pity rescue, Protect them

**HINDU ANPAGAM**

Veppankulam, Vavuniya - Sri Lanka

T.P : 024-2223683

திகதி : 11/5/2020

திரு/திருமதி/செல்வி : சிவராஜா (பிரதம ஆசிரியர் மண் சஞ்சிகை, ஜேர்மனி)

விபரம் : இல்லச் சிறார்களின் பராமரிப்பு செலவிற்காக

(14.03.2020 அன்று ஏழை வறிய மாணவர்களுக்கு வைப்புச் செய்யப்பட்ட

நடைபெறும் திகதி [illegible] ஆசிரியரின் [illegible] வைப்புச் செய்த தொகை)

பணம் ரூபா : எண்பத்தையாயிரத்து இருபத்தெட்டு ரூபா எண்பத்து மூன்று சதம் மட்டும்.

நன்றியுடன் பெற்றுக்கொண்டோம்.

**ரூபா:** 85028.83

1503

இவ்வண்ணம்

பொறுப்பாளர்

உ

இறந்தவர்களது குழந்தைகளை இருப்பவர்கள் காப்போம்
දෙමව්පියන්ට අහිමි දරුවන් අපි ආරක්ෂා කරමු
Parentless Children Pity rescue, Protect them

**HINDU ANPAGAM**

Veppankulam, Vavuniya - Sri Lanka

T.P : 024-2223683

திகதி : 07/09/2020

திரு/திருமதி/செல்வி : வ. சிவராஜா, பிரதம ஆசிரியர், மண் சஞ்சிகை, ஜேர்மனி

விபரம் : இல்லச் சிறார்களின் பராமரிப்பு செலவிற்காக

நடைபெறும் திகதி :

பணம் ரூபா : எழுபத்தொன்பதாயிரத்து அறுநூற்று ஆறு ரூபா எண்பத்து மூன்று சதம்.

நன்றியுடன் பெற்றுக்கொண்டோம்.

**ரூபா:** 79606.83

1529

இவ்வண்ணம்

பொறுப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து அன்பகம் சிறுவர் அபிவிருத்தி நிலையம்
# Hindu Anpakam Children Development Center
# හින්දු ඇන්පකැම් ළමා සංවර්ධන මධ්‍යස්ථානය

பதிவு இல: NP/30/23/04/02
NEP/DS/V/SS/111
Reg No : HA/04/V/24

இறந்தவர்களது குழந்தைகளை இருப்பவர்கள் காப்போம்
[illegible]
Parentless Children Pity Rescue, Protect Them.

E – mail hinduanpakam@gmail.com | 2[nd] கட்டை, மன்னார் வீதி, வேப்பங்குளம், வவுனியா. | தொ.இல : 0094 024-2223683 T.P. : 0094 0776143628 | 2[nd] Mile Post, Mannar Rd, Veppankulam, Vavuniya.

President
Miss.K.Jeyarany

Vice Presidents
Mr.K.Kirupagaran
Mrs.S.Rajini

Secretary
Mrs.S.Niranjana

Treasurer
Mr.M.Kathirkamarajah

Asst Secretary
Mr.G.Srikantharajah

Asst Treasurer
Mrs.T.Rathimalar

Board of Members
Mr.S.Sabanathan
Mr.M.S.Selvarajah
Mr.T.KuruKulasingam
Mr.K.Uthayakumar
Mr.S.Santhirakumar
Mr.K.Kanesarajah
Mr.E.Tharmapalan
Mr.M.Jegan
Mr.S.Raveendran
Mrs.K.Santhiraleela
Mrs.J.Thadsayini
Mrs.S.Nirmala

Patron
Mr.V.S.Thevarajah
Mr.Dr.Ramachchandran
M.S.Subramaniyam

Bank / A/c / details
032020254291
Hatton National Bank
Vavuniya

Contact
024 222 3683
077 6143628

E.Mail
hinduanpakam@gmail.com

திரு.வ.சிவராசா,
பிரதம ஆசிரியர்,
மண் கலை இலக்கிய சமூக சஞ்சிகை,
ஜேர்மனி.
15.09.2020.

அன்புடையீர்,

**நன்றி கூறல்**

இங்கு நாம் யாவரும் நலம், அது போல் தங்கள் அனைவரது நலத்திற்கும் எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம். தங்களால் 07.09.2020 அன்று எமது வங்கி கணக்கிற்கு எமது இல்லச் சிறுமியான செல்வி பெ.தர்மவதனி அவர்களின் பராமரிப்பு செலவிற்காக 400 யூரோ (ரூபா 79606.83) வைப்புச்செய்தமைக்காக தங்களுக்கும், மண் சஞ்சிகை வாசகர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் எமது இல்லச் சிறார்களால் மண் சஞ்சிகைக்காக திரட்டப்பட்ட ஆக்கங்களையும் இத்துடன் அனுப்பி வைக்கின்றோம். தங்களது மண் சஞ்சிகை மென்மேலும் சிறக்க வாழ்த்துகின்றோம். தங்களது சேவை எமது இல்லத்திற்கு மிகவும் பெரும் பயன்மிக்கதாக கருதுவதுடன் எதிர்காலத்தில் பல சேவைகளை வழங்குவீர்கள் என எதிர்பார்க்கின்றோம்.

நன்றி.
இங்ஙனம்

தலைவர்,
இந்து அன்பக சிறுவர் இல்லம்,
வேப்பங்குளம், வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க தமிழ்

# தமிழ் பண்பாட்டு ஆய்வு மன்றம்

## Tamil Cultural Research Forum

No.10, Pattiowita Road, Ratnapura, Sri Lanka. | Tel/Fax: +94 452 224 255

உரிமையாளர்
பிரதம ஆசிரியர் அவர்களுக்கும்,
"மண்" கல்வி கலை இலக்கிய சமூக சஞ்சிகை,
பேர்மனி.
2020.10.29

நன்றிநவிழ்தல்

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

முயன்று கற்க முயற்சிக்கும் மலையக தமிழ் மாணவர்கள் இருப்பினும் வசதியின்மையும் இயற்கையிலேயே பாடசாலை அமைவிடமும் அம் மாணவர்களின் முயற்சியை இருட்டடிப்பு செய்கிறது.

பேரிடர் காரணமாக பாடசாலைகள் மூடப்பட்ட நிலையில் இணையவழி மூலம் Zoom வகுப்புக்கள், WhatsApp குழு வகுப்புக்கள், என்பன நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை. தோட்டப்புறங்களில் இணைய வசதி இன்மை காரணமாகவும் கணினி வசதி மற்றும் ஸ்மார்ட் போன் வசதி குறைவு என்பதினால் எம் மாணவர்களுக்கு இவ்விணையவழி கல்வியின் பயனை அடையமுடியாது போன வேளையில்.

எமது அமைப்பின் மூலம் செயலட்டைகள் அச்சிட்டும் DVD இறுவட்டுக்கள் பிரதி செய்தும் மாணவர்களுக்கு வழங்கினோம். இச்செயற்றிட்டத்திற்கு தாங்கள் வழங்கிய 57200.00 பணத்துடன் தமிழ் மரபு அறக்கட்டளை வழங்கிய பேரிடர் நிதியில் மீதமான ரூபா 22000.00 பணத்தையும் எமது கையிருப்பு பணத்தையும் சேர்த்து மொத்தமாக ரூபா 85000.00 ற்கு மாணவர்களுக்கு செயலட்டைகள் அச்சிட்டும் DVD இறுவட்டுக்கள் பிரதி செய்தும் மாணவர்களுக்கு வழங்கினோம்.மாணவச் செல்வங்களுக்கு கல்விப் பசி தீர்க்க நிவாரணப் பணிமூலம் வயிற்றுப் பசிதீர்த்த நல்லுள்ளம் கொண்ட தங்களின் உதவி எமக்கு பேருதவியாகும்

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்

கற்றனைத் தூறும் அறிவு.
பொருள்: மணலிலே தோண்டும் கிணற்றில், தோண்டிய அளவுக்கே நீர் ஊறும்;
மாந்தருக்கும் அவரவர் முயன்று கற்றதன் அளவுக்கே அறிவும் ஊறிச்
சுரக்கும்
எனவே மேலே குறிப்பிட்ட குறளுக்கமைய இம் மாணவர்களின் அறிவு கிணற்றின் அளவினை அதிகரிக்க உங்கள் உதவும் கரங்களுக்கு நன்றிகள் பல கூற கடமைப்பட்டிருக்கும்

இவண்
(கையொப்பம்)
தலைவர்
தமிழ் பண்பாட்டு ஆய்வு மன்றம்
இலங்கை

Tamil Cultural Research Forum
Sri Lanka

இல.10, பட்டியோவிட்ட வீதி, இரத்தினபுரி, இலங்கை.
Mob: +94 766 181 522, +94 773 984 343 | Email: tamilcultural.lk@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயகச் செய்திகள் சில...

-இலங்கையில் கடந்த 6 மாத காலத்தில் 52.000 பேர் போதைப்பொருள் குற்றச்சாட்டில் கைதுசெய்யப் பட்டிருக்கிறார்கள். 30 வயதுக்கு மேற்பட்டவர்களே கூடுதலானோர். இவர்களைவிட 20 - 25 வீதம்பேர் பாடசாலை மாணவர்கள் என்பதாகும். 24.000 பேர் ஹெரோயின், 26.000 பேர் கஞ்சா வைத்திருந்தவர்களும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

-இலங்கையில் கடந்த 5 ஆண்டுகளில் போதைப்பொருள் விற்பனை மற்றும் பயன்பாடு சார்பாக 4.70.206 பேர் கைது. 40.751 கிலோ போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸ்திணைக்கள அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

-1980 - 2009 வரை இலங்கையில் காணாமல் போனோர் 60.000 - 1.00.000 பேர்வரை. உலகில் வலிந்து காணாமல்போனோர் பட்டியலில் இலங்கை முக்கிய நாடாகும். என "இலங்கை சமத்துவ அமைப்பு" தெரிவித்துள்ளது.

-யாழ் மாவட்டத்தில் இராணுவம் 2054 ஏக்கர், கடற்படை 275 ஏக்கர், விமானப்படை 647 ஏக்கர், பொலிசார் 53 ஏக்கா காணிகளைக் கையகப்படுத்தி வைத்திருப்பதாக யாழ் மாவட்ட செயலக புள்ளிவிபரம் ஒன்று தெரிவித்துள்ளது.

-கடந்த 8 மாதங்களில் இலங்கையில் விபத்துக்கள் 15.402, பாரியவிபத்துகள் 1.358, இடம்பெற்றதாகவும் 1.418 பேர் உயிரிழந்ததாகவும் 4.257 பேர் பாயமடைந்தார்கள் எனவும் பொலிசார் அறிவித்துள்ளனர்.

-நாடு முழுவதும் 28.469 ஆண், 1.585 பெண், 195 வெளிநாட்டவர்கள் என சிறைகளில் இருக்கிறார்கள் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

-ஓய்வூதிய வயதாகக் கருதப்படும் 60 வயதிற்கு மேற்பட்ட 49 உறுப்பினர்கள் இலங்கைப் பாராளுமன்றில் தற்போது பதவி வகிக்கிறார்கள்.

-நாட்டில் தினமும் 60 - 70 புதிய புற்றுநொயாளர்கள் காணப்படுவதாகவும் தினமும் 30 - 40 பேர்வரை இறக்கிறார்கள் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

-இலங்கையில் இதயம் சார்ந்த நோய்களால் தினமும் 100 பேர்வரை இறக்கிறார்கள். நாட்டின் மொத்தச் சனத்தொகையில் 26 வீதம்பேர் அதிக இரத்த அழுத்தத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-இலங்கையில் 2 மணித்திலாலத்துக்கு ஒரு குழந்தைமீது பாலியல் துஸ்பிரயோகம் இடம்பெறுவதாகவும் 1.1.2020 - 30.9.2020 வரை 6063 சிறுவர் துஸ்பிரயோக வழக்குகள் பதிவாகியிருப்பதாகவும் பிரதிப்பொலிஸ் மா அதிபர் தெரிவித்திருக்கிறார்.
-நாட்டில் மார்பகப் புற்றுநொயால் வருடம் 700பேர்வரை இறக்கிறார்கள். வருடம் 3.500 பேர்வரை மார்பகப் புற்று நோயாளர்கள் அடையாளம் காணப்படுகிறார்கள் என தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டுச் சபை குறிப்பிட்டுள்ளது.
-நாட்டில் நிலவும் பொருளாதாரம், வேலைவாய்ப்பு, வீட்டு வன்முறைகள், கடன், மனஅழுத்த நெருக்கடிகளால் 1.1.2020 - 30.9.2020 வரை 779 பேர் தற்கொலை செய்திருக்கிறார்கள்.
-இலங்கை இராணும் 71 வது வருட நிறைவைக் கொண்டாடியுள்ளது. 514 அதிகாரிகளும் 14.140 சிப்பாய்களும் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.
-இலங்கைப் பொலிஸ் வரலாற்றில் முதன்முறையாக பெண் ஒருவர் பிரதிப்பொலிஸ்மா அதிபராக நியமனம் பெற்றுள்ளார்.
-இலங்கைலுள்ள 24 மாநகர சபைகளின் தலைவர்களின் மகாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.
-இலங்கையிலுள்ள 10.162 அரச பாடசாலைகளில் 6.663 பாடசாலைகளில் மட்டும் நூலகம் இருப்பதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.
-மட்டக்களப்பு மாவட்டத்தில் 58.9 வீதமாக இருந்த தமிழர் தொகை 38.6 வீதமாகக் குறைவடைந்திருக்கின்றது. ஒரு கிழமைக்குச் சராசரியாக 18 தமிழர்கள் இனமாற்றம் செய்யப்படுகிறார்கள் என இராஜாங்க அமைச்சர் ச. வியாழேந்தின் குறிப்பிட்டுள்ளார்.

## உலகச் செய்திகள் சில...

### கொரோனாச் செய்திகள் சில..

-கொரோனா பேரனர்த்தத்தால் உலக நாடுகளில் சுமார் 120 மில்லின் சிறுவர்கள் வறுமைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். கல்வி, சுகாதாரம், பசி, பட்டினி, ஊட்டச்சத்து போன்ற வாழ்வியல் நெருக்கடிகள் அதிகரித்துள்ளதாகவும், உலக தனவந்தர்கள் நிதிஉதவி புரியும் படியும் ஐக்கியநாடுகள் சபையின் கல்வி மேம்பாட்டு நிறுவனம் அறிவித்துள்ளது.
-அதிகரித்துவரும் கொரோன நோய்த் தாக்கத்தால் 31.10.2020 வரை சுமார் 8.000 சுகாதாரப் பணியாளர்கள் இறந்திருப்பதாக உலக சுகாதார தாபனம் அறிவித்துள்ளது.
-கொரோனாத் தாக்கத்தால் உலகில் இணைய வழிக்கல்வியின்றி சுமார் 463 மில்லியன் மாணவர்கள் பாதிப்பு. பாடசாலைகள் மூடப்பட்டதால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமார் 2 பில்லியன் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லமுடியாமல் பாதிப்பு என ஐக்கியநாடுகள் சபையின் அறிக்கை குறிப்பிட்டுள்ளது.
-கொரோனா தொற்றாளர்கள் எண்ணிக்கை 2021 ஆண்டளவில் 15 கோடி மக்கள் பாதிக்கப்படுவார்கள் என உலக வங்கி எச்சரித்துள்ளது.
-கர்ப்பப் பையில் குழந்தைகள் இறக்கும் தொகை வருடம் சுமார் 22 லட்சமாகும் இந்தக் கொரோனாவின் தாக்கத்தால் இந்தவருடம் 25 - 30 லட்சமாக அதிகரிக்கும் எனவும் உலக சுகாதார நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.
ஏனைய சில செய்திகள்..
-இந்தியாவில் கடந்த ஆண்டில் 1.2 மில்லியன் மக்கள் பாம்புக்கடியால் உயிரிழந்திருக்கிறார்கள். உலகில வருடாவருடம் 81.000 -1.00.000 பேர் இதனால் இறக்கிறார்கள் எனவும் உலக சுகாதார தாபனம் தெரிவித்துள்ளது.
-வறுமை, வறட்சி, விவசாயம் பாதிப்பு போன்ற காரணங்களால் கடந்த ஆண்டில் இந்தியாவில் சுமார் 42.480 பேர் தற்கொலை செய்திருப்பதாகத் தெரியவந்துள்ளது.
-உலகின் சனத்தொகை தற்போது 770 கோடியாகக் காணப்படுகின்றது. 2050ம் ஆண்டில் 970 கோடியாகவும் 2100ம் ஆண்டில் 1100 கோடியாகவும் அதிகரிக்கும் வேளை இந்தியாவின் சனத்தொகையும் 2027ல் அதிகரித்து உலகின் முதலாவது இடத்தைப் பிடிக்கும் என உலக சனத்தொகை அமைப்பு குறிப்பிட்டுள்ளது.
-உலகில் தண்ணீர் பற்றாக்குறை காரணமாக சுமார் 400 கோடி மக்கள் பாதிப்பு. உலக மக்களில் 5 பேருக்கு 2 பேர் தண்ணீர் பற்றாக்குறையை எதிர்நோக்குகிறார்கள். உலக சனத்தொகையில் சுமார் 300 கோடிபேர் தமது வீடுகளில் குடிதண்ணீர் இல்லாமல் கஸ்டப்படுகிறார்கள் எனவும் ஐக்கியநாடுகள் சபையின் அறிக்கை தெரிவித்துள்ளது.
-உலகளவில் தற்போது 27 கோடி மக்கள் கடும் பசி, பட்டினியை எதிர்கொண்டிரருப்பதாக உலக உணவுத்திட்டம் எச்சரிக்கை விடுத்துள்ளது.
-சிரியா நாட்டில் தொடரும் உள்நாட்டுப் போரால் கடந்த 6 மாதகாலத்தில் சுமார் 46 லட்சம் சிறுவர்கள் குழந்தைகள் உணவின்றித் தவிப்பு எனவும் உதவிகள் தேவைப்படுவதாகவும் □சேவ் த சில்றன்□ அமைப்பு அறிவித்துள்ளது.
-அமெரிக்கா-கலிபோர்ணிய மாநியத்தில இந்தவருடம் ஏற்பட்ட காட்டுத்தீயால் சுமார் 40 லட்சம் காடுகள் எரிந்துள்ளன. 31 பேர் இறப்பு, நூற்றுக்கணக்கான வீடுகள் எரிந்தன 80.000 பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா கோரப்பிடியில் உலகம்...

கொரோனாவின் புள்ளிவிபரம் 20.11.2020 வரை.

| | உலகம் | யேர்மனி | இலங்கை |
|---|---|---|---|
| மொத்தமாகத் தொற்றாளர்கள | 5.56.24.562 | 8.91.525 | 18.841 |
| நோயிலிருந்து மீண்டவர்கள் | 3.57.84.056 | 5.70.961 | 12.903 |
| இறந்தவர்கள் | 13.38.100 | 13.662 | 73 |

Cases

Total ▾ Weltweit ▾

| Cases | Recovered | Deaths |
|---|---|---|
| 55,6 Mio. | 35,8 Mio. | 1,34 Mio. |

| Location | Cases ↓ | Recovered | Deaths |
|---|---|---|---|
| USA | 11,8 Mio.<br>+187.000 | - | 252.000<br>+1.962 |
| Indien | 9 Mio.<br>+45.576 | 8,43 Mio. | 132.000<br>+585 |
| Brasilien | 5,98 Mio.<br>+35.918 | 5,41 Mio. | 168.000<br>+606 |
| Frankreich | 2,09 Mio.<br>+21.150 | 148.000 | 47.127<br>+429 |
| Russland | 2,04 Mio.<br>+23.610 | 1,55 Mio. | 35.311<br>+463 |
| Spanien | 1,54 Mio.<br>+16.233 | 150.000 | 42.291<br>+252 |
| Vereinigtes Königreich | 1,45 Mio.<br>+22.915 | - | 53.775<br>+501 |
| Argentinien | 1,35 Mio.<br>+10.097 | 1,17 Mio. | 36.532<br>+185 |
| Italien | 1,31 Mio.<br>+36.176 | 499.000 | 47.870<br>+653 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் கணபதிப்பிள்ளை பத்மகுணசீலன்
தோற்றம் 21.05.1942 - மறைவு 26.10.2020
இலங்கை உயர்கல்வி அமைச்சின் உயர் அதிகாரி, பல்மொழி வித்தகர், மொழிபெயர்ப்பாளர், தமிழ்ப்பற்றாளர்

இலங்கை-நல்லூரைத் தாயகமாகக் கொண்டவரும் யேர்மனி- கீல் என்ற நகரில் வசித்து வந்தவருமான பண்பாளன் கணபதிப்பிள்ளை பத்மகுணசீலன் அவர்கள் 26.10.2020 அன்று யேர்மனியில் காலமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். இவர் ஜெயராணி அவர்களின் மனைவியும் சிறியாசாந்தி, றம்மியாசாந்தி, சந்திலியன் ஆகியோரின் அன்புத் தந்தையும் இரு பேரப்பிள்ளைகளின் பேரனுமாவர்.

இந்தப் பண்பாளனைப் பற்றிய சிறுகுறிப்பை அறியத்தருகிறோம். யாழ்ப்பாணம் - நல்லூரைப் பூர்வீகமாக் கொண்ட தந்தையாரும் தாயாரும் தொழிலின் நிமித்தம் ஹற்றன் - வட்டவளையில் வசித்தபோது இவர் 21.05.1942ம் திகதியில் பிறந்தார். இவரின் சகோதரர்கள் தற்போது அவுஸ்திரேலியாவிலும் கொழும்பிலும் வசித்து வருகிறார்கள்.

இளமைக்கல்வியையும் உயர்கல்வியையும் ஹற்றன், அநுராதபுரம், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, திருநெல்வேலி செங்குந்தா இந்துக்கல்லூரி ஆகிய இடங்களில் பயின்று தமிழ், சிங்களம், ஆங்கிலம் போன்ற மொழிகளையும் நன்கு கற்றுத் தேறி, புலமைப்பரிசில் பெற்று ரஷ்ஷியாவிலும் பட்டப்படிப்பை மேற்கொண்டிருந்தார். நாட்டுக்குத்திரும்பி வந்து அரசபதவிகளில் அமர்ந்து பல திணைக்களங்களில் சுமார் 20 வருடங்கள் கடமைபுரிந்தார். இறுதியாக அவர் உயர்கல்வி அமைச்சில் சட்ட மொழி மொழிபெயர்ப்பாளராகவும் கடமையாற்றினார். தமிழ், சிங்களம், ஆங்கிலம், ஹிந்தி, ரஷ்ஷியா, யேர்மனி-டொச் ஆகிய மொழிகளை பேச, எழுத, வாசிக்க நன்கு கற்றுக்கொண்டிருந்தார் என்பது சிறப்பாகும்.

தொடர்...47ம் பக்கத்தில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Wissen, Kultur & Literatur • கல்வி, கலை, இலக்கிய சமூக இருமாத இதழ்

# ERDE

MANN
Germany / Ausgabe 204



உலகின் கொரோனா உயிராபத்து நிறைந்த காலத்தில் எல்லோரும்
அமைதியாக நத்தார் - புதுவருடத்தைக் கொண்டாடுவோம்.
அனைவருக்கும் இனிதான நல் வாழ்த்துகள்.

வருட சந்தா ஜேர்மனி 20€
ஏனைய நாடுகள் 25€

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org